
Registered News Paper விலை ரூ. 5.00 PMG's LICENCE No. WPP - 199 / 03-05

# சுதந்திரன்

ஈழ

ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு உ0௩௫ நவம்பர்-2004 (ஐப்பசி-கார்த்திகை) புத்தகம்:17 இதழ்:12

## ✶ நல்லாயன் பிரகடனம் நல்ல அடித்தளத்தைப் போட்டுள்ளது!

## ✶✶ இந்தியாவும் நல்ல முன்மாதிரியை ஏற்படுத்திச் சென்றுள்ளது!

## முடங்கியுள்ள பேச்சுவார்த்தை தொடர

# நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை சிறீலங்கா அறிவிக்கட்டும்

### ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழக அறிக்கை

தமிழ் மக்களுக்கு இன்னது தருவோம் என்னும் நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை சிறீலங்கா அரசு உடனே அறிவிப்பதே முடங்கிக் கிடக்கும் பேச்சுவார்த்தையை மீண்டும் முன்னெடுக்கத் துணை செய்வதாகும். அதற்கான நல்ல அடித்தளத்தை அகதி மக்களின் 'நல்லாயன் பிரகடனம்' ஏற்கெனவே உருவாக்கிக் கொடுத்துள்ளது. இந்தியாவும் சிறந்த முன்மாதிரியை ஏற்படுத்திச் சென்றுள்ளது. புலிகளின் இடைக்கால அதிகார சபைத் திட்டத்தைச் சாட்டுச் சொல்லி, சமாதானத் தீர்வை சிறீலங்கா அரசு தள்ளிக் கொண்டே போவது சரியல்ல.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளது. அந்த அறிக்கை வருமாறு:

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையே தொடராமல் முடங்கிப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கப்படுவதற்குத் தடையாக இருப்பது சிறீலங்கா அரசே என்று விடுதலைப் புலிகளும், விடுதலைப்புலிகளே என்று சிறீலங்கா அரசும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கை மக்களும் சரி, சர்வதேச சமுதாயமும் சரி, இந்தக் குற்றம் இரு தரப்பாருக்கும் பொருந்தும் என்றே கருதுகின்றனர்.

அதிலும் சிறீலங்கா அரசாங்கத்திற்கே இதில் அதிகப் பொறுப்பிருக்கிறது என்று பன்னாட்டு அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஏனென்றால், முன்னர் சிறீலங்காவில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ரணில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, போர்நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துகொண்ட புலிகள், அப்பேச்சுவார்த்தையில் சிறீலங்கா அரசாங்கம் உருப்படியான திட்டங்களை முன்வைக்காததைச் சுட்டிக்காட்டியே அதிலிருந்து விலகினர்.

உடனே ரணில் சொன்னார் "புலிகள் தங்கள் தரப்பிலிருந்து அத்தகைய திட்டங்களைச் சமர்ப்பிக்கலாமே" என்று.

அதைத் தொடர்ந்தே புலிகள் தங்களுக்கு, தாங்கள் மட்டுமே பங்கு கொள்கின்ற இடைக்கால அதிகார சபை வேண்டும் என்ற ஒரு திட்டத்தை முன்வைத்தனர்.

இதற்கிடையில் குடியரசுத் தலைவர் திருமதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டதால், தேர்தல் நடந்து, அதில் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஐக்கிய தேசிக்கட்சிக் கூட்டணி தோல்வியுற, திருமதி சந்திரிகா அவர்களின் கூட்டணி சொற்ப வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்து விட்டதால், புலிகளின் இடைக்கால அதிகார சபைத் திட்டம் பரிசீலினைக்கே எடுத்துக்கொள்ளப்படாமல் போயிற்றது.

அத்திட்டம் புலிகளின் தனி ஈழ சர்வாதிகரத்தை நிலைநாட்டும் நோக்கம் கொண்டது என்று சந்திரிகா அதைப் புறக்கணித்தார்.

எனினும், போர் நிறுத்தம் நீடிக்கும், சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கி நடத்தப்படும் என்று குடியரசுத் தலைவர் என்ற முறையிலும், ஆளுங்கூட்டணித் தலைவி என்ற முறையிலும் உறுதிபட அறிவிப்புச் செய்தார் சந்திரிகா.

அக்கூட்டணியில் சந்திரிகா கட்சிக்கு அடுத்தபடியாக மக்கள் செல்வாக்குக் கொண்டதாக உள்ள ஜனதா விமுக்தி பெரமுனா, "புலிகள் ஆயுதங்களை முற்றாகக் களைந்துவிட்டு, தனி நாட்டுக் கொள்கையை அறவே கைவிட்டு, இலங்கை ஒருமைப்பாட்டில் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தும்வரை அவர்களுடன் பேச்சுவார்த்தையே நடத்தக் கூடாது" என்று சந்திரிகாவுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன், அதை "மீறி நடந்தால் அரசிலிருந்து விலகுவோம்" என்றும் மிரட்டியது.

ஆனால், "சமாதானப் பேச்சுவார்த்தையைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை" என்று (16ம் பக்கம் பார்க்க)

## ✪ மனித உரிமை ரீதியில்தான் இனப்படுகொலைக்கு ஆளான ஈழத் தமிழர்க்கு ஆதரவளித்தோம்

## ✪ இன்று தமிழரிடையிலேயே மனித உரிமை மீறல் நடக்கையில் தமிழர்கள் மௌனம் ஏன்?

## பன்னாட்டுச் சமூகம் கேட்கிறது

# நமது பதில் என்ன?



### திரு.சந்திரகாசன் சிந்தனையுரை

இலங்கையில் தமிழருக்கெதிராக சிங்களப் பேரினவாதம் இனப்படுகொலையில் ஈடுபட்டபோது மனித உரிமை அடிப்படையிலேதான் சர்வதேச சமுதாயம் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவளித்தது. இன்று அதே மனித உரிமை மீறல்கள் தமிழர் மத்தியிலேயே நடைபெறும்போது தமிழர்கள் மௌனம் சாதிப்பது ஏன்? என்று, சர்வதேச சமுதாயம் நம்மைப் பார்த்துக் கேட்கிறது. இதற்கு நாம் சொல்லும் பதில் என்ன? இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகத் தலைவர் திரு.சா.செ.சந்திரகாசன் அவர்கள், சென்னையில் நடந்த கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வினா எழுப்பி அதற்கு விடையும் கூறினார். சமீபத்தில் பல வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு மனித உரிமை அமைப்புகளையும், புலம் பெயர்ந்த தமிழ் மக்களையும் சந்தித்துத் திரும்பிய திரு. சந்திரகாசன், தமது அனுபவங்களைக் கழக நிர்வாகிகளுடன் பகிர்ந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:

நாங்கள் எடுத்த சில முடிவுகள் ஏற்பட்ட சில மாற்றங்கள் அவதானித்தவற்றை எல்லாம் பேசும்போது நிச்சயமாக. ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தினுடைய பணிகளைப் பொறுத்தவரையிலே எங்களுடைய பணிகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத் (03ம் பக்கம் பார்க்க)

"பாலின்நீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலும்நீர் கண்டமையும் மேன்மைபோல் - நூலின்நெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து" - நீதிவெண்பா

(பாலில் கலந்து நீரை நெருப்பானது நெருங்கிச் சுட பால் உடனே பொங்கிவழிந்து அந்நெருப்பினுள் புகுந்து அதை அவிக்கும். பின் நீரை மேலும் விடும்போதுதான் தன் சினம் அடங்கும். கற்ற நூலின் நெறி நிற்போரும் அப்பால்போல தம்மைச்சார்ந்தவர் துயர் பொறுக்க மாட்டார்கள் தம்மைச் சார்ந்தோரின் துன்பத்தை உயிர் கொடுத்தேனும் மாற்றி உலகத்தவர் மதித்துப் புகழுமாறு நடந்துகொள்வர்.)

# தெளிவு

## புலிப் பயங்கரவாதத்தைக் காட்டுவோர் ஈழத் தமிழருக்குக் கொடுத்ததென்ன?

ஈழ விடுதலைப்போர் என்று ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்ட புலிகள் இன்று " அது செல்வநாயகம் கேட்டது; நாங்கள் கேட்கவில்லை" என்று கூறி ஈழத்தைக் கைவிட்டு விட்டனர். ஆனால், ஆயுதத்தைக் கைவிட மறுக்கின்றார்கள். அதுமட்டுமின்றி ஈழ விடுதலைக்காக என்று தூக்கிய ஆயுதத்தை ஈழத் தமிழ்மக்களையே கொன்றுகுவிக்கப் பயன்படுத்துகின்றனர். செல்வா வழியில் வந்த சாத்வீக சக்திகளை-சனநாயக வாதிகளை இல்லாமலடிப்பதற்கே இன்று அவர்கள் ஆயுதங்களைப் பாவிக்கின்றார்கள்.

இவ்வளவு ஏன்? ஈழத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்கள் மட்டுமே. தங்களை எதிர்த்து யாரும் மூச்சுவிடக்கூடாது, தாங்கள் எது செய்தாலும் அதை ஆதரிக்கவேண்டுமே தவிர அதற்கு விளக்கம் கேட்கக் கூடாது, அதை விமர்சிக்கவும் கூடாது. விமர்சித்தால் அவர்கள் துரோகிகள், விளக்கம் கேட்டால் விரோதிகள்; எதிர்த்தால் அவர்கள் பகைவர்கள் என்பதாகவே ஏனையத் தமிழர்கள் புலிகளால் நடத்தப்படுகின்றனர்.

ஆகவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை புலிகள் போக்கு பயங்கரவாதம் என்றால் பொருந்தக் கூடியதே. ஆனால், அதைத் "தமிழ்ப் பயங்கவாதம்" என்று பெயரிட்டு சிங்களப் பேரினவாதம் புலிகளை ஒழிப்பது என்ற பெயரால், இலங்கைத் தமிழினத்தையே ஒழிக்க முயல்வதும், இழித்தும், பழித்தும் பேசுவதும் பொறுத்தமாகாது.

இன்னும் சொன்னால், புலிகளை இந்த அளவுக்குப் பயங்கரவாதிகளாக உருவாக்கியதே சிங்களப் பேரினவாதம்தான் என்றால் மிகையாகாது.

ஆம்! பங்களாதேசத்தைப்போல இந்தியா ஈழத்தைப் பெற்றுக் கொடுத்துவிடுமோ என்ற கற்பனையில் இலங்கையில் இந்தியாவின் மனிதாபிமான அமைதிப் பராமரிப்புத் தலையீட்டுக் கெதிராகப் புலிகளைத் தூண்டிவிட்டு அவர்களுக்கு ஆயுதமும், பணமும் அள்ளிக் கொடுத்து, இந்தியாவின் அமைதி முயற்சிக்கு இலங்கையில் துணை செய்தவர்களை எல்லாம் தீர்த்துக்கட்டச் செய்தது சிங்களப் பேரினவாதமல்லவா?

ஈழப் போராட்டத்தில் களத்தில் நின்ற ஆயுதம் தாங்கிய தங்களின் சக இயக்கங்களை மட்டுமின்றி ஆயுதமேந்தாத சனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட சாத்வீக வழியில் சிங்களப் பேரினவாதத்தின் தமிழருக்கெதிரான போக்குகளை எதிர்த்துவந்த சனநாயகவாதத் தமிழர் களையுமல்லவா சாவூருக்கு அனுப்பி, சிங்களப் பேரின வாதத்தின் "தமிழ்ச் செல்லப்பிள்ளைகள்" என்ற அளவுக்குப் புலிகள் செல்வாக்குப் பெற்றார்கள்!

இப்படிப் புலிகளை உபயோகித்துக்கொண்டு புலியல்லாத சனநாயகத் தமிழ் போராட்டவாதிகளை யெல்லாம் ஒன்றில் அழித்தோ அல்லது புலம் பெயரச்செய்தோ ஈழத்தமிழர் மத்தியில் இருண்ட சூழ்நிலையை உருவாக்கிவிட்டு, புலி புலி என்று சிங்களத் தலைவர்கள் புலம்பிக் கொண்டிருப்பது நியாயமல்ல.

ஏனென்றால், இலங்கைத் தமிழர்கள் எல்லாருமே புலிகள் அல்லர். புலிகளுடைய மாயையிலிருந்து தமிழர்களை விடுவிக்கவேண்டுமென்றால் இலங்கையில் தமிழினத்தின் உரிமைகளை எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி அளிக்க முன்வரவேண்டும்.

தென்பகுதியில் சிங்கள மக்கள் எப்படித் தங்கள் மொழி, கலை, பண்பாடுகளை, தனித் திறமைகளைப் பேணி வளர்க்க முழுச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்களோ? அப்படி வடக்கு கிழக்கு தமிழ்மக்களும் தங்கள் மொழி, கலை, பண்பாடுகளை, தனித் தன்மைகளைப் பேணிவளர்க்க முழுச் சுதந்திரம் இருக்கவேண்டும்.

சிங்கள மக்கள் இதற்கு உடன்படுவார்களாயின் தமிழ்மக்கள் புலிமாயையிலிருந்து வெளிவரத் தயங்கமாட்டார்கள். சிறீலங்கா என்றாலே சிங்களப் பௌத்த நாடு என்ற தோற்றத்தை வைத்துக்கொண்டு, அரச பயங்கரவாதம் மூலம் தமிழ்மக்களை அச்சுறுத்தி அடக்கி ஆளலாம் என்ற சிங்கள பேரினவாத மனப்பான்மை தான் ஆயிரம் ஆகாத குணம் இருந்தாலும் புலிகளின் பாதுகாப்பை இழந்தால் தமிழரின் தனித்தன்மை பறிக்கப்பட்டுவிடும் என்ற எண்ணத்தைத் தமிழ்மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது என்பதை உணரவேண்டும்.

ஏனெனில், இவ்வளவுக்குப் பிறகும் தமிழ்மக்களுக்கு இதையிதையெல்லாம் வழங்கிவிடுவோம் என்று சிங்களத் தரப்பிலிருந்து யாரும் சொல்லவில்லை.

அரசியல் சட்டத்தைத் திருத்தி அதை முதலில் வழங்குங்கள். அதைச் செய்யாமல் சிங்களத் தரப்பிலிருந்து வெறுமனே 'புலிப் பஜனை' செய்து கொண்டிருப்பதால், தமிழ்மக்களைத் திருப்திப்படுத்திவிட முடியாது என்பதைச் சிங்களத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

ஒரு குறளை உணர்வோம்

# ஊரார் வருத்தும் முன்பே உன்னாலானதைச் செய்துவிடு!

-: அருகோ :-

"பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து"

திருக்குறள்:1229

பரிமேலழகர்: (இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி நோயுழந்தேன்) மதிமருண்டு மாலை படர் தரும் போழ்து- இனிக் கண்டாரும் மதிமருளும் வகை மாலை வரும்பொழுது; பதிமருண்டு பைதல் உழக்கும்-இப்பதியெல்லாம் மயங்கி நோயுழக்கும் என்றவாறு.

'மதிமருள்' என்பது மதிமருண்டு எனத் திரிந்து நின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினாளாகலின் 'மாலை படர்தரும் போழ்து' என்றாள். யான் இறந்து படுவல் என்பதாம். மாலை மயங்கிவரும் போழ்து என் மதிநிலை கலங்கி நோயுழக்கும் என்று உரைப்பாருமுளர்.

மணக்குடவர்: என்மதி நிலை கலங்க மயக்கத்தை உடைத்தாகிய மாலைக்காலம் வரும்பொழுது இப்பதி யெல்லாம் மயங்கித் துன்பம் உறாநிற்கும் என்றவாறு.

மதி-மாலை

பரிபெருமாள்: என் மனன் நிலை கலங்கித் துன்பம் உறா நிற்கும். மயக்கத்தை உடைத் தாகிய மாலைப்பொழுது வருங்காலம் இப்பதி யெல்லாம் மயங்கித் துன்பம் உறாநிற்கும்.

மதி என்பதனை முன்னே கூட்டுக. மதி-மனம். அறிவில்லாதவரைப்போல் மயங்கு தல் தக்கது அன்று. நமக்கு ஆற்றியிருத்தல் கடன் என்ற தோழிக்குத் தன் குறிப்பின்றி யும் இம்மாலையைக் கண்டபொழுதே என் மனம் மயங்கும் என்று தலைமகள் கூறியது.

காளிங்கர்: தோழி! பெரும்பகல் எல்லாம் வருந்தி ஆற்றிய என் மனமானது வெண்மை யும் கருமையும் வேற்றுமை செய்யும் பகலும் இரவும்போல் அன்றி, நிறம் மயங்கும் உறுப்பிற் றாய மாலையானது இன்னணம் வந்து ஆர்க் கும் நேரத்துத் தன் பதியினுள் தணிந்து நில் லாது தடுமாறிச் சாலத் துயர் உழக்கும் என் நெஞ்சானது மற்று அதனை அறியாத நீ ஆற்றுகில்லை என்று என்னை இடித்துச் சொல் வது என்னை? என்பது பொருள் என்றவாறு.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்: மாலைப் பொழுதை நினைத்தாலுங்கூட என் அறிவு கலங்கி, இருக்கிற இடம் தடுமாறும்படி துன்பம் உண்டாகிறது.

தேவநேயப் பாவாணர்; இன்று, கண்டார் எல்லாரும் மதி மயங்கும் வகை மாலை வரும் பொழுது இந்நகர் முழுவதும் மயங்கி நோய்த் துன்புறும்.

டாக்டர் மு.வ.: அறிவு மயங்கும் படியாக மாலைப்பொழுது வந்து படரும்போது, இந்த ஊரும் மயங்கி என்னைப்போல் துன்பத்தால் வருந்தும்.

பேராசிரியர் பே.சு.கோவிந்தராசன்: அறிவு மயங்குமாறு மாலைப்பொழுது வருகின்ற போது இந்த ஊர் மக்கள் எல்லோரும் அறிவு மயங்கி என்னைப்போலவே துன்பப்பட்டு வருந்துவர்.

அருகோ: மதிமருண்டு-அறிவானது மயக்கமடைந்து; மாலை-வாழ்நாளின் பிற்பகுதி; படர்தரும்போழ்து-(இயலாமையை) படரச்செய்யும் காலத்தில்; பதி மருண்டு-(நாம் வாழும்) ஊரார் (நமக்குவந்த தள்ளாமை தங்களுக்கும் வரும் என்பதை உணராமல்) மயக்கம் கொண்டு; பைதல் உழக்கும்-(நம் முதுமையைச் சுட்டிக்காட்டி) நமக்குத் துன்பத்தை உண்டாக்கும்.

இக்குறட்பா காமத்துப்பாலில், கற்பியலில், 'பொழுதுகண்டு இரங்கல்' எனும் அதிகாரத்தின்கீழ் வைக்கப்பட்டிருப்பதால் இதைத் தலைவியின் கூற்றாகக் கொண்டு உரையாசிரியர்கள் எல்லோரும் பொருள் கூறியுள்ளனர்.

'பொழுதுகண்டிரங்கல்' எனும் இந்த அதிகாரத் தலைப்பிற்குப் பொருள் கூற வந்த-

பரிமேலழகர்: அஃதாவது மாலைப் பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகள் இரங்குதல். 'கனாமுந்துறாத வினையில்லை' என்பது பற்றிப் பகற்பொழுது ஆற்றியிருந் தாட்கு உரியதாகலின் இது கனவுநிலை யுரைத்தலின் பின் வைக்கப்பட்டது என்றும்,

மணக்குடவர்: பொழுதுகண்டிரங்கலாவது, மாலைப்பொழுது கண்டு தலைமகள் வருந்துதல். ஏனைப் பொழுதில் வருத்தம் இலரோ? எனில், பிரியப்பட்டார்க்கு எல்லாக் காலமும் வருத்த முளவாயினும், விடியலும், நண்பகலும் போலாது மாலைப்பொழுது வருத் தம் மிகுதலால் இது கூறப்பட்டது என்றும்,

பரிப்பெருமாள்: மேற்படி என்னை வருத்தம் மிகுமாறு எனில், புள்ளும் மாவும் விடியலும் நண்பகலும், தத்தம் சேக்கையினின்று நீங்கி அந்திக்காலம் வந்துசேரும். அவையிற்றைக் கண்டு நம் காதலர் நம்மை உள்ளுகின்றிலர் என்றும், மைந்தரும் மகளி ரும் விடியலும் நண்பகலும் அறத்தினும் பொருளினும் முயன்று அந்திக்காலத்தில் தம்மிற்கூடி இன்பம் நுகர்வது கண்டு யாம் இவ்வாறு நுகரப்பெறுகிலோம் என்றும் நினைத்தலான் வருத்தம் மிகும் என்க. நடுநாள் யாமத்தும் துன்பம் உறும் அன்றே அதுவும் கூற வேண்டாமோ எனின், அக்காலத்து வரும் துன்பமும் இதனின் மிகுதியின்மையின் வேறு கூறலாயினர். இது நினைந்தவர் புலம்பலின் பின் கூறற்பாலது; கனவு நிலையும் சேரச்சொல்ல வேண்டுதலின் இரண்டுசொல்லும் அவராகக் கொண்டு முன் கூற வேண் டும் என்பதால் நினைவொடு கூடிய கனவை முன்கூறி அதன்பின் கூறினார் என்று கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளனர்.



திருச்சி ஈ.ஏ.ம.க. பணிமனையில் 10.10.2004 அன்று நடைபெற்ற 3ம் கட்ட மாதர் தகைமைப்படுத்தல் மற்றும் ஆற்றலூட்டல் பயிற்சில் கலந்துகொண்ட மகளிர்.

அதிகார முறைவைப் பின் நிமித்தம் அவர்கள் இங்ஙனம் கூறியிருந்தாலும் 'பொழுது கண்டிரங்கல்' என்னும் இச்சொல்லுக்கு அவர்கள் கூறும் பொருள்

(12ம் பக்கம் பார்க்க)

# குறிக்கோளுக்கே எதிராகும் கூட்டம் பெருகலாமா?

(முதல் பக்கத் தொடர்ச்சி) துவதற்குப் போதிய நியாயங்கள் இருப்பதைக் கண்டு கொள்ளலாம். 2001ம் ஆண்டு நான் கடைசியாக ஜூலை, ஆகஸ்டு மாதத்திலே வெளிநாடு போயிருந்தேன். அங்கு நான் போனபோது அவதானித்தவைகளுக்கும், இம்முறை நான் சென்றிருந்த போது அவதானித்தவைகளுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருந்தது. அதிலே முக்கியமாக நான் அவதானித்த மனதுக்கு கவலையான ஒரு செய்தி என்னவென்றால், 2001 ஆம் ஆண்டு பொதுவாகவே ஈழத் தமிழர்களுடைய போராட்டத்திற்கு தமிழர்கள் அல்லாதவர்களுடைய ஆதரவு கணிசமாக இருந்தது. அவர்கள் பொதுவாகவே 'சிங்களரின் தமிழ் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கின்றது. அதிலே இருந்து தமிழ் மக்களை மீட்க வேண்டும்' என்ற ஒரு தெளிவான சிந்தனையை அன்று கொண்டிருந்தனர்.

## பின்னடைவு

2004ஆம் ஆண்டு நான் அங்கு சென்றிருந்தபோது தமிழர்கள் அல்லாதவர்கள் மத்தியில் இருந்த கருத்து, அமைதிக்கான ஒரு நல்ல வாய்ப்பு இருக்கின்றது. அந்த வாய்ப்பை தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கு சர்வதேச சமுதாயம் முழுமையான ஒரு வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்ற கருத்துத்தான் இருந்தது. இன்றோ தமிழர்கள் சார்பிலே பங்கு கொள்கின்றவர்கள் எடுக்கின்ற நிலைப்பாடு இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இடையூறாக இருக்கின்றது என்று ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருந்தவர்கள் கருதுகிறார்கள். இது ஒரு பின்ன டைவு என்று எனக்குப் படுகின்றது.

அடுத்து நான் அவதானித்த ஒரு விடயம் என்னவென்றால் சென்ற தடவை சென்ற போது ஒரு சிலர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் அவர்கள் முக்கியமான அமைப்புகளைப் கைப்பற்றிக் கொண்டும் அவற்றுக்குப் பொறுப்பாகவும் இருந்தார்கள். மிகப் பெரும்பாலானவர்கள் அமைதியாக எதிலும் கலந்து கொள்ளாமல் இருந்தார்கள். ஆனால் அவர்கள் வன்முறையை விரும்பவில்லை. அதனால், விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும், வேறு காரணங்களுக்காகப் போராட்டத்திற்கே எதிர்ப்பாகவும் அவர்கள் இருந்தார்கள்.

## ஒரு சார்புக் கருத்து

இம்முறை சென்றபோது எல்லாமும் மாற்றம் கண்டு இருந்தது. கணிசமான தமிழர்கள் இந்தப் போர் நிறுத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர்கள் இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறார்கள். இலங்கைக்கு அவர்களை அழைத்துச் சென்றவர்கள் பெரும்பாலும் இயக்கத்தினர். அவர்களுடைய அமைப்புகள் அந்தந்த நாடுகளிலே இருந்த அமைப்புகள் மூலமாக இவர்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு சென்று வந்தவர்கள் ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்து வந்தனர். அதாவது, விடுதலைப்புலிகளின் கட்டமைப்பு நன்றாக இருக்கின்றது. அந்தக் கட்டமைப்புக்கு ஆதரவாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது அவர்கள் எடுக்கின்ற முயற்சிக்கு உதவினால் என்ன என்றவொரு கருத்து இருந்தது.




ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழக ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவருடன் முனைவரும், பரமும் வீற்றிருக்க கழகச் செயலாளர் ச.நடேசலிங்கம் அறிக்கை சமர்ப்பிக்கிறார்.

இதற்கு நேர்மாறாக தமிழர்கள் அல்லாதவர்களுடைய கருத்து, தமிழர்கள் மத்தியிலே மனித உரிமை மீறல்களைப் பற்றியான தகவல்கள் அறிந்த குழுவினர் எதிரிடையான கருத்துக் கொண்டிருந்தனர். மற்ற இயக்கங்களுடைய ஆதரவாளர்களுக்கும் அவர்களுடைய கருத்துத்தான்.

எனினும் தமிழர்களில் கணிசமானவர்கள் "ஏதோ இவர்கள் செய்கிறார்கள் இவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள்" என்றுகூறி பிரச்சினை முடிந்துவிட்டது என்று விலகிச் செல்கின்ற தமிழர்களும் கணிசமாக இருக்கிறார்கள்.

## விரக்தி நிலையினர்

மற்ற இயக்கங்களைப் பற்றி விடுதலைப் புலிகள் சொன்ன கருத்துக்களை வைத்து மற்ற இயக்கங்கள் எல்லாம் அரசோடு இணைந்து ஒரு காலத்திலே செயற்பட்டு இராணுவத்தோடு செயற்பட்ட காரணத்தினாலே அவர்களைப் புறக்கணிக்கின்றார்கள். இதற்கு எங்களுடைய நிலைப்பாடு சற்று வித்தியாசமானது. எங்களைப் பொறுத்தவரையிலே. இந்தப் போராட்டத்தினுடைய ஆரம்பக்கட்டத்திலே ஈடுபட்டவர்கள். தொடர்ந்து அதிலே ஈடுபட்டு ஏதோ செய்து கொண்டிருக்கின்றோம் என்ற காரணத்தினாலே எங்களுடைய கருத்துக்களைக் கேட்கின்றார்கள். ஆனால், எங்களிடம் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் "அவர்களுடன் இணைந்து செயற்படுங்களேன்" என்பதாகும்.

இனி இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது என்று சொன்ன பல தமிழர்களைச் சந்தித்துப் பேசினால், அவர்களுடைய எண்ணம் "எத்தனைக் காலமாக இதனை நீட்டித்துக் கொண்டு போவது? ஆர்வம் குன்றிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறது. உலகத்திலே இருந்த ஆதரவு இழக்கின்ற நிலை இருக்கின்றது." இப்படியாக அவர்களுடைய கருத்து உள்ளது. எவ்வளவோ தூரம் பின்னோக்கிப் போய்விட்டது என்ற ஒரு அர்த்தம் தான் அதில் எனக்குப்பட்டது.

## மாட்டுப்பட்டுப் போனார்கள்

இதைவிட அமைப்புகள் என்று சொல்லுகின்ற போது அங்கிருக்கிற அமைப்புகள் எல்லாவற்றையுமே பெரும்பாலானவற்றை இயக்கமே தங்களுக்கு ஆதரவானர்களைக் முன்நிறுத்தி அவற்றைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. கைப்பற்றிக் கொண்டது மட்டுமல்லாமல் அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால் யாரும் அந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதாக இருந்தால் கண்மூடித்தனமாக விடுதலைப்புலிகளை ஆதரித்தால்தான் அவர்களுக்கு முக்கித்துவம் கொடுத்து வருகின்றார்கள். இதிலே இந்தியாவிலே இருந்து செல்கின்ற இந்தியத் தமிழர்களும் மாட்டுப்பட்டுப் போனார்கள். இதனாலே அங்கு செல்கின்ற பலர் ஒரு வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்றால் விடுதலைப்புலிகளுக்குச் சாதகமாக பேச வேண்டிய ஒரு நிலை.

இதோ ஒரு முக்கியமான ஒரு நிகழ்வு. எங்களைப் பாதிக்கின்ற ஒரு நிகழ்வு. எங்களுக்கு கணினிப் பயிற்சி வழங்கி வந்த அமைப்பு டி.என்.எப். என்று சொல்லப்படுகின்ற தமிழ்நாடு அறக்கட்டளை (Tamil Nadu Foundation). இந்த அறக்கட்டளை சென்ற ஆண்டு 'பெட்னா' என்று சொல்லப்படுகின்ற அனைத்து தமிழ் அமைப்புகளுடைய கூட்டுச் சேர்க்கையிலே சேர்ந்து தங்களுடைய விழாவை நடத்தினார்கள். ஆனால், இயக்கமோ விழாவினை முழுக்க முழுக்க இயக்கச் சார்பாக நடத்தியதைக் கண்டு இந்த முறை அவர்கள் அதிலே பங்கு கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் இந்த மாதிரியான பிரச்சினைகளில் தலை போடாமல் தமிழ்நாட்டிலே இருந்து அமெரிக்காவுக்குச் சென்று நல்ல நிலையில் இருப்பவர்கள் தாங்கள் பிறந்த மண்ணிற்கு ஏதாவது நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று ஒரு நல்ல சிந்தனையுள்ளவர்கள். இவர்களுக்கு அரசியல் பிடிக்கவில்லை.

எனவே பெட்னாவுடன் இணையாது இம்முறை தனியாக தங்கள் நிகழ்ச்சியை நடத்தினார்கள். இவர்கள் தனியாக நடத்த முற்பட்டவுடன் இந்த 'பெட்னா' என்ற அமைப்போடு சேர்ந்த எங்களுடைய ஈழத்தமிழர்கள் எல்லோரும் அவர்களைப் புறக்கணித்து அவர்களுடைய நிகழ்ச்சிக்கு ஆட்கள் செல்லாதபடி பெரிய ஒரு தடையை நிகழ்த்த முற்பட்டார்கள். ஆனால் நிகழ்ச்சிக்கு வர அழைக்கப்பட்டவர் கவிஞர் வைரமுத்து. கவிஞர் வைரமுத்துவுக்கு நல்ல பெயர் இருக்கின்றது. அங்கு நல்ல ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். இந்த முரண்பாட்டின் காரணத்தால் அங்கு பெரிய அளவில் மனக் குழப்பமே ஏற்பட்டது. இதனுடைய தாக்கம் எப்படியென்றால் இந்தியத் தமிழருக்கும்-இலங்கைத் தமிழர்களுக்குமிடையே ஒரு பெரிய விரிசல் ஏற்பட்டிருக்கின்றது.

## கோயில்கள் பிடிப்புப்படலம்


இக்குழப்ப நிலை காரணமாக விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டுவது சிரமமாக இருக்கின்றது. போர் போர் என்று சொல்லி நிதி திரட்டியாகிவிட்டது. இனிமேல் அப்படித் திரட்டுவது சங்கடம் என்று சொல்லி, ஒவ்வொரு நகரத்திலும் இருக்கின்ற கோயில்களை அவர்கள் கைப்பற்றுகின்றார்கள். பழையவர்கள் ருத்ராட்ச மாலை போட்டவர்கள் தான் அந்தக் கோவில்களைக் கட்டியிருக்கிறார்கள். அவர்களை அடித்துக் கலைத்து அவர்களை வெளியே போட்டுவிட்டு தங்களுடைய ஆட்களைப் போட்டுக் கோயில்களைப் பிடித்துவிட்டார்கள். பொது அமைப்புகளைப் பிடித்த மாதிரி கோயில்களைப் பிடித்திருக்கிறார்கள். இதனால் என்ன நடக்கின்றது என்றால் கோயில்களுடைய வருமானம் எங்கு செல்கின்றது என்ற ஒரு கேள்வி எழுந்துள்ளது.

ஜேர்மன் நாட்டிலே இரண்டு நகரங்களுக்குச் சென்றிருந்தேன். ஒன்று பிராங்பேர்ட் அடுத்தது ஸ்டுர்ட்கார்ட் அங்கும் இந்தச் சண்டைதான். அதாவது முன்பு கோயில்களை அமைத்தவர்களுடன் மோதி இவர்கள் அந்த அமைப்பைப் பிடிக்கப் பார்த்தார்கள். அமைப்பைப் பிடிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட ஒருவர் என்னிடம் நடந்த விடயத்தைச் சொன்னார். தான் ஒரு கராத்தே மாஸ்டர் என்று தன்னை அழைத்துச் சென்றார்களாம். தான் கராத்தே மாஸ்டராக இருந்தாலும் இப்படியாக கோயிலைக் கட்டியவனை அடிக்க விரும்பவில்லை. நான் வெளியேறி வந்துவிட்டேன். அதனால் அந்த முயற்சி பலிக்கவில்லை. எனவே இவர்கள் இன்னொரு கோயிலைக் கட்டி அங்கிருக்கின்ற ஈழத் தமிழர்கள் எல்லோரையும் அந்தக் கோயிலுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள். இதனால் ஈழத் தமிழர் சமுதாயம் பிரிந்தது. இரண்டு கோவில்கள், குறைவானவர்கள் பழைய கோவிலுக்கும், கூடியவர்கள் புதிய கோவிலுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

புதிய கோவிலுக்குப் போன ஒருவரைச் சந்தித்தேன். ஏன் புதிய கோயிலுக்குப் போனீர்கள் என்று கேட்டேன். அவர் சொன்னார் ஊரில் தனக்கொரு காணி இருக்கின்றது. இவர்களுடைய கோவிலுக்குப் போகாவிட்டால் என்னுடைய காணியை எடுக்க விடமாட்டார்கள். அதனால் தான் அந்தக் கோயிலுக்குப் போனேன் என்றார். கடவுளிடம் நம்பிக்கையில்லையா? என்று கேட்டேன் அதற்கு அவர் பதில் சொல்லவில்லை.

## வருந்தத்தக்க சூழல்

பிராங்பேர்ட்டில் இன்னொரு பிரச்சினை நடைபெற்றது. பிராங்பேர்ட்டில் அந்தக் கோயிலைக் கட்டியவர்கள் ஒரு நல்லக் கட்டமைப்பாக இருந்தார்கள். எனவே இயக்கம் அதை எடுப்பதற்காக வன்முறையைப் பாவித்தபோது கோயில் நிர்வாகிகள் அதை எதிர்த்துத் தக்கவைத்துக் கொண்டார்கள். இயக்க ஆதரவாளர்கள் புதுக்கோயிலைக் கட்டி (07ம் பக்கம் பார்க்க)



ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினர்.



கூட்டத்தில் கலந்துகொண்ட இன்னொரு பகுதியினர்.

# இலங்கைச் செய்திகள்

## "அகதிகளை திருப்பி அனுப்பாதீர்"
### மேலை நாடுகளுக்கு -ஜயலத் கோரிக்கை

இலங்கையில் இன்னும் பாதுகாப்பான, அமைதியான சூழல் காணப்படவில்லை. தற்போதைய அரசாங்கம் சமாதானம் தொடர்பான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதில் இன்னமும் போதிய இணக்கப் பாட்டுக்குவரவில்லை. எனவே ஐரோப்பா மற்றும் தென் இந்தியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி எம்.பி.யும், முன்னாள் அமைச்சருமான ஜயலத் ஜயவர்த்தன சம்பந்தப்பட்டோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிவாரண மனித உரிமைகள் சங்கத்தின் தலைவரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஜெனீவாவில் வைத்து ஐ.நா.அமைப்பின் கீழ் இயங்கும் அனைத்து அமைப்புகளினதும் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது யு.என்.எச்.சி.ஆர்-இன் தலைமையகத்தில் அகதிகள் இணை உயர் ஸ்தானிகர் கமல் முர் ஜானியையும் ஆசியக் கண்ட பணிப்பாளர் ஜெனட்லிம் அம்மையாரையும் சந்தித்த ஜயலத் ஜயவர்த்தன, தற்போதைய இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான பேச்சுக்கள் தொடர்பாக தமக்கு சந்தேகம் எழுந்துள்ளதை சுட்டிக்காட்டி ஐரோப்பிய நாடுகளிலும், தென் இந்தியாவிலும் வசிக்கும் ஈழ அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## புலிகளுக்கு எதிராக புதிய தமிழர் முன்னணி!

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன்பு வெளியேறிய புலிகளின் கிழக்குத் தளபதி கருணா "தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள்" என்ற அரசியல் கட்சியை பதிவு செய்துள்ளதாக இலங்கை தேர்தல் ஆணையம் கடந்த 14.10.2004 அன்று அறிவிப்பு செய்தது.

இந்நிலையில் பரந்தன் ராஜன் என அழைக்கப்படும் ஞான சேகரன் தலைமையிலான ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் ( ஈ.என்.டி.எல்.எப்), கருணா தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பும் இணைந்து விடுதலை புலிகளிடம் இருந்து ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கவும், தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடவும் என தமிழீழ இயக்க விடுதலை முன்னணி என்ற குடை அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழீழ இயக்க முன்னணியின் சார்பில் கருணாவும்-பரந்தன் ராஜனும் கூட்டாகக் கையொப்பமிட்டு 15.10.2004 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்:

"தமிழ் மக்களின் விடுதலையில் நம்பிக்கையுள்ள அனைத்து நல்ல சக்திகளும் எங்களுடன் இணைந்து ஒரு குடையின்கீழ் செயல்பட முன்வருமாறு அழைக்கின்றோம். கடந்த கால கசப்பான உணர்வுகளையும், வேற்றுமைகளையும் மறந்து தமிழ் பேசும் மக்கள் எங்களுடன் இணைந்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முன் வரவேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்" என கருணாவும்-ராஜனும் கோரியுள்ளனர்.


## புலிகளின் அரசியல் கொலைகளை நியாயப்படுத்த முடியாது: நோர்வே தூதர்

''இலங்கை இனப் பிரச்சினையில் மிகுந்த ஆர்வமுள்ள நாடு இந்தியா. அதுமட்டுமல்லாமல், ஆசிய பிராந்திய வல்லரசாகவும் இந்தியா விளங்குகிறது. மேலும் இந்திய - நோர்வே உறவுகள் வலுவானவையாகவும் நீடித்தவையாகவும் உள்ள நிலையில் நோர்வே அமைச்சர்கள் பலரும் இந்தியாவுக்கு அடிக்கடி சென்று இலங்கை நிலைமையை விளக்கி வருகின்றனர்' என 11.10.2004 அன்று கொழும்பில் தமிழ்த்தேசிய நாளிதழ்களின் ஆசிரியர்கள் சந்திப்பின்போது இலங்கைக்கான நோர்வே தூதர் ஹென்ஸ் பிரட்ஸ்கார் தெரிவித்தார்.

இறுதிச் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலவரம் என்ன எனக் கேட்கப்பட்டதற்கு 'சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் ஓர் மந்த நிலையே காணப்படுகிறது. அவை உடன் ஆரம்பிக்கும் அறிகுறியோ, திருப்பு முனையோ தெரியவில்லை.

இவை எவ்வாறு இருந்தபோதிலும் புலிகளால் நிகழ்த்தப்படுவதாகக் கூறப்படுப்படும் அரசியல் படுகொலைகள் உடன் நிறுத்தப்படவேண்டும். இதனால் தமிழ் மக்களே பலியாகும் கொடுமை நடக்கிறது. இதனை நியாயப்படுத்துவது இயலாத காரியம்' எனப் பதிலளித்தார் இலங்கைக்கான நோர்வே தூதர் ஹென்ஸ் பிரட்ஸ்கார்.

## பரந்த மனமே சிறந்த தலைமைப் பண்பு
### சந்திரிகாமனந்திறப்பு



தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை கருத்திற் கொண்டால் ஒரு நாட்டிற்கு தலைமை வகிக்க முடியாது. தலைமை பரந்த தன்மையுடன் செயல்படவேண்டும். எமது தனிப்பட்ட தேவைகளுக்காக நாம் இந்நாட்டை நிர்வகிக்க முடியாது. இது சிறந்த தலைமைத்துவத்திற்கான பண்பும் அல்ல என கம்பஹாவில் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 'ஜே.வி.பி.' எனக்குச் செய்தவைகளை நான் கருத்திற் கொண்டிருந்தால் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருக்கவே முடியாது. அதே போல் பிரபாகரன் எனக்குச் செய்தவற்றை கணக்கில் எடுத்தால் அவரின் முகத்தையே பார்க்க முடியுமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

## கருணா ஆதரவு எம்.பி. சுட்டுக்கொலை

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கருணா ஆதரவு எம்.பி.யான கிங்சிலி ராஜநாயகம் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடும் நடவடிக்கைகளாலும் வற்புறுத்தலாலும் தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தது பலரும் அறிந்ததே.

சமீபத்தில் கருணா புதிய அரசியல் கட்சியை பதிவு செய்துவிட்ட நிலையில் இனிமேல் நடக்கும் தேர்தல்களில் கருணா கட்சிசார்பில் கிங்ஸ்சிலி ராஜநாயகம் போட்டியிட்டு வெற்றிபெற வாய்ப்புள்ள நிலையினை உணர்ந்துள்ள பிரபாகரன் தலைமையிலான புலிகள் 19.10.2004 அன்று மட்டு மாவட்ட மக்களின் விருப்பு வாக்குகளால் தேந்தெடுக்கப்பட்ட திரு.கிங்ஸ்சிலி ராஜநாயகத்தை மட்டக்களப்பில் உள்ள இருதயபுரத்தில் வைத்துச் சுட்டுக்கொன்றனர். இவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவராக இருந்து யுத்த காலத்தில் மக்களுக்கான நிவாரணப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொய்வுற்ற பேச்சுத் தொடர உதவுங்கள்:
## மல்வத்த மகாநாயக்கரிடம் தமிழ் எம்.பி.க்கள் கோரிக்கை

இலங்கையில் வரலாற்றுத் திருப்பமாக இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கோரி பௌத்த பீடாதிபதி ஒருவரிடம் தமிழ் எம்.பி.க்கள் கூட்டமைப்பு நேரில் கோரிக்கை வைத்தது. கடந்த 11.09.2004 அன்று புலிகளின் ஆதரிவில் செயல்படும் தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்களான இரா.சம்பந்தன், சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் கே.சிவாஜிலிங்கம், ச.கனகரத்தினம், சிவநாதன் கிசோர், வினோகரதலிங்கம், கனகசபை ஆகியோர் அடங்கிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு கண்டியிலுள்ள மல்வத்த பௌத்த பீடத்தின் பீடாதிபதியான அதி.வண.திகப்பட்டுவாவ சித்தார்த்த சிறி சுமங்கல தேரரைச் சந்தித்து அரசு சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க அழுத்தம் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தது.

பல்வேறு பௌத்த அமைப்புக்களினதும், பிக்குமாரினதும் கடும் எதிர்ப்பையும் மீறி தமிழ்க் கூட்டமைப்பினரைச் சந்தித்த மல்வத்த மகாநாயக்கர் "நாட்டின் இரு பிரதான கட்சிகளும் ஐக்கியப்பட்டு செயல்பட்டால் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இலகுவாகும். எனவே அரசும்-எதிர்க்கட்சியும் ஐக்கியப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இதுபோலவே வடகிழக்கில் இன்று நடைபெறும் அனைத்தையும் நாம் நன்கு அறிவோம். அவை எதுவும் எம்மால் நடைபெறவில்லை. அதைப்போலவே தலதா மாளிகை-அனுராதபுர மகாபோதி உட்பட தெற்கில் நடந்த தாக்குதல்களுக்கும் நாம் காரணமல்ல.

இன்று டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர்கள் உட்பட பலதரப்புத் தமிழர்களும் கொல்லப்படுகின்றனர். இவ்வாறான செயல்கள் ஏற்புடையவை அல்ல. அவை வருந்தத்தக்கவை. எனவே கடந்த கால சம்வங்கள் அனைத்தையும் மறந்துவிட்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்" என தமிழ் கூட்டமைப்பினருக்கு ஆலோசனை கூறினார்.

## ஐ.நா.வின் சமாதானப்படையில் இலங்கை இராணுவம்

ஹெயிட்டி நாட்டின் சமாதான மற்றும் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐ.நா.வின் சமாதானப் படையில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ளது.

இதன்கீழ் 48 உயர் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட 750பேர் அடங்கிய இலங்கை இராணுவத்தின் நன்கு பயிற்றப்பட்ட இராணுவ அணி ஒன்று முதற்கட்டமாக கொழும்பிலிருந்து ஹெயிட்டி நாட்டுக்கு பயணமாகியுள்ளது.

## நிலக்கண்ணி தடுப்பு உடன்படிக்கையில் அரசும்-புலிகளும் கைச்சாத்திட வேண்டும்
### அஸ்ஸஜி தேரர் அறிவுரை

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் நிலக்கண்ணி வெடிகளைப் பயன்படுத்துவதை முற்றாகக் கைவிடுவது தொடர்பாக இருதரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும் என்று இலங்கை நிலக்கண்ணிவெடி எதிர்ப்பு இயக்கம் தொடர்ந்தும் வலியுறுத்தும் என்கிறார் அவ்வமைப்பின் பேச்சாளார் வண.மாதம்பாகே அஸ்ஸஜி தேரர்.

நிலக்கண்ணிகளை ஒழிக்கும் "ஒட்டாவா உடன்படிக்கையில்" இலங்கை அரசு இதுவரை கையொப்பம் இடாத நிலையையும் தீவிரவாத இயக்கங்களின் நிலக்கண்ணி வெடி பாவனையையும் தடுக்கும் "ஜெனீவாகோல்" உடன்படிக்கையில் கையொப்பமிட மறுத்து இரண்டு ஆண்டுகளாக மௌனம் காத்துவரும் விடுதலைப் புலிகள் செயலையும் கண்டித்து கவலை தெரிவிக்கும் மாதம்பாகே தேரர் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இலங்கையில் நிலக்கண்ணி வெடிப் பாவனையை முற்றாகத் தடுக்க இருதரப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்போம் என்கிறார் உறுதியாக.

## இலங்கையில் தேசிய அடையாள அட்டை இல்லாதோர் 31 சதவீதத்தினர்

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 38 லட்சம்பேர் இதுவரை தேசிய அடையாள அட்டை இல்லாமல் உள்ளனர் என்கிறது தேர்தல் ஆணையம்.

மொத்த வாக்காளர்களில் 69 சதத்தினர் மாத்திரமே அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளனர். வாக்களார் பதவின்போது தேசிய அடையாள அட்டை விபரம் குறிப்பிட்டுளோர் 90,77,430 பேர் மட்டுமே. ஆனால் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாக்காளர் எண்ணிக்கை 1,28,99,032 பேர் ஆகும்.

# பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு

## சென்னை இலங்கைத் துணைத் தூதரக நிகழ்வில் உரைகள்



இலங்கையிலிருந்து வந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் சுதர்சன் செனிவரத்தின அவர்கள் 25.09.2004 அன்று இலங்கைத் துணைத்தூதுவர் அலுவலகத்தில் புதை பொருள் ஆராய்ச்சி தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நடத்தினார். இக்கருத்தரங்கில் இலங்கைப் பட்டதாரிகள் 20 பேர் கலந்துகொண்டார்கள். இலங்கைத் துணைத்தூதுவர் மேன்மை தங்கிய சுமித் நாகந்தல அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.


பேராசிரியர் சுதர்சன் செனிவரத்தின பேசும்போது புதை பொருள் ஆராய்ச்சி செய்பவர்கள் பக்கச்சார்பு இல்லாமல் நேர்மையாக உள்ளதை உள்ளபடிச் சொல்லவேண்டும். சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. ஆய்வு செய்யும்போது எதிர்பாராத நிகழ்வுகள் இடம்பெறலாம். பலருக்கு அதிர்ச்சியையும் ஏற்படுத்தலாம். நாம் அதற்குப் பயப்படக்கூடாது.

அகதிகளாக வந்த நீங்கள் பட்டதாரிப் படிப்பை நிறைவு செய்தமை ஒரு சாதனைதான் என்றார். மேலும் அவர் பேசும்போது உங்கள் படிப்பை மேலும் உயர்த்திக் கொள்ள முயலுங்கள். உங்கள் மேற்படிப்புகளை தொடர பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற ஒழுங்குகள் செய்துத்தரலாம் என்றும் புதைப்பொருள் ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டவர்கள் எமது இலாகாவில் சேர்ந்து கொள்ள ஆவன செய்து தரலாம் என்றும் சொன்னார்.

துணைத்தூதுவர் பேசும்போது நாம் எங்கு சென்றாலும், எந்தப் பட்டத்தைப் பெற்றாலும் ஆங்கில மொழி அறிவு மிகவும் அவசியம். ஆகவே நீங்கள் ஆங்கில மொழியை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் இவற்றை உங்களுக்குக் கூறுவது, எங்களுடைய நன்மைக்கோ அல்லது இதனால் எந்தப்பயனையும் பெறுவதற்காகவோ அல்ல. உங்களுக்கு எங்களால் என்ன செய்ய முடியுமோ? அவற்றை விரைவாகச் செய்து தருவதற்காகவேதான் என்று கூறிக் கருத்தரங்கை நிறை செய்துவைத்தார்.

# புதுயுகம் படைக்க எழுந்தது மாணவர்கள் அணி

## திருச்சி மண்டல முகாம் அகதி மாணவர்கள் சந்திப்பு





திருச்சி மண்டல ஈழ ஏதிலி மாண வர்களின் எதிர்காலம் குறித்த கலந்துரையாடலில் அனைத்து முகாம்களிலிருந்தும் வந்த ஏதிலியர் மாணவர்களின் சந்திப்பு 10.10.04 அன்று நடைபெற்றது. தம் ஆற்றல்மிகு கனவுகளையும் திட்டங்களையும் சக மாணவர்களுடன் மனம் விட்டு கலந்துரையாடினர். தாய் நாட்டின் சீரழிவைத் தடுப்பதற்கு நாம் முன் வரவேண்டும்.

இங்கு பயிலும் மாணவர்கள் ஒழுக்கத்தைப் பேணி உதாரண குணமுடையவர்களாக தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், பட்டப்படிப்பை நிலுவையின்றி நிறைவு செய்தல் வேண்டும் என்றும், நாளை ஈழத்தைக் கட்டியெழுப்பிட வேண்டியவர்கள் நாங்களே. அதற்கு தகுதியானவர்களாக நாம் எம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் உணர்வு பொங்க கலந்துரையாடினர்.

இன்றைய ஈழத்தில் அமைதியும் இல்லை போரும் இல்லை. எரிமலைபோல் அடங்கியுள்ளது. எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் நாம் தாய் நாடு செல்வது யோசிக்கவேண்டும். மாணவர்களாகிய நாம் எமது சமுதாயத்தின் முதுகெலும்பு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அரும்பெரும் காரியங்கள் சாதித்திட முடியும் என்ற தன்னம்பிக்கை எம்மிடம் உறதியுடன் இருக்குமேயானால் நாம் நிச்சயம் வாழ்வினை வெற்றி கொள்ள முடியும்.

கல்வியை அடையும் பாதை கரடு முரடாகவே இருக்கும். எம் கடின உழைப்பும் தளரா மன உறுதியும் நிச்சயம் எமக்கு வெற்றியைத் தரும். தேடுதல் என்பது ஒவ்வொரு மாணவரிடமும் இருக்க வேண்டும். எம்மைப் பற்றி எம் எதிர்காலம் பற்றி சிந்திக்காமல் இருந்த எம்மை இன்று ஒருங்கிணைத்துச் சிந்திக்க வைத்துள்ளனர்.

புதுயுகம் படைத்திட போர் வாளாக மாறிட எம் மாணவ மாணவிகள் அனைவரும் சங்கல்பம் செய்வோம். ஒன்றிணைந்து செயல்படுவோம் என்றனர். எம் சமூகத்திற்கு வழிகாட்டிகளாக வளர வேண்டிய நாங்கள் மற்றவர்களை நேசிக்கவும் புரிந்து கொள்ளவும் முயல்வோம். மனித நேயம் உள்ளவர்களாக உருவாகுவோம் எனவும், வெற்றி இனி நமதே என ஆர்ப்பரித்து நின்ற மாணவச் செல்வங்களின் விழிப்புணர்வும், நாட்டுப் பற்றும் எம்மை மெய்சிலிர்த்திடச் செய்தது.

தகவல்; க. பத்மநாதன்- திருச்சி.

### தொட்டு விடும் தூரம்

பெண்ணே! உன்னை நீயே
எத்தனை நாள் சிறையில்
அடைத்து வைப்பாய்?
உடனடியாக உனக்கு நீயே
விடுதலை சாசனம் எழுது
கல்விதனைக் கண்ணாய்ப்
போற்று! கைத்தொழில் பல
கற்றிடு! சுயதொழில் செய்து
சமுதாய ஏணியில் ஏறு
வானமும் தொட்டு விடும்
தூரமே!

என் . சோபா
தோப்புக்கொல்லை.

# திருச்சி மண்டல தையல் மேலதிக பயிற்சி நிறைவு விழா

கடந்த 30.08.2004 அன்று 6மணிக்கு திருச்சி பணிமனையில் 5 மாத காலமாக மேலதிக தையல் பயிற்சியினை பயின்ற ஒன்பது மாணவிகள் தாங்கள் பயிற்சியினை நிறைவு செய்ததினைக் கொண்டாடும் விழாவிற்கு தையல் மையத்தினைச் சேர்ந்தோரும், செயற்கை வைரக்கல் பட்டம் தீட்டுவோரும். மண்டலப் பொருப்பாளர், திருச்சி மண்டலத்தில் பணிசெய்யும் தொண்டர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பித்தனர்.



இவ்விழாவில் மாதர் தகைமைப்படுத்தல் பகுதிப் பொறுப்பாளர் பயிற்சி முடித்த மாணவிகளை வாழ்த்தி அவர்கள் தொடர்ந்து முகாம் மத்தியில் அவர்கள் இங்கு பெற்ற தகைமைகளை தக்கவைத்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்று தன் இடம் சேர்ந்தார்.

இதையடுத்து மண்டலப்பொறுப்பாளர் சிறப்புரை ஆற்றினார். அவர் தம் உரையில் பெண்களின் பங்கு சமூகத்திற்கு எவ்வளவு தேவை என்றம் இன்றைய போட்டி உலகில் பெண்களுக்கு தொழில் பயிற்சி எவ்வளவு மூக்கியம் என்பதையும் பெண்களுக்கு ஏன் தொழில் தேவை என்பதையும் அனைவரும் புரியும்படி கூறினார். தொடர்ந்து முகாம் சூழலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் எப்படி தங்களைத் தகைமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என் றும், இங்கு பெற்ற பயிற்சியின் பலனை தொடர்ந்து வளர்த்து உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் வாழ்விலும் முன்னேற வே டும் என்றார்.

தொடர்ந்து இங்கு அவர்கள் பயிலும் காலத்தில் அவர்களிடம் இருக்கும் தனித் திறமைகளையும் கோடிட்டுக் காட்டி மேலும் அவர்களுக்கு தன்னம்பிக்கை யூட்டியதோடு வாழ்வில் நல்லொழுக்கத்துடன் கூடிய முன்னேற்றம் அடைய வேண்டுமென வாழ்த்திச் சென்றார்.

இதனைத் தொடர்ந்து மண்டலத்தின் தையல் மைய ஆசிரியையாக தன் சேவையினை செய்துவரும் திருமதி வசுந்தராதேவி அவர்கள் தன் உரையைத் தொடர்ந்தார். தையல் தொழில் என்பது எப்பொழுதும் தனித்துவமானது. யாரும் எதுவும் குறை கூற முடியாத புனிதமான தொழில். நீங்கள் இங்கு பெற்ற பயிற்சியினை இத்துடன் நிறுத்திவிடாமல் தொடர்ந்தும் நீங்கள் நிறைவு காண வேண்டும். விடாமுயற்சியுடன் தொடர்ந்தும் நீங்கள் செயல்படடால் நிச்சயமாக என்னைவிட உங்களால் தைக்க முடியும் என்றார். நீங்கள் ஒவ்வொருவரும் மிகவும் திறமையுடையவர்கள் நான் எதிர் பார்த்ததைவிட நீங்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்றுள்ளீர்கள். நான் நீங்கள் எங்கிருந்தாலும் உங்களைப்பற்றி அறிந்து கொண்டே இருப்பேன். நீங்கள் வாழ்வில் பல சிறப்புகள் பெற்று, முகாம் வாழ் பெண்களுக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டி வாழ்வில் வெற்றிபெற என் வாழ்த்துக்கள் என்றும் உண்டு என்று வாழ்த்திச் சென்றார்.

இதன் பின் பயிற்சி பெற்ற மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நடனம், கவிதை, பாட்டு, நாடகம் போன்றவை இந்நிகழ்வில் இடம் பெற்றன. வயிறு குலுங்கச் சிரிக்கும் வண்ணம் நிகழ்வினை நடத்தியமை எல்லோரையும் மகிழ வைத்தது. இந்நிகழ்வினைத் தொகுத்தளித்த மாணவி தனலெட்சுமி மிக அருமையாக தொகுத்தளித்தார். இறுதியாக அவர்கள் தம் நன்றியுரையில் பல முகாம்களில் இருந்து இனம் கண்டு எம் போன்ற மாணவிகள் பலரை ஒன்று சேர்த்து இம் மேலதிக பயிற்சியினை அளித்த ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகத்திற்கு நாம் என்றும் நன்றியுடையவர்கள் என்றனர்.

இவ்வளவு காலமும் தம் கண்களைப் போல் எமைப் பாதுகாத்த மண்டலப் பொறுப்பாளருக்கும் தம் நன்றியினைத் தெரிவித்ததுடன் தங்களை தங்கள் சகோதரிகள் போல் பரிவு காட்டி நடத்திய அனைத்து மண்டல உறுப்பினர்க்கும் நன்றி தெரிவித்தனர். அத்துடன் இனிய உணவு தந்து எம்மை ஆதரித்த சமையல் பகுதியினருக்கும் நன்றி கூறினர். இதன் பின் எல்லோரின் இனிய வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டு இவ்வினிய விழாவினை இனிதே நிறைவு செய்தனர்.

# அகதி மாணவர் மன்றங்களின் ஆக்கப் பணிகள்:

## ஈ.ஏ.ம.க. மாநில அளவிலான அக்டோபர் கல்விக்குழுக்கூட்டத்தில் ஆய்வு

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகக் கல்விக் குழுவின் 2004 அக்டோபர் மாதத்திற்கான மாநிலந் தழுவிய மாதாந்தக் கூட்டம் 04.10.2003 அன்று காலை 10.00 மணியளவில் சென்னையில் உள்ள கழகப் பணிமனையில் வண.சாம் கோயில்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வண. சாம் கோயில் பிள்ளை, திருமதி. றெ. பிறிட்ஜெட், திரு. சு.நா.சு.முருகேசு, திரு. இரா. ஈஸ்வரன், திரு. ஆ. இளமுருகன், திரு. மு. மகேஸ்வரன், செல்வி. ஜெ. மரியகொறற்றி, திரு. கி. விக்னேஸ்வரன், திரு. செ. மு. செல்வராஜ், திரு. எல். லெவிண்டர் வாஸ், திரு. பா. விக்னேஸ்வரன், செல்வி. இ. கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர். தலைவர் தமது தலைமை உரையில் இவ்வருடம் உயர்கல்வி கற்பதற்கான ஆணைகள் பெறமுடியாமல் கால தாமதமாகிக் கொண்டே போவதால் கிடைக்குமா என்பது சந்தேகமாகவுள்ளது. அதனைப் பற்றி பின்பு திருமதி. பிறிட்ஜெட் மற்றும் திரு. முருகேசு ஆகியோர் விளக்குவார்கள் என்றார்.

முதலில் சென்ற கூட்ட அறிக்கையை கி. விக்னேஸ்வரன் வாசித்தார். அறிக்கை சரியென திரு. லெவிண்டர் வாஸ் முன்மொழிய செல்வி. மரிய கொறற்றி வழிமொழிய சபை ஏற்றுக்கொண்டது.

### பாலர்பள்ளி

பாலர்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆயாக்களின் செப்டெம்பர் மாத அறிக்கைகளின் தொகுப்புகள் அனைத்து மண்டலங்களும் சமர்ப்பித்தன. திருமதி. பிறிஜெட் கூறுகையில் இ.சி.எச்.ஓ. திட்டமானது 2002 ஜூலை முதல் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. தற்போது அதன் ஆய்வு நடைபெறவுள்ளது. இம்மாதம் 18ம் திகதி முதல் 20ம் திகதி வரை அது நடாத்தப்படும் என்று கூறினார்.

### ஆசிரியர் பயிற்சி

நெல்லை

ஜெ.ஆர்.எஸ். நிறுவனம் மாதத்தில் இரண்டு நாட்கள் ஆசிரியர்களுக்கான பயிற்சியினை அந்தந்த மண்டலத்திலேயே வழங்குவதாக ஒப்புக்கொண்டு நடாத்துவதாக தெரிவித்துள்ளனர் என மகேஸ்வரன் கூறினார்.

ஈரோடு

மாவட்ட வாரியாக ஜெ.ஆர்.எஸ். நிறுவனம் நவம்பர் மாதத்தில் மதுரையிலுள்ள ஜஸ்டின் கல்விப் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான பயிற்சியினை நடாத்துவதாக ஒப்புக் கொண்டுள்ளனர் என இளமுருகன் கூறினார்.

திருச்சி

இரண்டு மாவட்டங்களை இணைத்து ஆசிரியர்களுக்கான பயிற்சியினை ஜெ.ஆர்.எஸ். நிறுவனம் நடாத்தி வருவதாக ஈஸ்வரன் கூறினார்.

சென்னை

அசோக் நகரிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விடுமுறை நாட்களில் எமது சென்னை மண்டல ஆசிரியர்களுக்கான பயிற்சினை நடாத்துவதாக ஜெ.ஆர்.எஸ். நிறுவனம் தெரிவித்துள்ளதாக செல்வராஜ் கூறினார்.

### பாடத்திட்டம்

நெல்லை மண்டல TSSS நிறுவனம் தயாரித்த பாடத்திட்டத்தினை பரிசீலனை செய்து அருட்தந்தை வின்னிஜோசப் தயாரித்த பாடத்திட்டத்தினையும் ஒப்பிட்டுப் பார்த்து ஒரு இணைவான பாடத்திட்டத்தினை எல்லா மண்டலங்களும் பயன்படுத்திடலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இலங்கை வரலாறு, புவியியல் மற்றும் பொது அறிவுப் பரீட்சைக்கு தோற்றிய ஆசிரியர்கள் சிலர் இப்பரீட்சையை பொறுப்பான முறையில் அணுகவில்லை என்றும், பரீட்சையின் நோக்கத்தையே அறியவில்லை என்றும் இப்பரீட்சை ஆசிரியர்களின் அறிவைப் பெருக்குவதற்கும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும்தான் கழகம் இப்பரீட்சைகளை நடாத்துகின்றது என்றும், இப்பரீட்சைகளுக்குப் போதிய அறிவிப்புகள் வழங்கியபின்பும் பரீட்சைக்கு தோற்றத் தவறுபவர்களுக்கு ஆசிரியர்களின் ஊக்குவிப்பு உதவித் தொகையின் ஒரு பகுதியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துப் பரீட்சை யினைத் திருப்தியான முறையில் சித்தி பெறும் பட்சத்தில் பிடித்தம் செய்த உதவித்தொகையை வழங்கிடலாம் எனவும் முருகேசு கூறினார்.

பரீட்சையில் சித்தி பெறாதவர்கள் மற்றும் பரீட்சைக்கு தோற்றாதவர்கள் விபரம் கேட்டு மீளாய்வு செய்ய வேண்டும் என வண.சாம்.கோயில்பிள்ளை கேட்டுக் கொண்டார்.

### பள்ளிக்கல்வி

பள்ளிக்கல்வி ஆசிரியர்களின் செப்டெம்பர் மாத சேவை அறிக்கைகளின் தொகுப்புகளைக் கேட்டபோது அனைத்து மண்டலங்களும் சமர்ப்பித்தன.

### பள்ளி இடைநிறுத்தம்

ஈரோடு

மொத்த முகாம்கள்-32, விபரம் கிடைத்தது - 29, கிடைக்காதது-3 பாம்பாறு அணை முகாமைச் சேர்ந்த செல்வன் கயின்சன் 9ம் வகுப்பு இடைநிறுத்தம் செய்து தற்போது 10ம் வகுப்பு தனிப் பரீட்சைக்கு தோற்றவுள்ளார்.

திருச்சி

மொத்த முகாம்கள் -25, விபரம்கிடைத்தது - 22, விபரம் கிடைக்காதது-3. அழியாநிலை முகாமைச் சேர்ந்த சுரேகா 12ம் வகுப்பில் இடைநிறுத்தம் செய்தவர் திரும்பவும் 12ம் வகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளார்.

நெல்லை

மொத்த முகாம்கள் -20, விபரம் கிடைத்தது - 13,விபரம் கிடைக்காதது-7. விபரம் கிடைத்த 13 முகாம்களில் இடைநிறுத்தம் இல்லையென்றும் விபரம் கிடைக்காத 7 முகாம்களையும் பார்வையிட்டபின் விபரம் அனுப்புவதாகவும் திரு. லெவின்டர்வாஸ் கூறினார்.

சென்னை

மொத்த முகாம்கள் -26, விபரம் கிடைத்தது - 20,விபரம் கிடைக்காதது-6 புழல் முகாமில் இடைநிறுத்திய நான்கு மாணவர்களில் ஒரு மாணவர் மட்டும் பள்ளியில் சேர்க்கப் பட்டுள்ளார். குள்ளஞ்சாவடி முகாமில் தாயார் ஒருவருக்கு மனநிலை பாதிக்கப் பட்டமையால் அவரின் நலத்தை கவனிப்பதற்காக தந்தையார் பிள்ளைகளை பள்ளிக்கு செல்லவிடாது தடைசெய்துவிட்டார். முயற்சி எடுத்தும் சேர்க்க முடியவில்லை என திரு. செல்வராஜ் கூறினார்.

### விசேடப்பயிற்சிக் கல்வி

10,12ம் வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி கல்வியினை 6 மாதங்கள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும், அவர்களுக்கு வழங்கும் விசேட பயிற்சிக் கட்டணம் முறையே ரூ. 300/-, 500/- உதவித்தொகையோடு, பெற்றோரின் பங்களிப்பு மாதம் ரூ. 50/- வீதம் பெற்று சிறந்த முறையில் பயிற்சிக் கல்வி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### மாணவ மன்றங்கள்

மாணவ மன்றங்களின் செப்டெம்பர் மாதக் கூட்ட அறிக்கைகளின் தொகுப்புகள் கோரப்பட்ட போது அனைத்து மண்டலங்களும் சமர்ப்பித்தன.

மாணவ மன்றங்களில் புதிதாகத் தெரிவு செய்யப் பட்ட தலைவர் மற்றும் செயலாளர் விபரங்கள் கோரப்பட்ட போது மண்டலங்கள் வழங்கிய விபரங்கள்

ஈரோடு

அனைத்து மாணவ மன்ற தலைவர், செயலாளர் விபரங்கள் வழங்கப்பட்டன.

நெல்லை

10 முகாம்களிலுள்ள மாணவ மன்றங்களின் விபரங்கள் வழங்கப்பட்டன. மிகுதி 10 முகாம் மாணவ மன்றங்களின் விபரங்கள் சமர்ப்பிப்பதாக கூறப்பட்டது.

திருச்சி

இரண்டு முகாம் மாணவ மன்றங்களின் விபரங்கள் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவற்றை உடன் அனுப்பி வைப்பதாகவும் கூறப்பட்டது.

சென்னை

11 முகாம் மாணவ மன்றங்களின் விபரங்கள் வழங்கப்பட்டன. மிகுதி 15 முகாம் மாணவ மன்றங்களின் விபரங்கள் சமர்ப்பிப்பதாகக் கூறப்பட்டது.

மாணவர்களுக்கான இலங்கை வரலாறு, புவியியல் மற்றும் பொது அறிவு பரீட்சை நடாத்துவதற்கான கேள்விகள் தயாரிக்கும்போது திரு. நடேசலிங்கம் கூறியதும் இலங்கையிலிருந்து பெற்ற புத்தகத்திலும் சில கேள்விகளைத் தெரிவு செய்து கல்வி ஆண்டு விடுமுறையில் நடாத்தலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

### உயர்கல்வி

மாவட்ட உயர்கல்வி மாணவர் பேரவைக் கூட்ட அறிக்கை கேட்கப்பட்ட போது நெல்லை மண்டலத்தைத் தவிர மற்றைய மண்டலங்கள் சமர்ப்பித்தன.

### போதனை மையம்

போதனைமைய ஆசிரியர்களின் செப்டெம்பர் மாத சேவை அறிக்கைகளின் தொகுப்புக்களை மண்டலங்கள் சமர்ப்பித்தன.

போதனை மையங்களிலுள்ள பிரச்சினைகள்

சென்னை

கும்மிடிப்பூண்டி போதனைமையத்தில் 6 ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளதாகவும் மாணவர்கள் அதிகமாகவுள்ளமையால் மேலும் இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது.

போதனை மையங்களில் கண்காணிப்புக் குறைவு காரணமாக மாணவர்கள் தனியார் பயிற்சி நிலையங்களுக்குச் செல்கின்றார்கள் என்றும், போதனை மையங்களுக்கு மாணவர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமெனக் கூறப்பட்டது.

காலாண்டுப் பரீட்சையில் பெறுபேறுகளை ஆசிரியர்களின் உதவியோடு பெற வேண்டுமெனவும் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களின் கல்வியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக் கப்பட்டது.

திரு. செல்வராஜ் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது. அடுத்த நவம்பர் மாதத்திற்கான கல்விக்குழுக் கூட்டம் 04.11.2004 அன்று காலை 11 மணிக்கு நடாத்தப் படுமென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குறிப்பெடுத்தவர்:
செல்வி. இ. கவிதா
தொகுப்பு:
சு. நா. சு. முருகேசு

## விருப்பாச்சி அகதி முகாமில் இள மகளிருக்கான விளையாட்டுப் போட்டி

01.102004 அன்று காலை 11 மணிக்கு இள மகளிருக்கான விளையாட்டுப் போட்டி முகாம் தலைவர் முன்னிலையில் விருப்பாச்சி முகாமில் ஆரம்பமாகியது. அன்று மூடு மேகமாகவும் மழை வரும் போல் இருந்தும் முகாம் மக்கள் பெருமளவில் விளையாட்டுத் திடலில் குழுமியிருந்தனர். இதில் விருப்பாச்சி முகாம், அடியனூத்து முகாம், புளியம்பட்டி ஆகிய முகாம்கள் கலந்து கொண்டன.



கரப்பந்தாட்டத்தில் முதலாவது இடத்தை விருப்பாச்சி முகாமும், கொக்கோ விளையாட்டில் புதுப்பட்டி முகாமும், கிளித்தட்டு விளையாட்டில் விருப்பாச்சி முகாமும் முதலிடத்தை பெற்றுக் கொண்டன. விளையாட்டுப் போட்டிக்கு வந்த அனைவர்க்கும் சுய உதவிக் குழுக்கள் அன்புடன் உணவளித்து மகிழ்ந்தன. ஒன்றுபட்ட மக்களின் ஒத்துழைப்புடன் விளையாட்டுப் போட்டி மாலை 6.00 மணிக்கு நிறைவடைந்தது. இப்போட்டியில் ஈ.ஏ.ம. கழகம் அன்புடன் அளித்த பரிசுகளை போட்டியாளர்களுக்கு முகாம் தலைவர் தலைமையில் வைத்து வழங்கப்பட்டது.

இவ்விழாவில் ஈ.ஏ.ம. கழகத்தைச் சேர்ந்த இரு தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பரிசளிப்பு முடிந்ததைத் தொடர்ந்து இள மகளிரின் கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றன. இதில் விழிப்புணர்வுப் பாடலும், கழகப் பாடலும் சமுகப் பிரச்சினையை முன் வைத்து ஒரு நாடகமும் நடந்தது. இவ்வினிய நிகழ்வுடன் இரவு 9 மணியளவில் நிகழ்ச்சிகள் இனிதே முடிவடைந்தன.

# இந்தியாவாழ் ஈழ அகதிகள் பற்றி கனடிய அதிகாரிகள் வியப்பு!

(03ம் பக்கத் தொடர்ச்சி) எல்லோரையும் அங்கு செல்லவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார்கள். இதனுடைய தாற்பரியம் என்னவென்றால், கணிசமான ஈழத்தமிழர்கள் முக்கியமாக இலங்கையிலே உறவினர்கள் இருப்பவர்கள், நிலபுலம் இருப்பவர்கள் இயக்கத்தினுடைய கோவிலுக்கும், மற்றவர்கள் பழைய கோவிலுக்கும் போய்வருகிறார்கள்.

இப்போது புதிய ஒரு நிகழ்வு நடந்துகொண்டிருக்கிறது. இயக்கக்காரர்கள் வராத கோயில் என்ற பழைய கோவிலிலே இப்போது ஏகப்பட்ட கூட்டம். இந்தியத் தமிழர்கள் அந்தக்கோவிலுக்குப் போகத் துவங்கிவிட்டனர். இப்படியாக எல்லா இடங்களிலும் மிக மனவருந்தத்தக்க சூழ்நிலைஉருவாகி வருகிறது.

ஒரு பக்கத்திலே இரண்டாவது தலைமுறை தமிழ் மொழி பேசாமல் தமிழைப்பற்றியே என்னவென்று தெரியாமல் மேற்கத்திய கலாச்சாரத்தைப் பின்பற்றிக்கொண்டு விலகிப்போய்க் கொண்டிருக்கிறது. பழையவர்கள் தங்களுக்குள் மோதிப் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மோதல்களைப் பற்றி இன்னும் கொஞ்சம் நுணுக்கமாகக் கேட்கப் போனால் அது இன்னும் கேவலமாக இருக்கின்றது. தமிழ் நாட்டிலே இலங்கை அகதிகள் மத்தியிலே இருக்கின்ற இந்த ஒற்றுமையினுடைய அந்தப்பெருமை எனக்கு அப்போதுதான்தெரிந்தது.

## ஊடகங்களில் ஆக்கிரமிப்பு

எந்தெந்தக் கேவலமான கதைகளெல்லாம் பேசுகின்றார்கள். இவைகளெல்லாம் சந்தோஷமான செய்திகளாகப் படவில்லை. இது ஒருபுறமிருக்க ஊடகம் என்று சொல்லுகின்றோம். ரேடியோ, டி.வி. பத்திரிகைகள். அவற்றையும் ஒவ்வொன்றாகத் தம் வசமாக்கும் செய்திகள். இதிலே அடித்து நொறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் பலர் என்னைச் சந்தித்தார்கள். வானொலிகளை நடத்தினவர்கள் என்னை சந்தித்தார்கள். தொலைக்காட்சியை நடத்தியவர்கள் சந்தித்தார்கள். பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கின்றது. வன்முறை காரணத்தினாலே இந்தப் பாதிப்புகள் எல்லாம் ஏற்பட்டு பலர் விரக்தி நிலையிலே இருக்கின்ற ஒரு சூழ்நிலை.

எனவே ஊடகங்களில் இருந்து வருகின்ற செய்தியென்று பார்த்தீர்களென்றால் ஒரு சார்பாக மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் தமிழர்கள் மத்தியில் இருக்கின்ற ஊடகங்களில் இருந்து செய்திகள் வந்து கொாண்டிருக்கின்றன. புதிதாக நிதானமான ஊடகங்கள் வெளி வரமுடியாத ஒரு நிலை. இவ்வளவும் நடந்து கொண்டிருக்கும் போது இயக்கம் விரும்பியோ விரும்பாமலோ "சன் டி.வி." போன்ற பொதுவான ஊடகங்கள் இன்றைக்கு பிரபலமாகிக் கொண்டு வருகின்றன. கடைசியில் என்ன நடக்குமென்றால் இன்னும் கொஞ்சம் நாள் செல்ல பெரும்பாலானவர்கள் அந்த ஊடகங்களினுடைய செய்திகளைக் கேட்கத் துவங்கிவிட்டார்கள் என்றால் இலங்கைச் செய்திகளைக் கேட்க மாட்டார்கள்.

## கனடிய அரசின் அதிகாரிகளின் கேள்வி

கழகப் பணிகளுக்கு இப்படி ஆதரவு கொடுத்தவர்களைச் சந்தித்த பிறகு அங்கிருந்து சில அதிகாரிகள் என்னுடன் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுடன் நான் பேசினேன். அவர்கள் முதல் முதலாக என்னிடம் கேட்ட ஒரு கேள்வி மிகவும் ஆச்சரியப்படுவீர்கள். "இந்தியாவிலே இருக்கின்ற அகதிகள் அந்த நாட்டிற்குப் பிரச்சினை கொடுக்காமல் அமைதியாகக் கல்வியிலே மற்றும் நல்ல விடயங்களில் கவனம் செலுத்திக் கஷ்டமான சூழ்நிலையிலும் வாழ்கின்றீர்களே இது எப்படி நடக்கின்றது?" என்று கேட்டனர். கனடாவைப் பொறுத்தவரையிலே நாங்கள் ஏகப்பட்ட வசதிகளை கொடுத்திருக்கிறோம். இவ்வளவு வசதிகளைக் கொடுத்த பிறகு இங்கு கொள்ளை, கொலை, அடிதடி, சண்டை, சாதிநிலையை இழுத்துப் பேசுவது, ஊரை இழுத்துப் பேசுவது எல்லாமும் நடக்கிறது. கஷ்டமான சூழ்நிலையிலே வாழ்கின்ற இந்தியாவிலே மட்டும் இது ஏன் நடக்காமல் இருக்கின்றது? என்று கேட்டார்கள்.

அதற்கு நான் சொன்னேன் "வறுமைக்கோட்டிற்குள் வாழ்கின்றவர்கள் ஓரளவு அமைதியாக வாழ்கின்றார்கள். ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையிலே அகதிளுக்கான அகதிகளான ஒரு அமைப்பு (OfERR) இருந்த காரணத்தால் அவர்களிடையே ஒரு தெளிவான சிந்தனையை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் கல்வியிலே கவனம் செலுத்துகிறார்கள். கல்வியிலே கவனம் செலுத்துகின்ற எந்தவொரு சமுதாயமும் புறம்பான வழிகளில் செல்லாமல் இருக்கின்றது. பொதுவாக இந்தியா பல்வேறு சமுதாயங்களைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற நாடு, அங்கே ஒரு புரிந்துணர்வு இருக்கின்றது. சகிப்புத்தன்மை இருக்கின்றது. எனவே இந்த மாதிரியான ஒரு சூழ்நிலை அங்கு இல்லை."

இது போன்ற செய்திகளை அவருக்குச் சொல்லி கடைசியில் சொன்னேன், எல்லாவற்றுக்கும் மேலாக அது காந்தியினுடைய நாடு. அதனால் பொது மக்கள் அகிம்சைத் தத்துவத்தை அந்த மண்ணிலே இருந்து பெறுகிறார்கள். ஒருசிலர் பிரச்சினைக்குரியவர்களாக இருப் பார்கள். ஆனால் மக்கள் பொதுவாகவே அமைதி வழியிலே போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்று பதிலளித்தேன்.

## ஈழத்தவரிடம் மட்டுமே உள்ள முரண்பாடு

ஈற்றிலே அவர் சொல்லிச் சென்ற கருத்து என்னவென்றால் ஒரு சில மாதங்களோ, ஒரு சில வாரத்திற்கு முன்போ வன்முறைப் பிரச்சினை அங்கு மிகப் பெரியதாகியது நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் கைது செய்து அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. ஏனென்றால் வன்முறை என்பது பொதுவாக ஈழத் தமிழர்கள் மத்தியில் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஈழத் தமிழர்களிடம் மட்டுமல்ல மற்றவர்களிடமும் கொள்ளையடிப்பது போன்ற சம்பவங்கள் நடந்தது பொறுக்க முடியாமல் நடவடிக்கை எடுத்தோம் என்றார்.

ஆனால் தங்களுடைய அரசைப் பொறுத்த வரையில் பன்முகப்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். வெவ்வேறு இன மக்கள் வாழ்கின்ற நாடாக கனடாவை நாங்கள் சித்தரிக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வானொலி நேரம், அவர்களுடைய மொழி படிப்பதற்கான வசதிகள் என்று செய்து கொடுப்பதற்கு கோடிக்கணக்கான டாலர்களை கொடுத்து வருகின்றோம். மற்றவர்கள் அப்பணத்தைப் பெற்று தங்களுடைய மொழி, கலாச்சாரத்தை வளர்க்கின்றார்கள். ஒரு பன்முகப்பட்ட சமுதாயமாக அவர்களை வளர்த்துக் கொண்டு வருகின்றோம். ஆனால் ஈழத்தமிழர்களிலே... ஒரே ஒரு கருத்தை ஆதரிக்க வேண்டும். அதுவும் முரண்பட்ட கருத்து. இந்த நாட்டுச் சட்டங்களுக்கு முரண்பட்ட கருத்துக்களை ஆதரிக்கிறார்கள். இதனாலே ஒரு பெரிய பிரச்சினையே வந்து கொண்டு இருக்கிறது. சட்டப்படி அவர்கள் (புலிகள்) ஒரு தடைசெய்யப்பட்ட இயக்கம். பேச்சுவார்த்தை நடக்கின்ற காரணத்தினால் அமைதியாக இருக்கின்றோம். இதற்கு மீறிப்போனால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்ற நிலையி லேயே அவர்கள் சொன்னார்கள்.

## கல்விதரும் நல்மாற்றம்

என்னுடைய கருத்தாக நான் அவருக்குச் சொன்னது நீங்கள் கல்விக்காக முக்கியத்துவம் கொடுத்திருந்தால் கல்வி கற்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்திருந்தால் அடைக்கலம் தேடி வந்தவர்களுக்குக் கல்வி என்பதிலே முன்னேறிப் போனால் தான் அவர்களுக்கு அடைக்கலம் என்ற நிலைப்பாட்டை நீங்கள் ஏற்படுத்தி அவர்களுக்கு அந்தக் கட்டாயத்தை ஏற்படுத்தியிருந்தால் நிச்சயமாக அமைதியான ஒரு மக்களாக அவர்கள் இருந்திருப்பார்கள். முன்பு நாட்டிலே இருக்குபோது நாங்கள் அப்படித்தான் இருந்தோம். இந்த இடைக் காலத்தில்தான் இப்படி நடந்துவிட்டது. எனவே இப்படிப்பட்ட அமைப்புக்களை நீங்கள் பலப்படுத்துங்கள் கல்வியிலே ஆர்வத்தை ஏற்படுத்துங்கள். வன்முறை என்ற அந்த பிரச்சினைக்கு சட்டம் ஒழுங்கு என்ற ரீதியில் தான் கையாளவேண்டும் என்ற கருத்தைத்தான் நான் சொல்லக் கூடியதாக இருந்தது.

இதை ஏன் இங்கு சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட சம்பவங்களினால் ஈழத் தமிழர்களுக்கு உலகிலே இருந்த ஆதரவு மிகவும் பின்தங்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்திடத்தான். பொதுவாக இவர்கள் வன்முறையாளர்கள் என்ற ஒரு முத்திரை குத்தப்பட்டு வருகிறது. இப்படியாக எங்களுக்கு இருந்த பெயர் கெட்டுக்கொண்டு வந்தால் நாளைக்கு சிங்களப் பேரினவாதம் எங்களை ஒடுக்கினாலும் குரல் கொடுக்க உலக நாடுகள் முன்வருமா என்றொரு கேள்வி எழும்பிக் கொண்டிருக்கிறது. இதனால் தான் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழத்தினுடைய இந்தக் கூட்டத்தை நாங்கள் நடத்தும் போது ஒருசில முக்கியமான அம்சங்களை சிந்திக்க வேண்டியிருக்கிறது.

## இருவேறு உலகம்

அங்கு மனித உரிமை அமைப்புகள் மத்தியில் மூன்று சந்திப்புக்களை நாம் நடத்தினோம். அமெரிக்காவில் இருக்கின்ற மனித உரிமை அமைப்புக்கள், கனடாவில் இருக்கின்ற அமைப்புக்கள் மற்றும் ஈழத் தமிழர்கள் மத்தியிலே மனித உரிமைகளை நோக்கிக் கொண்டிருக்கின்றவர்கள் மத்தியிலே நான் பேசிய மூன்று வேறுவேறு கூட்டங்கள் நடந்தன. பொதுவாக மனித உரிமை மீறல்களை அவதானித்து வந்தவர்கள் மிகவும் கடுமையாக எங்களை விமர்ச்சிக்கின்றார்கள். அவர்கள் விமர்சிப்பது எங்களையல்ல. இவ்வளவும் நடந்தும் அதைப்பற்றிப் பேசாமல் இருக்கின்ற ஈழத் தமிழர்களை. ஈழத்திலே இத்தனை படுகொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு காலத்திலே சிங்களப் பேரினவாதம் சிங்கள இராணுவம் தான் தமிழர்களைக் கொன்று வந்தது. அதற்கு எதிராக நாங்கள் குரல் கொடுத்தோம் அதற்கு அமைவாக அந்த மனித உரிமை அமைப்புகள் எல்லாம் செயல்பட்டன. இன்று அவர்கள் எங்களைத் திருப்பிக் கேட்கின்றார்கள். இன்றைக்கு என்ன நடக்கின்றது. நீங்கள் எதற்காகப் பேசாமல் இருக்கின்றீர்கள்? சிங்களவர்கள் உங்கள் ஒற்றுமையைக் குலைக்க வில்லை. சிங்களவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். சிங்கள இராணுவம் அமைதியாக இருக்கிறது. சிங்களப் பொலிசார் அமைதியாக இருக்கின்றனர். தமிழர்களே தமிழர்களைக் கொன்று ஒழிக்கின்றார்கள். அதைப்பற்றி ஒரு பொது அபிப்பிராயம் உங்கள் மத்தியில் இல்லாவிட்டால் நீங்கள் எப்படிப்பட்ட ஒரு சமுதாயமாக இருப்பீர்கள்? மனித உரிமைகளுக்கு மதிப்பு கொடுக்கின்றீர்கள் இல்லையே. உங்களுடைய சமுதாயத்திற்குள் நடக்கின்ற மனித உரிமை மீறல்களைப் பற்றிக் குரல்கொடுக்க முடியாத நிலையிலே பின்தங்கிப் போன சமுதாயமா நீங்கள்? எனக்கேட்கிறார்கள். இது அமெரிக்க-கனடிய மனித உரிமை அமைப்புக்கள்.

அதே நேரம் இந்த மனித உரிமை மீறல்களை அவதானித்து அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற எமது தமிழர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சிலர்தான், அந்தப் பணியிலே ஈடுபடுகின்றார்கள். மற்றவர்கள் தாங்கள் தங்கள் பணிகளைச் செய்து கொண்டு தங்களுடைய வாழ்க்கையைப் பார்க்கின்றார்கள். நல்ல வசதியாக வாழ்கின்றார்கள். எனக்கென்றால் ஒவ்வொரு நாளும் சங்கடம் யாராவது குடிப்பதற்கு என்ன வேண்டும்; சாப்பிட என்ன வேண்டும் என்று கேட்டால் நான் எப்படிக் கணக்குப்பார்க்கின்றேன் தெரியுமா? அதிலே டாலர் கணக்கிலே சொல்வார்கள். ஒரு கொக்கோ கோலா வாங்குவதென்றால், ஒரு டாலர். எங்களுடைய கணக்கு 45ரூபாய் அந்த அளவுக்கு அங்கு வசதி. அங்கு குழந்தைகள் எல்லாம் ஒவ்வொரு தேவைகளைச் சொல்லிக் கொண்டு இருப்பார்கள். பெற்றோர்களுக்கு அதை வாங்கிக்கொடுப்பதுதான் வேலையாக நடந்துகொண்டிருக்கிறது. இங்கு ஒரு உலகம். அங்கு ஒரு உலகம். இப்படியே போய்க் கொண்டிருந்தால், எங்கள் பணி என்ன?

## மனித உரிமை மீறல்களும் ஊடகங்களும்

ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழத்தினுடைய செயற்பாடு ஒரு கால கட்டத்திலே உலக நாடுகள் மனித உரிமை மீறல்களைக் கண்டு அறிவதற்கு நாங்கள் காரணமாக இருந்திருக்கின்றோம். 1983ஆம் ஆண்டு இனப்படுகொலை நடந்தபோது அதனை வெளிப்படுத்தியது நாங்கள். அதற்குப் அதன் பிறகும் சர்வதேச அரங்குகளிலே சென்று இதை வெளிப்படுத்தியது நாங்கள். ஆனால் இப்போது கொஞ்ச காலமாக அமைதியாக இருக்கின்றோம். அது தவறா? என்ற ஒரு கேள்வி எழும்பிக் கொண்டிருக்கிறது.

காரணம் என்னவென்றால் மனித உரிமை மீறல்களை ஒரு காலகட்டத்திலே யாரும் கண்டுகொள்ளவில்லை. ஏனென்றால் செய்திகள் வெளிவரவில்லை. ஆனால் நாள்கள் ஆக ஆக இன்றைக்கு அவை எல்லாம் வெளியே வந்துவிட்டன. இதற்கெதிராகக் குரல் கொடுக்காவிட்டால், எல்லாத் தமிழர்களுமே குற்றவாளிகள் ஆகிவிடுவோம். தமிழர்கள் மத்தியிலும் நியாயத்திற்காகக் குரல் கொடுப்பவர்கள். மனித உரிமை மீறலில் யாராகவும் இருக்கட்டும். அது இயக்கமாக இருக்கட்டும். இயக்கத்திற்கு மாறுபட்டவர்களாக இருக்கட்டும், பொது மக்களாக இருக்கட்டும், சிங்களவர்களாக இருக்கட்டும், முஸ்லிம் மக்களாக இருக்கட்டும் எந்தவொருவருடைய படுகொலையும் தவறு என்று சொல்லக்கூடிய ஒரு பக்குவமுள்ள அமைப்பாக ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் இருந்து வந்தது.

நாங்கள் கொஞ்ச காலம் முனைப்புடன் செயற்படாமல் போனது ஒரு பெரிய தவறு என்பதை நான் உணரக் கூடியதாக இருக்கிறது. ஒரு கட்டத்திலே இந்தச் செய்திகளைத் தெரியாமல் இருந்து ஓரளவுக்கு இயக்கம் செய்வது நல்லது என்று சொன்னவர்கள் மத்தியில் இந்தப் படுகொலைகள் பற்றி ஒரு வாரத்தில் நடந்த செய்திகளைச் சொன்னேன். அவர்கள் பரிதவித்துப் போனார்கள். அப்படியா நடக்கிறது? இவர்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் பலவிதமான ஊடகங்களைப் பார்க்கின்றோம். ஆனால் இப்படியான செய்திகள் எமக்குக் கிடைக்கவில்லை என்றனர் பலர். நான் சொன்னேன். அதுதான் இப்பொழுது (08ம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை: இடைநின்ற மர்மம்

(07ம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கின்ற தவறு. செய்திகள் எல்லாம் ஒரு சார்பாகச் சொல்லத்தக்கதாக எல்லா ஊடகங்களையும் அவர்கள் கைப்பற்றிக் கொண்டிருப்பதால் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை இது. இது ஒரு ஆபத்தான சூழ்நிலை.

எந்தவொரு நல்ல நாட்டிலும் ஒரு ஜனநாயக நாட்டிலே இன்றைக்கு நீங்கள் பத்திரிகைகளில் செய்தியைப் பாருங்கள். டி.வி.யில் செய்திகளைப் பாருங்கள்.

## வெளிப்படையான செய்தியறிதலின் பயன்

ஜனாதிபதி தேர்தல் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அமெரிக்காவில். இரண்டு பகுதியினரும் செய்த தவறுகள், சரி பிழை எல்லாமுமே வெளியே வருகின்றன. ஒன்றையேனும் மறைக்க முடியாது. மக்கள் வாக்களிக்கும்போது அனைத்துத் தகவல்களையும் வைத்து வாக்களிக்கப் போகின்றார்கள். எங்கள் நிலை அப்படியல்ல. எங்களுக்குத் தெரியாதவை தான் கூடுதலாக உள்ளன. தெரிந்தவை மிகக்குறைவு என்ற நிலையிலே இருக்கின்றது. எனவே இதை மாற்றுவதற்காக நாங்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

இது வேறு யாராலும் முடியாது. ஏனென்றால், அந்தக் கஷ்டக் காலத்திலே சிங்களப் பேரினவாத தமிழினப் படுகொலைக்கு எதிராக இருந்த அமைப்பு இந்த ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம். நீங்கள் இந்தியாவில் செயல்படுகின்றீர்கள் உங்களுக்கு இங்கிருந்து செயல்பட வசதிகள் இருக்கின்றன. மற்ற நாடுகளிலே செய்வது மிகச்செலவு. இங்கிருந்து எதையாவது செய்யுங்கள். மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துங்கள். பொதுவான செய்திகள் வரக்கூடிய ஓர் இணைய தளத்தை ஏற்படுத்துங்கள். தப்பான செய்திகளை மட்டும் படித்துப் படித்து ஒரு சார்பான செய்திகளை மட்டும் படித்துக்கொண்டு நாங்கள் சில நேரங்களிலே தவறி விடுகின்றோம் என்று பலர் கூறுகின்றார்கள்.

## இரங்கத்தக்க 2 நிகழ்வுகள்

எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கின்றது 14-15 பேர் சந்தித்த ஒரு கூட்டம் அதில் ஒவ்வொரு குடும்பத்தையும் நான் பார்த்தேன். இந்தப் போர் நிறுத்தக் காலத்திலே இலங்கைக்குப் போய் வந்திருக்கிறார்கள். இலங்கைக்குப் போனது மட்டுமல்ல அவர்களுடைய பிள்ளைகள் கூட வன்னிக்குச் சென்று ஏதோ ஒரு பணி செய்து வந்திருக்கிறார்கள். **Guided Tour** மாதிரி குறிப்பிட்ட இடங்களுக்குக் கொண்டு போய்க் காட்டியிருக்கிறார்கள். நல்ல அபிப்பிராயத்தோடு வந்திருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொண்டு சொன்னேன். ஆனால் இந்தச் செய்தியைக் கேளுங்கள் என்று சொல்லி, ஒரு வாரத்தில் நடந்த படுகொலைகளை மட்டும் சொல்லிக்கொண்டு வந்தேன். அதில் அவர்கள் மனதைப் பெரிதும் வருத்தியது இரண்டு சம்பவங்கள். ஒன்று முன்பு மட்டக்களப்பில் கருணா என்பவர் தலைமையிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்ட ஒருவர். அவரைப் பிடித்துவரச் சொல்கிறார்கள் வன்னிப் புலிகள். போன இடத்தில் தாய் என்ன செய்கின்றாள் என்றால், தன்னுடைய மகன் திரும்பவும் இயக்கத்திற்கு போகக்கூடாது என்று மகனை எப்படியோ ஒளித்துத் தப்பவைத்து விட்டார். ஆத்திரப்பட்ட தேடிப்பிடிக்க வந்தவன் என்ன செய்கின்றான் என்றால் அந்தத் தாயைச் சுட்டுக்கொன்று விடுகின்றான்.

அடுத்த சம்பவம் இதே மாதிரி மட்டக்களப்பில் நடந்தது. அது என்னவென்றால் வீட்டிற்கு சென்ற ஒரு போராளி இயக்கத்திலே கிட்டத்தட்ட 10 வருடங்களாகப் பணியாற்றிய போராளி அவன். இந்தப் பிரச்சினையுடன் வீட்டிற்குப் போய்விட்டான். வன்னிப் புலியைச் சேர்ந்தவர்கள் அவனைப் பிடித்துவிட்டார்கள். தாய் எவ்வளவோ மன்றாடியும் முடியவில்லை. கடைசியாக தாய் என்ன செய்தார் என்றால், சையனைட் குப்பியை எடுத்துச் சொன்னார். நீங்கள் மட்டும் தான் சையனைட் போடுவீர்களா? நானே போடுகிறேன் என்று சொல்லி சையனைட்டை அருந்தி அவர் இறந்து விடுகின்றார். இந்தச் செய்தியைச் சொன்னபோது அனைவரும் பதைபதைத்துப் போனார்கள்.

## மீளச் செய்ய வேண்டிய கடமை

இந்தச் செய்தியெல்லாம் எங்களுக்கு கிடைக்கவில்லையே. இவையெல்லாம் வெளியுலகுக்குத் தெரிந்தால், எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இதை நிறுத்த வேண்டும். அமைதி என்றவொரு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த முயற்சிக்கு ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். அது சரிவராவிட்டால் நாங்கள் எங்களுடைய போராட்டத்தைத் தொடருவது தவறல்ல. ஆனால், அதற்கு நாங்கள் வாய்ப்பைக் கொடுக்காமல் அதைக் குழப்பிவிட்டோம் என்று கண்டால் நிச்சயமாக ஈழத்தமிழினத்திற்கு எதிராக சிங்களப் பேரினவாதம் பாயும்போது எங்களுக்காக அதரவு கொடுக்கக் கூடியவர்கள் உலகத்திலேயே யாருமில்லாத நிலை ஏற்பட்டுவிடும்.

எனவே தான் யார் கொலை செய்தாலும், அது இந்தக் கட்சியாக இருக்கலாம். அந்தக் குழுவாக இருக்கலாம். எதுவாகவும் இருக்கலாம். எங்களுடைய மனித உரிமை மீறல்கள் பட்டியல்களை நீங்கள் எடுத்துப் பார்த்தீர்கள் என்றால், எல்லாவற்றையுமே நாங்கள் வெளிக் கொணர்வோம். அதுபோல மீளச் செய்யவேண்டும் என்றவொரு நிலை எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

## வஞ்சம் தீர்க்கவா இந்த வசதி?

அடுத்து இயக்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு மிகப்பெரிய பிழை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பேசினால் நாங்கள் மட்டும்தான் பேச வேண்டும். வேறு யாரும் பேசக்கூடாது என்ற நிலைப்பாட்டில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் என்ன என்ன வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறார்கள் என்பதற்குக் கனடாவிலிருந்து ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார்கள். நோர்வே நாட்டினரிடம் இருந்து அவர்கள் கேட்ட ஒரு உதவி. அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உதவியாக வந்த நோர்வே தூதரிடம் அவர்கள் கேட்ட உதவி சென்சிங் கருவி என்று சொல்லப்படுகிறது. அதாவது தூரத்து நடமாட்டங்களை அறிந்து கொள்ள உதவும் பொருள். உதாரணம் பிற நாடுகளில் பார்த்தீர்களென்றால் காவல் துறையினுடைய வாகனங்கள் பல்வேறு இடங்களுக்குப் போகும். அந்த இடத்திலே இருக்கின்ற வாகனத்தை கட்டுப்பாட்டு அறையிலிருந்து பார்த்துக்கொள்ளலாம். அதுதான் ரிமோட் சென்சிங் **(Remote Sensing)**. அந்த கருவி இப்போது நன்றாக முன்னேறி விட்டது. பழையது மாதிரி சத்தம் போட்டுக்கொண்டு போகாது. எங்கே யார் யார் இருக்கின்றார்கள் என்பதை அதன் மூலம் கண்டுகொள்ள முடியும். இதில் மிக முன்னேற்றம் அடைந்துள்ள ரிமோட் சென்சிங் தங்களுக்கு வேண்டுமென்று இயக்கம் கேட்கின்றது.

நோர்வே தூதுவர்கள் ரணிலிடம் இதைக் கேட்கின்றார்கள். அவரும் சரி என்று சொல்லிவிட்டார். இன்றைக்கு அதை வைத்து என்ன செய்தார்கள் என்று கனடாவில் அந்த அதிகாரிகள் சொன்னார்கள். அவர்கள் அதனை வைத்துக்கொண்டு அண்மையில் கொழும்பிலே கொலை செய்யப்பட்டார்களே மற்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்! அவர்களுடைய செல்போன் இலக்கத்தை எடுத்து விடுகிறார்கள். அந்த செல்போன் இலக்கத்தை இந்த சென்சிங் எக்கியூப்மென்டில் பொருத்திவிட்டால், அந்த இலக்கத்தை அது தேடிக்கொண்டிருக்கும். அந்த இலக்கத்திற்கு ஒரு தொலைபேசி அழைப்புக் கொடுத்த உடன் அந்தக் கருவி அவர் எந்தக் கட்டிடத்தில் இருக்கின்றார் என்று பிடித்து விடுவார்கள். அவர் வெளியே வந்தவுடன் சுட்டு விடுகின்றார்கள். அவர் சொல்லுகின்றார் இப்படியெல்லாம் நடக்கின்றது. இதனை உங்களின் நாட்டில் செய்வதில் பரவாயில்லை. இங்கேயும் வந்துவிடுமோ என்று பயப்படுகின்றோம் என்றார்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை அதுவொரு பிரச்சினை. அதற்கு ஒரு விளக்கம் கொடுக்கப்படுகின்றது. பேச்சுவார்த்தை எப்போது முறிந்தது என்பதைப் பற்றி அவர்களிடம் இரண்டு கருத்துகள் இருக்கின்றன. விடுதலைப்புலிகள் சொல்லுகின்றார்கள் தாங்கள் பேச்சுவார்த்தையில் இருந்து பின் வாங்கியதற்குக் காரணம், அரசு சொன்னதைச் செய்யவில்லை வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை என்று. ஆனால் மற்ற நாடுகளில் இருக்கின்ற மனித உரிமை ஆதரவாளர்கள் எல்லோரும் ஒரு கருத்தைச் சொல்லுகின்றார்கள். மனித உரிமை மீறல்கள் நடக்கின்றது என்ற காரணத்தினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எம்.ஓ.யு.வில் மனித உரிமைகளைப் பாதுகாக்க ஒரு சிரத்தை இல்லாத காரணத்தினாலும் அரசாங்கமும், புலிகளும் ஒத்துக்கொண்டு ஆம்னெஸ்ட்டி இன்டர்நேஷனல் என்ற அமைப்பினுடைய முன்னாள் தலைவர் மனித உரிமை மீறல்களிலே மிக முக்கியமான பிரமுகர் இயென் மார்டின்-ஐ அழைக்கின்றார்கள். அங்கு அவர் இரு பகுதியினரோடும் பேசுகின்றார். பேசிய பின்னர் அவர்களிடம் மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் எழுதும்படி கேட்கின்றார். அந்த ஒப்பந்த வரைவை இயென் மார்டின் அவர்கள் சமர்ப்பிக்கின்ற கால கட்டத்தில் அடுத்த சந்திப்பிலே இயக்கம் கலந்து கொண்டிருந்தால் அதிலே கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும். அதிலே கையெழுத்துப் போட்டிருந்தால் மாற்றுக் கட்சிக்காரர்களைச் சுட முடியாது. மற்றக் கட்சிகாரர்களுடைய கூட்டணிகளைக் குழப்ப முடியாது. பொங்கு தமிழர் என்று மாணவர்களை இழுத்துக் கொண்டு போக முடியாது. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வரும் என்ற காரணத்தினால் தான் அவர்கள் பேச்சுவார்த்தையில் இருந்து நின்றார்கள். இதைத் தான் அங்கிருக்கின்ற மனித உரிமை அமைப்புகள் எல்லாம் சொல்லுகின்றன.

எனவே நீங்கள் மனித உரிமைகளை மதிக்காத ஒரு நிலையிலே அதற்கெதிராக நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள்? இப்படியே போனால் என்ன நடக்கும்? இது தான் அவர்கள் கேட்கின்ற கேள்வி. எனவே தான் பேச்சுவார்த்தையில் இவர்கள் ஒன்றில் கலந்து கொண்டு அதை முன்னெடுத்துச் செல்ல வழிவகை செய்ய வேண்டும். காரணம் என்னவென்றால் இப்படியே நாள் செல்லச் செல்ல ஒரு கால கட்டத்திலே உலக நாடுகள் என்ன சொன்னது? பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இருந்தால் தான் நாங்கள் பணத்தைக் கொடுப்போம் என்று.

ஆனால், பேச்சுவார்த்தை முன்னே செல்லவில்லை. இன்றைக்கு ஜப்பான் நாடு மிகப்பெரிய தொகைப் பணத்தைக் கொடுக்கப் போகின்றது. யாரிடம் கொடுக்கப் போகின்றது? அரசிடம் கொடுக்கப் போகின்றது. இப்படியென்றால் எங்களுக்கு மாறாகத்தான் நிலைமை செல்லும். வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கெனக் கொடுக்கப்பட வேண்டிய பணத்தை இன்றைக்கு சிங்கள அரசுக்குக் கொடுக்கப் போகின்றது ஜப்பான். அதாவது கிட்டத்தட்ட பாதிப் பணத்தைக் கொடுப்பதாக முன் வந்துள்ளது ஜப்பான் நாடு. இலங்கை அரசுக்கே கொடுக்க முன் வந்து விட்டது. இனி அந்த அழுத்தம் இருக்காது. எல்லாவற்றையும் நாங்கள் மனதில் வைத்துக் கொண்டு தான் நாங்கள் முடிவெடுத்தோம், சரி இந்தியாவினுடைய சிந்தனையையும் இதிலே கொண்டு வர வேண்டும், அதற்காக இந்தியாவிலே டெல்லியிலே ஒரு கூட்டத்தைப் போடுவது நல்லது என்று.

## அகதிகள் பாதிப்பை நிறுத்த...

டெல்லியிலே கூட்டத்தைப் போடும்போது, டெல்லியிலே இருக்கின்ற இரண்டு மூன்று அமைப்புகள் அங்கு இருக்கின்றன. **(Strategic Studies, Defence Studies)** இது போன்ற அமைப்புக்கள், அதைச் சார்ந்தவர்கள் தான் அங்கு முக்கியமான முடிவுகள் எடுப்பதில் பங்களிக்கிறார்கள். எனவே அந்த அமைப்புகளினுடைய பிரதிநிதிகள் கலந்து கொள்ளக்கூடியதாக டெல்லியிலே ஒரு கூட்டத்தை நடத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அது வருகின்ற அக்டோபர் 30 ஆம் திகதி நடத்தப்படவிருக்கின்றது. அந்தக் கூட்டத்தின் வாயிலாக நாங்கள் முக்கியமாக என்ன கேள்வியைக் கேட்கிறோம் என்றால் விடுதலைப்புலிகள் அந்தப் பேச்சுவார்த்தையிலே சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லாவிட்டால் மாற்று வழிகள் என்ன? மாற்று வழிகளையும் யோசிக்க வேண்டும். ஏனென்றால், இப்படியே போய்க் கொண்டிருந்தால் அகதி மக்களைப் பொறுத்தவரையிலே இப்படியே வாழ்ந்து கொண்டு போக முடியாது. ஒன்றில் நாட்டிற்குத் திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் இங்கு இருக்க வேண்டும். இங்கிருப்பதற்கான வாய்ப்புகள் தொடர்ந்தும் இருக்கப் போவதில்லை. நாட்டிற்குப் போவதென்றால் இப்போது போகக் கூடிய நிலையும் அங்கு இல்லை. இரண்டிற்கும் இடையிலே மாட்டுப்பட்டுப் போன நிலையிலே மாற்றுத் திட்டங்கள் முன்னெடுக்காவிட்டால் அகதி மக்கள் தான் கூடப் பாதிப்படைவார்கள். எனவே மாற்றுத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

## பிள்ளைபிடிப்புப் படலம்

இதைத் தவிர மற்ற அமைப்புகள் ரீதியாக நான் சந்தித்த போது நான் கேட்ட கேள்வி இனப்படுகொலை சரி. அதைப் பொறுத்த வரையில் ஒரு கட்டுப்பாடு வந்து விட்டது. ஏனென்றால் போர் நடக்கவில்லை. ஆனால் நாளாந்தம் தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது எந்த இயக்கம் என்பது முக்கியமல்ல. கொல்லப்படுவது தமிழர்கள். அப்போது அமைதி என்பது சிங்களவர்களுக்கு மட்டும்தானா? தமிழர்களுக்கும் இருக்க வேண்டும் அல்லவா? பேச்சுவார்த்தை நடக்கின்றதோ இல்லையோ முன்னேற்றம் என்று சொல்லும்போது மக்கள் பாதுகாப்பாக இருப்பதுதான் முன்னேற்றம் என்ற நிலை வர வேண்டும். மக்களை மற்றவர்களுக்கும் வரி கட்டச் சொல்வது மக்களுக்கு நல்லதல்ல. இன்றைக்கு மக்கள் வரி கட்டுவதைப் பற்றிக் கூடக் குறை சொல்வதில்லை. எதைக் குறை சொல்கின்றார்கள் என்றால் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டு செல்கிறார்கள். எத்தனையோ குடும்பங்கள் இன்றைக்கு இந்தப் பிரச்சினையைச் சொல்லிக்

(10ம் பக்கம் பார்க்க)

# சோதனையிலும் அகதி மக்களை ஒன்றுபடுத்தி சாதனை படைக்கவைத்த அரிய சரித்திரம்

## ஈ.ஏ.ம.க. புதிய நிருவாகிகள்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் 20ஆம் ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் சென்னைத் தலைமையகத்தில் கழக உறுப்பினர்கள் குழுமியிருக்க 18/09/2004 அன்று முற்பகல் 11.30 மணியளவில் ஈழப்பண்ணுடன் இனிதே ஆரம்பமானது.

கழகத்தின் தலைவர் முனைவர் அரு. கோபாலன் அவர்களால் வரவேற்புரையும், தலைமையுரையும் நிகழ்த்தப்பட்டது. அப்போது அவர் நிகழ்ச்சி நிரலை வாசித்துக் காட்டியதுடன், மகாகவி பாரதியார் அவர்களின் "மங்கியதோர் நிலவினிலே கனவிது கண்டேன்....." என்ற பாடலைப் பாடி 16வது தடவை இக்கூட்டத்திற்குத் தாம் தலைமை வகிப்பதையிட்டுப் பெருமையடைவதாகவும் கூறினார்.

ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகம் இங்கு மட்டுமல்லாது தாயகத்திலும் தனது கிளையினை ஏற்படுத்தி, திட்டமிட்டுச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. இதற்கு முக்கிய காரணம் செயலாளர் நாயகம் செல்வி.சூரியகுமாரி அவர்களின் இடைவிடாத முயற்சியே ஆகும். அவர் ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே பறந்து பறந்து செயலாற்றி வருகிறார். இந்த ஆண்டு மிகவும் சிறப்பான ஆண்டாகும். ஏனென்றால் பொருளாளர் ஒரு மிகப் பெரிய முயற்சியினை மேற்கொண்டுள்ளார். இலங்கை-இந்திய வம்சாவளி மக்கள் குடியுரிமை-வாக்குரிமை பெற்றவர்களாக நாடு திரும்ப வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து முயற்சிகள் எடுத்துள்ளார். இதற்காக இலங்கை ஜனாதிபதிக்கு நீண்டதோர் கடிதத்தினை எழுதியுள்ளார். அகதி அடையாள அட்டையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இவரது இடைவிடாத முயற்சியினால் பிரஜாவுரிமை விரைவில் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நீங்கள் நாடு திரும்பும் போது அங்கேயும் கழகத்தின் குடைக்குள் சேவையாற்றப் பணி காத்திருக்கிறது. இதனைப் பொருளாளர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

மேலும், 1984-ல் இலங்கை மண்ணுக்கு வெளியிலே ஈழத்தவரால் உருவாக்கப்பட்டு இன்றும் தலை நிமிர்ந்து நிற்பன எமது "ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமும் மற்றும் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகமுமே" ஆகும். இக்கால கட்டத்தில் புற்றீசல்கள் போல் தொடங்கப்பட்ட பல ஈழ அமைப்புகள் இந்தியாவில் இப்போது இருக்கின்றனவா என்பது கேள்விக்குறி. ஆனால் இந்திய மண்ணில் நிமிர்ந்து நிற்கும் ஓர் அமைப்பு ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகமே ஆகும். எல்லாப் பகுதியினருக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. நாளை நாட்டுக்குச் செல்லும் போது நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் கொண்டவர்களாகச் செல்ல வேண்டும். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் என்ற ஒரு சங்கிலி அகதி மக்களையெல்லாம் ஒன்றாகப் பிணைத்து வந்திருக்கவில்லையென்றால் இந்நாட்டில் வந்த தடாவும் பொடாவும் ஈழத் தமிழர்களைச் சீர்குலைத்திருக்கும். இந்த வகையில் மக்களை ஒருங்கிணைத்து அவர்களிடத்தில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கழகம் ஏற்படுத்தியிருக்கிறது என்றால் மிகையாகாது. நாம் எல்லோரும் ஒன்றாய் நாடு திரும்புவதற்காக முகாம்கள் தோறும் நமது தொண்டர்கள் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய ஆதரவுடன் நாம் ஒன்றாகச் சென்றால் அது பெரிய சக்தியாக இருக்கும் அத்துடன் நம்மிடையே பலமும் ஆற்றலும் ஏற்படும். நாம் சொல்லும் கருத்துக்களுக்கு இலங்கை அரசு செவி சாய்க்கும்

ஆற்றங்கரையில் ஓர் இளைஞன் நின்றிருந்தான் ஆற்றில் தத்தளித்த பலரைக் காப்பாற்றிக் கரை சேர்த்தான். இவ்வாறு பலரை மீட்டாலும் மீண்டும் மீண்டும் பலர் நீரில் மூழ்கிய வண்ணம் இருந்தனர். இதனால் மனம் சலித்த இளைஞன் இனிமேல் இவர்களைக் காப்பாற்றும் சக்தி தனக்கு இல்லை என முடிவு செய்து அங்கிருந்து நடந்து சென்ற போது, அவ்வாற்றின் குறுக்கே இருந்த பாலத்தில் நின்றிருந்த ஒரு சண்டியன் அவ்வழியாக வரும் ஆட்களை எல்லாம் ஆற்றுக்குள் தள்ளிவிட்டுக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த இளைஞனுக்கு காரணம் புரிந்தது. சண்டியனை அகற்றினால் யாரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படமாட்டார்கள் என்று தோன்றியது அதைச் செய்தான். அதே போன்றுதான் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு யார் முட்டுக் கட்டையாக இருக்கிறார்களோ, அவர்களை நீக்கி விட்டு, உண்மையான சமாதான விரும்பிகளை முன்னிருத்திப் பேச்சு வார்த்தைகளைத் தொடரச் செய்ய வேண்டும். பன்னாட்டுத் தலைவர்களையும் இலங்கை இந்திய அரசியல் வாதிகளையும் சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த வேண்டும். அந்தத் தீர்வு ஜனநாயக முறைப்படி உருவாக்கப்பட வேண்டும். இதற்காகவே இதில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உரிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, சிந்தனை துாண்டப்பட்டு வருகிறது. இதற்கான ஆரம்பம் தான் இந்த ஆண்டு பொதுக் கூட்டம் என்று கூறியதுடன் வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து சென்ற ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கை கழகத்தின் இணைச் செயலாளர் திருமதி. பிரிஜ்ஜெட் ரெக்ஸ் அவர்களால் வாசிக்கப்பட்டது. பின்னர் இவ்வறிக்கை சரியென திரு. ஸ்ரீஸ்கந்தராஜா முன்மொழிய, திரு.ச. நடேசலிங்கம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பின்னர் ஆண்டறிக்கையின் முன்னுரையும், அதன் முடிவுரையும் கழகத் தலைவர் அவர்களால் வாசிக்கப்பட, அடுத்து ஒவ்வொரு பகுதியின் செயற்பாடுகள் அதன் ஒருங்கிணைப்பாளர்களால் வாசிக்கப்பட்டன.

திட்டப்பகுதி 1 க்கான அறிக்கை திரு.ச. நடேசலிங்கம் அவர்களின் தலைமையில் திரு. இரா. ஈஸ்வரன், திரு. மு. மகேஸ்வரன் ஆகியோரால் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 2 க்கான அறிக்கை செல்வி. வி. தேன்மொழி அவர்களால் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 3 க்கான அறிக்கை திருமதி. பிரிஜ்ஜெட் ரெக்ஸ் அவர்களால் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 4 க்கான அறிக்கை திருமதி. அகிலா ரத்தினராஜசிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 5 க்கான அறிக்கை மருத்துவர் சுபா. பூங்குன்றன் அவர்களால் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 6 க்கான அறிக்கையில் ஆற்றுப்படுத்தல் அறிக்கை திரு. இரா. மாணிக்கவாசகர் அவர்களாலும், தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி தொடர்பான அறிக்கை திரு. அன்பு செல்வராஜ் அவர்களாலும், வருவாய் ஊக்குவிப்பு மற்றும் தொழில் கல்வித் துறை பற்றிய அறிக்கை திரு. ரத்தினராஜசிங்கம் அவர்களாலும் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 7 ற்கான அறிக்கை திரு. ம. சக்காரியஸ் அவர்களால் வாசிக்கப்பட்டது.

திட்டப்பகுதி 8 க்கான ஆதரவு திரட்டல் பகுதிக்கான அறிக்கை அருட்தந்தை சாம் கோயில்பிள்ளை அவர்களால் வாசிக்கப்பட்டது.

இவ்வறிக்கைகள் திரு. பெருமாள் அவர்களால் முன்மொழியப்பட்டு, திருமதி. தர்மாகந்தவேள். அவர்களால் வழிமொழியப்பட்டு அவையோரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, கணக்கு ஆய்வாளரால் தணிக்கை செய்யப்பட்ட 2003 சித்திரை முதல் 2004 பங்குனி வரையிலான கணக்கு அறிக்கை சமர்ப்பித்தலின் போது கௌரவ பொருளாளர் அவர்கள் இப்பணி தொடர்பாக சில மாற்றங்களை எதிர்காலத் திட்டமிடலில் மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் செயலாளரான செல்வி. சி. சூரியகுமாரி அவர்கள், இலங்கையிலுள்ள கழகத்தின் தலைவர் ஆவார். எனவே, இரண்டு பணிகளையும் செய்வதற்கு அவருக்குச் சிரமமாக இருக்கும் என்பதால், இங்கு அவர் மேற்கொண்ட பணிகளில் சிலவற்றை குறைத்தால்தான் அவர் இலங்கையில் முழுமையாகப் பணியாற்ற முடியும். எனவே அவரது பணிகளில் சில பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

(1). தொண்டர்களுக்கு இடையே கடும் வார்த்தைகளைப் பாவித்து, திட்டுதல், பெரிய மற்றும் சிறிய பிரச்சினைகளை பற்றிப் பேசித் தீர்த்திட திருவாளர்கள் ம. சக்காரியஸ், ஜெ.எம். சாமுவேல், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(2). செயற்திட்டங்களை ஒருங்கிணைத்திட திருமதி. அகிலா ரத்தினராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(3). கணக்குப் பணியை திருமதி. பிரிஜ்ஜெட் ரெக்ஸ் அவர்களின் தலைமையில் செல்விகள் பொ. உஷா, கோகிலா, விக்னேஸ்வரி, திருமதி. தனலட்சுமி, திரு. தேவராஜ் ஆகியோர் மேற்கொள்வர்.

(4). திரு. ப. காண்டீபன் அவர்கள் கலைத்துறையில் ஆர்வமாக உள்ளமையால் அவரை அத்துறையில் ஈடுபடுத்திடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் கணக்கறிக்கையில் வரவு செலவு விபரம் திரு. ப. காண்டீபன் அவர்களாலும், ஒவ்வொரு பகுதிக்கான செலவினம் செல்வி. பொ. உஷாவாலும் வாசிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கௌரவ பொருளாளர் ஐயா அவர்கள் பேசுகையில், தற்போது இலங்கையிலும் பணி செய்யும் சூழ்நிலையும் இந்தியாவில் பணி செய்யும் சூழ்நிலையும் ஒருங்கே உருவாகியுள்ளது. இலங்கையில் நிரந்தரப்பணி செய்வது சிரமம். இன்னும் அங்கு புலம் பெயர்வு முடிவுக்கு வரவில்லை. நிரந்தரமில்லாததினால் கட்டுமானம் போன்ற பணிகளைத் திட்டமிட்டுச் செய்ய முடியாது.

வவுனியாவில் எமது அலுவலகம் இருக்கின்றது. அங்குள்ள மாணவர்கள் எம்மிடம் கேட்டது, நீங்கள் இந்தியாவில் கல்விப் பணி செய்கின்றீர்கள். இங்குள்ள ஆசிரியர்கள் சரியாக வகுப்பு நடாத்துவது இல்லை. தனிப்பயிற்சி பெறுவதற்கும் எமக்கு வசதியில்லை. வசதியாக உள்ளோர் நன்றாகப் படிக்கின்றனர். ஆனால் வசதிக் குறைவான எமது நிலை கேள்விக் குறியாக உள்ளது. எனவே எங்களுக்கும் போதனை மைய வகுப்புகள் நடாத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு நாம் பதிலளிக்கையில், சரி செய்யலாம். அப்படியெனில் நீங்கள் சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றதுடன், புலம்பெயர்ந்தோர் வசிக்கின்ற முகாம்கள் மிகவும் அழுக்கடைந்துள்ளன. வருடக் கணக்கில் சுத்தம் செய்யப்படாமலுள்ளன. அவற்றைச் சுத்தப்படுத்தும்படி கேட்டபோது, மிகவும் உற்சாகமாகத் தமது பள்ளி மாணவர்களையும் இணைத்துக் கொண்டு துப்புரவுப் பணி செய்தனர்.

இலங்கையில் பல சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அவர்கள் இவற்றை அவதானித்து விட்டு அங்கு வந்து செயலாளர் அவர்களை உற்சாகப்படுத்தி விட்டுச் சென்று விட்டனர். அவர்களது சேவைக்கும் எமது சேவைக்கும் அநேக வித்தியாசங்கள் உள்ளன. எமது நிறுவனம் அகதி மக்களாளேயே அகதிகளுக்குச் சேவையாற்றிடும் அமைப்பு. எனவே, முழு அர்ப்பணிப்போடு உட்புகுந்து எமது சேவை ஆற்றப்படும். அடிமட்டத் தொண்டர்களிலிருந்து சேவைகள் படிப்படியாக மேல்நோக்கி வரும். ஆனால் பிற அமைப்புகள் அப்படியானவை அல்ல. அங்கு மேல் மட்டத்திலிருந்து சேவைகள் படிப்படியாகக் கீழ்நோக்கிச் செல்லும்.

எமது கழகம் இலங்கையில் இரு வேலைகளைச் செய்து வருகிறது.

(01). சட்ட ஆவணங்கள் தொடர்பான பணிகள் (இறப்பு, பிறப்பு, காணி உறுதி மற்றும் திருமணப்பதிவு போன்றவற்றினை ஏற்படுத்திக் கொடுத்தல்).

(02). ஆளுமை வளர்ச்சிப் பணி கிளாட்ஸ்டன்-புளோரினா ஆகியோர் மூலம் செய்யப்பட்டது.

முதற்கட்டமாக எமது கழகம் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து, திருகோணமலை, மட்டகளப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் படிபடியாகக் கிளைகள் உருவாக்கப்பட்டு சேவைகள் பரவலாக்கப்படும்.

அங்கு செய்யப்படும் சேவைகள்:

1. கட்டமைப்புப் பணிகள்
2. மருத்துவச் சேவைகள்
3. கல்விச் சேவை
4. ஆளுமைத் திறன் வளர்ச்சி

(13ம் பக்கம் பார்க்க)



# "அகதியாக்கப் பட்டவன்"

அங்கம் 5

## "கண்ணீர்க் குளங்கள்!"

"சிங்கள மொழிச் சட்டம்!, - எம்மவர்மேல், கட்டாயத் திணிப்புத்திட்டம்!! தகுதி இல்லாதார்க்குத் தரலாமா உயர்பதவி? சகதிக்கு எதற்காகத் தங்கமணிக் கிண்ணம்?! இவையாவும், சிங்கள அரசின் அதீதக் கற்பனை அர்த்தமற்ற எதிர்ப்பார்ப்பு. தன்மானத்தின் ஆடை, என் அணிகலனாக அமைந்ததினால், என் மனத்தின் சிறகுகள், அரச சேவையிலிருந்து, வீடு நோக்கி ஓடிவிட உதவின." இவையெல்லாம், வியாதிகளின் மேய்ச்சல் நிலமாகி, பாரிய சத்திரசிகிச்சையின் பின்னர், பாரீஸ் (பிரான்ஸ்) பிரபல மருத்துவமனையில், "கார்டூன்" (Cartoon) ஆகிவிட்ட மாமிச ஓவி:யமாக, ஓய்வெடுத்து வரும் வேளையில் நான் இரை மீட்டுப்பார்க்கும் போது என் சிந்தனையில் உதிர்த்த தொடரான அந்தநாள் ஞாபங்கள்!

இவ்வேளையில், இறந்த காலத்தையே திரும்பத் திரும்பப் பாடும் கீறல் விழுந்த இசைத்தட்டாகிய நான், ஞாபகங்களின் குப்பைக் கூடையுமாகி விட்டேன்!. முப்பத்தி மூன்று வருட அரசசேவைக்கு முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது. இலங்கை வானொலியிலும், எனது தொடர் நாடகங்களில் அநாவசியமான பாத்திரங்களைச் சாகடித்து, முடிவுகளையும் மாற்றியமைத்து முடித்துவிட்டேன்; இப்போ நானொரு சுதந்திரப் பறவை!

அன்று பூரண பருவம், நல்ல ஞாபகம். முப்பத்தி மூன்றுவருட கொழும்பு வாழ்கையை முடித்துக் கொண்டு, சொந்தமண் நோக்கிப் பயணிக்க ஆரம்பிக்கின்றேன். மூட்டை முடிச்சுகள், பெட்டி படுக்கைகள் அனைத்தும் என்னுடன் பயணிப்பதற்காகத் தயாராகிவிட்டன. கொழும்பு-கோட்டை புகையிரத நிலைய மணி ஒலிக்கிறது. அறிவிப்புகள்,- "பயணிகள் கவனத்திற்கு!!" ஐந்தாவது பிளாற்பாரத்தில் நிற்கும் தபாற் புகையிரதம் ஏழு பதினைந்திற்கு, (7.15 பி.எம்.) காங்கேசன் துறைநோக்கிப் புறப்படும். நிற்பாட்டப்படும் ஸ்தானங்கள், மருதானை (Maradana), றாகம (Ragama), வெயாங்கொட (veyangoda), பொல்காவலை (Polgalavela), குருநாகல (Kurunagala)... தொடர்கின்றன! புகையிரதம் மெல்ல நகர்கின்றது. பூரண சந்திரனின் பிரகாசமான ஒளி துலாம்பரமாகத் தெறிக்கின்றன. புத்தபெருமான் ஞானம் பெற்றநாள்! இந்நன்னாளில் நானும் தெளிவு பெற்று, அரசமர நிழல்கள் படிந்த புண்ணியபூமியை விட்டுப் பிரிகிறேன். முறிந்த பனைகளும் சரிந்த தென்னைகளும், என்னை வரவேற்கக் காத்திருக்கின்றன.

"எங்கள் வீட்டில் எல்லா நாளும் கார்த்திகை" என்ற நிலைமை மங்கிவரத் தொடங்கிவிட்டது. இலட்சோப லட்சம் கலப்பைகள் உழுதுவந்த எம் மண்ணை, அரச கனரக ஊர்த்திகள் உழுதுமறித்துவர கட்டுமரங்களும், மீன்பிடிப் படகுகளும் நீந்தி விளையாடிய எம் நீரில், அரச பீரங்கிப் படகுகள், ஆக்கிரமித்துவர, மாதம் மும்மாரி பொய்யாமல் பெய்யும் வானிலிருந்து "புக்காரா" விமானங்கள் குண்டு மாரி பொழிந்துவர, நாளுக்கு நாள் மக்கள் இடத்திற்கு இடம் மாறி மறைந்து வாழ்ந்துவர, செல் அடிகளும், உலங்கு வானூர்திகளின் தாக்குதல்கள் அதிகரித்துவர, சுற்றிவளைப்புகளும், தேடுதல்களும் நாளாந்தம் நடவடிக்கைகளாகிவர, மக்கள் நாளுக்குநாள் செத்துப் பிழைத்துவரத் தொடங்கிவிட்டனர்.

மக்கள் குடும்பம் குடும்பமாக பெரும்பாலான, கரையோரப் பகுதிமக்கள், புலம்பெயர்ந்து தமிழகத்தில், அகதிகளாகத் தஞ்சமடைந்தமை யாரும் மறுக்க முடியாத, மறைக்கவும் முடியாத நிஜங்களின் தரிசனங்கள்!

"எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கோர் இடம் வேண்டும்"! காலத்தின் கொந்தளிப்பினால், நானும் தமிழகத்தில் அகதியாக ஆசைப்பட்டேன்! எனது ஐந்து பிள்ளைகளில் நால்வர் புலம் பெயர்ந்து பிரான்சில் (France) தஞ்சமடைந்து விட்டனர். எஞ்சியது, என்னுடன் என்துணைவியார், பதினைந்து வயதுடைய எனது மகன், என் துணைவியாரின் தயார் மட்டுமே

இராணுவ சுற்றிவளைப்பு, தேடுதல்களினால், என் மகன் இருமுறை இராணுவத்தினரால் கைதாகி விடுவிக்கப் பட்டதும், தமிழகம் சென்று விடுவதே மேல் என்பது, திட்டவட்டமான தீர்மானமாகிவிட்டது. வெட்டிய பதுங்குக்குழியும் (Bunker) பாதுகாப்பற்றதாகிவிட்ட பின்னர், பணம் எப்படிப் பாதுகாப்பாக இருக்க முடியும்? விடை கிடைத்துவிட்டது. எனது இனிய நண்பர் அமரர் "ஈழத்து இரத்தினம்" அவர்களின் மடல்கள், தமிழகத்தில் அகதியாகிவிட வேண்டும் என்ற அசைக்க முடியாத ஆசையை வளர்த்தேவிட்டது.

உறவுகள் தடுத்தன! உயிரின் பாதுகாப்பு மேலோங்கி நின்றது! பிறந்த மண்ணைப் பிரிந்துவர உள்ளம் குமுறியதுதான். என்னைவிட எனது குடும்பத்தினரின் பாதுகாப்பே முன்னிலை வகித்தது. குறிப்பாக எனது மகனின் கல்வியே முக்கியத்துவம் வகித்தது. இது தற்காலிகக் குடியகல்வு மட்டுமே என்பதனால், மனதிலே ஒரு போலித் தென்பை ஏற்படுத்தினாலும் கூட, சொத்துச் சுகங்களைத் துறந்துவர, நான் என்ன "சித்தார்த்தரா"?

உறவுகளும் உரிமைகளும் உள்ளபடியே விலகிவிட்டு, வரவுகளும் செலவுகளும் பார்ப்பதையே விட்டுவிட்டு, வங்கியிலிருந்து வரனை வறுகியெடுத்துக் கொண்டு, தமிழகம் செல்லத் தயாராகிறோம். கொத்திக் கொண்டேபோகக் கொக்குப் பயல்கள், வைத்தகண் வாங்காமல், வழிபார்த்திருக்கின்றார் என்பது, தெரிந்த அப்பட்டமான உண்மை! காட்டுமிராண்டிகள்!! ஆனாலும் நம்பிக்கையை நான் இழந்ததேயில்லை, இன்றுவரை இழக்கவுமில்லை. பிறந்த மண்ணில் மீண்டும் கால்பதிப்பேன்; மண்வாசனையை மீண்டும் சுவாசிப்பேன் என்ற நம்பிக்கை இன்றுவரை இருந்து வருகின்றது. நம்பிக்கைக்கு மிகவும் தேவையானது மனம். என் வாழ்விற்குமட்டுமல்ல எவருக்கும் பொருந்தும் இது.!

பிரயாண ஆயத்தங்கள் வீட்டில் ஒரே தடல்புடல்; மீண்டும் ஓர் புதிய கௌரவமான அகதி வாழ்க்கைதானே ஆரம்பிக்கப்போகிறோம் என்ற சிந்தனையில், முக்கியமான பொருட்களை மட்டும் எடுத்துச் சென்றால் போதுமென்ற எனது வாதம், என் வீட்டில் செல்லுபடியாகாததாகிவிட்டது. பெண்ணாசையைக் கட்டுப்படுத்தினாலும், மண்ணாசையையும் பொன்னாசையையும் கட்டுப்படுத்த முடியாததாகிவிட்டது. வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனத்தில், பொதிகள், இடமளித்த வரை ஏற்றுமதி செய்யப் படுகிறது. ஏற்றுமதியான பொருட்களை மீண்டும் ஒருமுறை, என் துணைவியார் எண் பரிசோதனை செய்கிறார். எனது கைப் பறிக்குள், சிறுதுணியால் சுற்றப்பட்டிருந்தது ஒரு தேங்காய் சிரட்டை! நான் இவ்வளவு நாட்களாக, யார் கண்ணிலும் படாது மறைத்து வைத்திருந்த பொக்கிஷம் "தேங்காய்ச் சிரட்டை", துணைவியாருக்கு பெரும் ஆச்சரியத்தை விளைவித்துவிட்டது. "இந்தாப்பா கணக்க யோசியாதையும்" இஞ்சைபாரும் சிரட்டையின் உட்பக்கத்திலே "ஆடி 1983" எண்டு எழுதியிருக்கின்றன். இதுக்குப் பெரிய பின்னணியேயிருக்குது. கொழும்பு போய்ச்சேர்ந்ததும் விளங்கப்படுத்துறன். நான் கூறிய தார்ப்பரியம் துணைவியாருக்கும் விளங்கியிருக்கவில்லை. நாம் பயணிக்கும் வாகனம் கொழும்பு நோக்கிமெல்ல நகரத் தொடங்கியது. வழியனுப்ப வந்திருந்த அந்தமையல் உறவுகளின் கண்களில் மட்டுமல்ல, எம் கண்களும் குளமாயின. கொழும்பு நகர் வந்து சேரும்வரை, கண்ணீர்க் குளங்கள், மடை திறந்த வண்ணமே யிருந்தன!

(தொடரும்....)

கொள்கையை விட்டபின் குண்டுகள் எதற்கு?
சமாதானம் எனும்போது சர்வாதிகாரம் ஏன்?
வன்முறை விட்டு வாழ்வை உயர்த்து!

## புழல் இலங்கை அகதி குடியிருப்பருகில் நடந்த இலவச கண் சிகிச்சை முகாம்.



ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் மற்றும் பம்மல் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து நடாத்திய கண் மருத்துவ முகாம் கடந்த 25.9.2004 அன்று முகாம் அருகில் அமைந்திருக்கும் சென் ஜோன்ஸ் பள்ளியில் நடைபெற்றது. இக்கண் மருத்துவ முகாமை கழக மருத்துவர் சத்திய நாராயணன் ஏற்பாட்டில், சங்கரா மருத்துவமனை மக்கள் தொடர்பாளர் திரு. பாபு அவர்கள் ஒழுங்கு செய்ய இம்முகாம் நடைபெற்றது.

காலை 9.00 மணிக்குத் தொடங்கிய முகாம் மதியம் 1.00 மணி வரைக்கும் நடைபெற்றது. இதில் 185 அகதிகள் மக்கள் பயன் அடைந்தனர். 4 பேருக்கு இலவச கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இம்முகாம் சிறப்படைய முகாம் சுய உதவிக் குழுக்கள் முழு ஆர்வமும் ஊக்கமும் கொடுத்தனர். முகாம் நலப்பணியாளர் திருமதி. ராஜேஸ்வரி, ஆற்றுப்படுத்துனர் திருமதி.தனலட்சுமி, ரோ.அவி. திருமதி. ராஜேஸ்வரி, கும்மிடிப்பூண்டி நலப்பணியாளர்கள் ஆகியோர் உதவி புரிந்தார்கள்.

சங்கரா மருத்துவமனை சார்பில் டாக்டர்.ராமமூர்த்தி, திரு. சங்கர் அவர்கள் கலந்து கொண்டனர். இறுதியாகக் கழகத்தின் சார்பில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

தகவல்:- எஸ்.அன்பு செல்வராஜ்,
முகாம் ஒருங்கிணைப்பாளர், புழல்.

## சையனைட் போராளிக்கு மட்டுமா? ஒரு தாயும் தின்று உயிர்த் தியாகம்!

### ஈழத்தில் இந்நிலை நீடிக்கலாமா?

(08ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்டு நாட்டை விட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றால், மூன்று குழந்தைகள் இருந்தால் ஒரு குழந்தையை இயக்கத்திற்கு கொடுக்க வேண்டும். இன்றைக்கு மக்கள் இயக்கத்திற்குத் தம் குழந்தைகளைக் கொடுக்க முன் வராததற்குக் காரணமே போராட்டம் முடிகின்ற கட்டம். பேச்சு வார்த்தை நடந்து ஒரு தீர்வு வரக்கூடிய ஒரு கட்டம். இனியுமா நாம் கொடுக்க வேண்டும்? என்று யாரும் முன் வராத நிலையில் வலுக்கட்டாயமாக குழந்தைகளை எடுத்துக் கொண்டு போகின்றார்கள்.

ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கடத்தப்பட்ட ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. வெளிநாட்டிலே இந்த மாதிரி ஆதரவுக்காகப் பேசிய சிலரிடம் அவர்களுடைய மனைவியார்களும் இருக்கத் தக்கதாக இந்தக் கேள்வியைக் கேட்டேன். உங்களுடைய குழந்தை கடத்தப்பட்டு இயக்கத்திலே சேர்க்கப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று. அவர்கள் பதில் சொல்லவில்லை. இதிலே தாய் தகப்பன் இருக்கின்ற குடும்பங்கள் மட்டுமல்ல தனியாகத் தகப்பன் கொல்லப்பட்டு தாய் மட்டும் இருக்கின்ற குடும்பங்களில் வளர்ந்து வந்த பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போனால் அந்தக் குடும்பத்தின் கதி என்ன? இப்படிப்பட்ட பிரச்சினைகள்.

திருச்சி மண்டலத்திலே இருந்து ஒரு பேத்தியார், அந்த பேத்தியினுடைய இரண்டு பேரக் குழந்தைகள். அவர்கள் இருவரும் பெண் குழந்தைகள். தகப்பன், தாய் இறந்த பின்னர் இன்னொரு திருமணம். எனவே அவர் குடும்பதைப் பார்க்கவில்லை. பேத்தியார் பார்த்தார். இப்படியே இருந்தால் தன்னுடைய குழந்தைகளுக்கு வழியில்லை என்று வேறு ஒருவரின் புத்தியைக் கேட்டு கள்ள வழியாக மன்னாருக்குப் போய், மன்னாரில் பதிந்து விட்டு, கிளிநொச்சிக்குப் போகிறார். கிளிநொச்சிக்கு அவர் போன போது இந்த இரண்டு பெண் பிள்ளைகளையும் பற்றிக் கேள்விப்பட்டு இயக்கம் வந்து சொன்னது உங்களால் பிள்ளைகளைப் பாதுகாக்க முடியாது. பராமரிக்க முடியாது. இயக்கத்திற்குத் தந்து விடுங்கள் என்று கட்டாயப்படுத்தினார்கள்.

பேத்தியார் என்ன செய்வார்? தகப்பனையும் மீறிப் பிள்ளைகளைக் கொண்டு வந்துவிட்டார். இரவோடு இரவாகக் காட்டின் வழியாக வவுனியாவுக்குச் சென்று அங்கு உறவினர்கள் யாரையாவது பார்த்து அவர்களுடன் வாழலாம் என்று. முறைப்படி மன்னாரில் பதிந்து கிளிநொச்சி, இனிமேல் வேறு எங்கும் உதவி எடுக்க முடியாது. இரண்டு மூன்று நாட்கள் வவுனியாவில் பட்டினி கிடக்கின்றார்கள். எமது தொண்டர்கள் அவர்களை அடையாளம் கண்டு விபரத்தை அறிந்தனர். அவர்கள் கூறினார்கள் எப்படியாவது தங்களை இந்தியாவுக்கு அனுப்பிவிடும்படி. ஒரு பிள்ளை இந்தியா வந்துவிட்டது. அடுத்த பிள்ளையின் நிலை? தெரிய வில்லை. இதை நிறுத்த வேண் டும். ஏனென்றால் அமைதி வேண்டும் என்று சொன்னால் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

(16ம் பக்கம் பார்க்க)

அஞ்ஞானம் அகல விஞ்ஞானம்
அறிவாய்க் கற்பாய் எஞ்ஞான்றும்

# அறிவியல் பகுதி

அறிய அறிய உன் அறியாமை விலகும்
தெரியத் தெரிய உன் திறன்கள் ஓங்கும்

## குறுக்கமும் விரிவும்

| | |
|---|---|
| ஆர்.எம்.ஓ.- | (R.M.O- Residential Medical Officer) உள்ளூர் மருத்துவ அல்வலர் உ.ம.அ. |
| ஆர்.ஏ.சி.- | (R.A.C- Reservation Against Cancellation) நீக்கம் நோக்கிய பதிவு நீ.நோ.ப. |
| ஆர்.ஐ.எ.ம்.பி. | -(R.I.M.P-Registered Indian Medical Pratitioner) பதிவுபெற்ற இந்திய மருத்துவப் பயிற்சியாளர் ப.இ.ம.ப. |
| ஆர்.சி. புக் | -(R.C.Book- Registration Certificate Book) பதிவுச் சான்று பொத்தகம் ப.சா.பொ. |
| ஆர்.டி.ஓ. | -(R.D.O- Revenue Divisional Officer) வருவாய்த் துறைக் கோட்ட அலுவலர் வ.கோ.அ. |
| ஆர்.பி.ஐ. | -(R.B.I- Reserve Bank Of India) இந்தியச் சேம வைப்பகம் இ.சே.வை. |
| ஆர்.பி. | -(R.P- Railway Police) தொடர்வண்டித் துறைக்காவலர் தொ.து.கா. |
| எக்ஸ் | -(Ex) மேனாள்- மேனாள் |
| இ.ஓ. | -(E.O- Executive Officer) செயல் அலுவலர் செ.அ. |
| இ.சி.ஜி. | -(E.C.G- Electro Cardiogram) நெஞ்சக மின்வரையம்-நெ.மி.வ. |
| இ.என்.டி | -(E.N.T- Ear Nose Throat) காது மூக்குத் தொண்டை- கா.மூ.தொ. |
| ஈ.மெயில் | -(E-Mail- Electronic mail) மின்னஞ்சல்- மின்.அஞ். |
| எக்சாம் | -(Exam- Examination) தேர்வு- தேர்வு |
| எம்.ஆர். | -(Mr- Master) திருவாளர்-திரு |
| எம்ஆர்.எஸ் | -(Mrs-Mistress) திருவாட்டி-திரு |
| எச்.எம். | -(H.M.- Head Master/Head Miss) தலைமை ஆசிரியர்- த.ஆ. |
| எச்.சி. | -(H.C.-High Court) உயர் நயமன்றம்- உ.ந.ம. |

## தமிழ்ச் சொல்லாட்சிகளும்
## கிறிஸ்துவ வழிபாடும் விழாக்களும்

(பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் நோன்புகளும் கடைப்பிடிகளும் பல்வகை விழாக்களும்)

| | |
|---|---|
| அல்மைட்டி | (Almighty)-கடவுள்/எல்லாம் வல்லான் |
| அனிவர்சரி | (Anniversary)-ஆண்டு விழா |
| ஆர்க்கெஸ்ட்ரா | (Orchestra)-பல்லியம் |
| ஆர்ச் | (Arch)-வளைவு |
| இண்டிபென்டென்ஸ் டே | (Independence day)-விடுதலை நாள் |
| இனாகுரல் அட்ரஸ் | -(Inaugural address) தொடக்கவிழாப் பேருரை/ -தொடக்கப் பேருரை |
| இனாகுரேஷன் | (Inauguration)-தொடக்கவிழா |
| ஓப்பனிங் செரிமனி | (Opening Ceremony)-திறப்பு விழா |
| கலர் லைட் | (Colour light)-வண்ணவிளக்கு |
| காட் | (God)-தெய்வம் |
| காடஸ் | (Godess)-பெண்தெய்வம் |
| கான்வகேஷன் | (Convocation)-பட்டமளிப்பு விழா |
| கான்வகேஷன் அட்ரஸ் | (Convocation address)- பட்டமளிப்பு விழாப் பேருரை |
| கான்வகேஷன் ஹால் | (Convocation hall)-பட்டமளிப்பு விழா மண்டபம் |
| கிராக்கர் | (Cracker)-பட்டாசு |
| கெட்-டுகெதர் | (get-Together)-உவகைக்கூடல்/ தலைக்கூடல் |
| கோல்டன் ஜூபலி | (Golden Jubilee)-பொன்விழா |
| சில்வர் ஜூபிளி | (Silver Jubilee)-வெள்ளிவிழா |
| சீரியல் லைட் | (Serial light)-சரவிளக்கு |
| செண்டினெரி செலபரேஷன் | (Centenary celebration)- நூற்றாண்டு விழா |
| செயின்ட் | (Saint)-முனிவர் |
| டிவோட்டி | (Devotee)-இறைப்பற்றாளர் |
| டிவோஷன் | (Devotion)-பத்திமை |
| டெக்கரேஷன் | (Decoration)-அணிசெய்தல் |
| டெடிகேஷன் | (Dedication)-படையல்/ காணிக்கை/ஈகம் |
| டைமண்ட் | (Diamond Jubilee)-மணிவிழா/ வயிரவிழா |
| நியூ இயர் டே | (New year day)-புத்தாண்டு |
| பங்ஷன் | (Function)-விழா/நிகழ்ச்சி |
| பயர் ஒர்க்ஸ் | (Fire works)-வானவெடி |
| பர்த் டே | (Birth day)-பிறந்த நாள் |
| பாதர் | (Father)-சமயக்குரவர்/அப்பர் |
| பிரேயர் | (Prayer)-இறைவணக்கம்/வழிபாடு |
| பிளாட்டினம் ஜூபிளி | (Platinum jubilee)-பவள விழா |
| பிஷப் | (Bishop)-மேற்காணியர் |
| புரோட்டஸ்டான்ட் | (Protestant)-சீர்திருத்தச் சவைக் கிறித்தவர் |
| புரோபெட்ஸ் | (Prophets)-முற்காணியர் |
| புரொசெஷன் | (Procession)-ஊர்வலம் |
| புரோகிராம் | (Program)-நிகழ்ச்சி நிரல் |
| பெஸ்டிவல் | (Festival)-பண்டிகை/கொண்டாட்டம் |
| பேர்வெல்பார்ட்டி | (Farewell party)-விடையாற்றி விழா |
| பைபிள் | (Bible)-திருநூல்/திருமறை |
| மார்ச் | (March)-அணிவகுப்பு |
| மிரேகிள் | (Miracel)-இறும்பூது |
| மெமெண்டோ | (Memento)-நிறைவுப் பரிசு |
| மெமோரியல் | (Memorial)-நினைவுச் சின்னம் |
| மெரேஜ் | (Merriage)-திருமணம் |
| மேடே | (May day)-தொழிலாளர் நாள்/மேநாள் |
| ரிபப்ளிக் டே | (Republic day)-குடியரசுநாள் |
| ரிலிஜன் | (Religion)-மதம்/சமயம் |
| ரிலீஜியஸ் லீவ் | (Religious leave)-சமயஞ்சார் விடுமுறை |
| ரினோவேஷன் | (Renovation)-புதுப்பித்தல்/சீரமைத்தல்/ புதுக்கு |
| ரோமன் காத்தலிக் | (Roman catholic)-பழஞ்சவைக் கிறித்துவர் |
| ஷீல்டு | (Shield)-கேடகம் |
| ஸ்போர்ட்ஸ் டே | (Sports day)-விளையாட்டு நாள் |
| ஹனிமூன் | (Honey Moon)-தேனிலவு |

## தமிழ் ஒரு செம்மொழி

அதைப் புறக்கணிப்பின் அது அரசியல் காரணமாயிருக்குமேயன்றி வேறல்ல

**அமெரிக்க மொழியியல் அறிஞர் முனைவர் ஜியார்ஜ்.எல். ஹார்ட்**

தமிழ் ஒரு செம்மொழி என்ற தகுநிலை பற்றிய ஒரு விளக்க உரை வழங்க வேண்டுமென்று பேராசிரியர் மறைமலை அவர்கள் (மாநிலக் கல்லூரி சென்னை) கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருடைய வேண்டுகோளைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்று இதனை எழுதுகிறேன்.

1975ஆம் ஆண்டு முதல் பெர்க்கிலி கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் நான் ஒரு பேராசிரியராக உள்ளேன். தற்சமயம் அங்கு தமிழ்த்துறைத் தலைவர். 1970 ஆம் ஆண்டு ஃகார்வர்டு பல்கலைக்கழகத்தில் வடமொழி (சமசுகிருத) பட்டம் பெற்றேன். எனது முதல் அனுபவம் 1969ல் மேடிசன், விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியர் வேலை ஏற்றது தமிழ், வடமொழி தவிர இலத்தீன், கிரேக்க செம்மொழிகளை அறிந்து அவற்றின் மூலம் அந்த இலக்கியங்களையும் மொழி ஒப்பியல் ஆய்வு நூல்களையும் விரிவாகப் படித்துள்ளேன். அவற்றுடன் உருசியன், செர்மன், ஃரெஞ்சு ஆகிய தற்கால ஐரோப்பிய மொழிகளிலும் நல்ல பரிட்சியம் உண்டு. அம்மொழி இலக்கியங்களையும் விரிவாகக் கற்றுள்ளேன். இவை தவிர இந்திய இலக்கியங்களில், தமிழ், மலையாள நூல்களை அம்மொழிகள் வாயிலாகவும் பிறமொழி நூல்களை ஆங்கில மொழி ஆக்கங்களின் வழியும் படித்துள்ளேன். தெலுங்கு மொழியின் தலையாய அறிஞர்களுள் ஒருவரான திரு.வி.நாரயண ராவ் அவர்களுடன் நெடிது உரையாடப் பெற்ற வாய்ப்புக்கள் வழி அம்மொழியின் பாரம்பரியத்தையும் நன்கு அறிவேன். கிழக்காசிய மொழிகள் துறையின் நீண்ட நாள் உறுப்பினன் என்ற முறையில் இந்தி மொழி இலக்கியச் செழிப்பை அறிந்துணரும் வாய்ப்பும் பெற்றேன். துளசி, கபிர், மகாதேவவர்மா நூல்களை ஆழமாகப் பயின்றுள்ளேன்.

நான் இவற்றையெல்லாம் இங்கு சொல்வது,என் அறிவாற்றலை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அன்று. ஒரு இலக்கியத்தின் செம்மொழிப்பாங்கை சீர்தூக்கும் தகுதி எனக்குஉண்டு என்பதை தெளிவு படுத்த மட்டுமே. எவ்வகையான அளவைக் கோட்பாடுகளைத் தேர்ந்து நோக்கினாலும், மேலான உலகப் பாரம்பரியங்கள் செம்மொழி இலக்கியங் களைக்கொண்ட மொழிகளில், நிச்சயமாக தமிழ் ஒரு சிறப்பான இடம்பெற்றுள்ளது என்பதை எந்தத் தயக்கமுமின்றி உறுதியாகச் சொல்ல முடியும்.

இதற்கான காரணங்கள் பல அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். முதலாவதாக தமிழ் மிகத்தொன்மையான மொழி. பிற இந்திய மொழிகளின் முற்கால இலக்கியங்களை விட தமிழ் ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் காலத்தால் முற்பட்டது. தமிழின் பழமையான நூலான தொல்காப்பியத்தின் பகுதிகள், பழைய கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் வைத்து நோக்கும்போது, கி.மு.200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகத் தெரிகிறது. பழந்தமிழின் பெருமைபோற்றும் சங்ககால தனிப்பாடல் திரட்டுக்கள் பத்துப்பாட்டு போன்றவை கி.பி.முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. அவை இந்தியாவில் முதன் முதலாகச் சமயங்களுக்கு அப்பாற்பட்ட, உலகியல் வாழ்வு தழுவிய சிறப்புடைய பாடல் தொகுதிகளாகும்.

இரண்டாவதாக, இந்திய மண்ணின் மணம் கமழும் இலக்கியப் பாரம்பரிமாக, வடமொழித் தொடர்பில்லாது தோன்றிச் செழித்தது தமிழ்மட்டுமே ஆகும். வடமொழியின் தாக்கம் தெற்கே பரவி வலுப்பெறுவதற்கு மிக முன்னதாகத் தோன்றியவை தமிழ் இலக்கியங்கள். அவை பண்பில் தரத்தில் வடமொழி, பிற இந்தியமொழி இலக்கியங்களிலிருந்து வேறுபட்டு நிலைக்கின்றன. தனக்கே உரிய செய்யுள் அமைப்பு முறைகள் இலக்கண பாரம்பரியம் தமிழ் மண்ணில் தோன்றிய முன்னறிவியலின் எழில் தன்னேரில்லாது பரந்துவிரிந்த இலக்கியச் செழிப்பும் தனித்தன்மையும் கொண்டது. ஒப்புவமையற்ற இந்தியப்பண்பாட்டு உணர்வுகளைத் தமக்கே உரிய முறையில், தமிழ் இலக்கியங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. விரிந்து பரந்த மிகச்செழிப்பான, நுண்மாண் நுழை புலன் விளைச்சல் பெட்டகங்கள் அவை. வடமொழி, மற்ற இந்திய மொழிகளில் உள்ளதைவிடப் பெரிதும் மாறுபட்ட, இந்திய அறிவுணர்வை உள்ளடக்கியவை.

மூன்றாவதாக உலகப் புகழ்பெற்ற சமசுகிருத, கிரேக்க, இலத்தீன், பார்சி, அரபியப் பேரிலக்கியங்களுடன் ஒப்பிடும் போது, தரத்தில் முன்னணியில் நிற்கும் தகுதியுடையவை தமிழிலக்கியங்கள். அவற்றின் நுட்பமும், முழுமையும், திண்மையும், உலகளாவிய பல்நோக்கப் பார்வையும், தமிழை உலகின் சிறந்த பண்பாட்டுப் பாரம்பரியங்கள், இலக்கியங் களின் வரிசையில் அமர்த்தும் தகுதியைத் தந்துள்ளன. (முதன்மையான, முதன்மைக்கு அடுத்த நிலையினரல்லாது பொது மக்களைப் பற்றியும் விரிவாகப் பேசும் முற்கால இந்திய இலங்கியங்கள் தமிழில் மட்டுமே உள்ளன.)

## தமிழ்ச் சொற்கள் அறிவோம்

| | |
|---|---|
| போல்ட் | -முடுக்காணி |
| பஞ்சர் | -துளையீடு |
| ஆண்டில்பார் | - கைத்தண்டு |
| பிரேம் | -சட்டகம் |
| போர்க் | -கவை |
| பால்டரசு | -உருள் குண்டு |
| ரிம் | -சக்கரம் |
| டயர் | -குழல்உறை |
| டியூப் | -காற்றுக்குழல் |
| ஆக்சல் | -அச்சு |
| நட்டு | -திருகு |
| மட்கார்டு | -மண்காப்பு |
| கேரியர் | -தாங்கி |
| ஸ்டேண்டு | -நிறுத்தம் |
| பேஜர் | -விளிப்பான் |
| பவர்லூம் | -விசைத்தறி |
| பவர்ப்ரஸ் | -மின்அச்சகம் |
| ஆர்ட்டிஸ்ட் | -கலைஞன் |
| பீரோ | -நிலைப்பேழை |
| அலமாறி | -சுவர்பேழை |
| டிராவ் | -இழுவை |
| கேசட் | -ஒலிப்பேழை |
| பிரஸ் | -தூரிகை |
| ஜட்டி | -உள்ளொட்டி |

## தூரம் தாண்டுதல்

ஒரு பூச்சி நம்முடைய கண்களை நோக்கிப் பறந்து வந்தால், இதையும் விட மூன்று மடங்கு வேகத்தில் கண்இமைகள் மூடிக்கொண்டு விடும்.

குதிரை 37அடி தூரம் பாயும்.
கங்காரு 26அடி தூரம்பாயும்.
"இம்பாலா மான்" 24 அடி தூரம் பாய்ந்து ஓடும்.
சிங்கம் 20 அடிதூரம் பாயும்.
தவளை ஒரே தாண்டலில் 14 அடி தூரம் தாண்டும்.
முயல் 13அடி தாண்டும்.

"இலக்கம் உடம்பு இடும்பைக்கென்று கலக்கத்தை
கையாறாக் கொள்ளாதாம் மேல்"-குறள்

# மருத்துவப் பகுதி

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" - குறள்

## குழந்தைகளுக்கு எப்பருவத்திலிருந்து பழம் கொடுக்கலாம்?

### மருத்துவக் கேள்வி-பதில்

டாக்டர் பத்மா சமரசம், எம்.பி.பிஎஸ். டி.எம்.சி.எச்.

இருதய நோயின் அறிகுறிகள் என்று எவைகளைக் கூறலாம்? - ஆறுமுகம், அரியலூர்.

சாதாரணமான அறிகுறி மார்பில் அசௌகரியமும் வலியும் காணப்படுவதே. நமது மார்பை அழுத்துவதுபோல், கனமாக, கசக்குவதுபோன்ற உணர்வுகள் தோன்றும். இது மார்பின் மையப்பகுதியில் அல்லது மார்பு முழுவதுமாகவும் தோன்றலாம். வலிகுறையும், மீண்டு வரும். சிலருக்குத் தமது கை, கால், கழுத்து, மேல்வயிறு, முதுகு ஆகியவைகளையும் பாதிக்கலாம். இவைத்தவிர மூச்சுத்திணறல், வாந்தி, மயக்கம், வியர்வை விடுதல் போன்ற உணர்வுகளும் ஏற்படலாம். இவை அறிகுறிகள் மட்டுமே. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு காரணங்களும் மருத்துவங்களும் உள்ளன.

வயிற்றுப்புண் உள்ளவர்கள் நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உட்கொள்வதால் நன்மையுண்டா? - அமிர்தம், உதகை.

உதவும் என பொதுவாக கூறப்படுகிறது. அத்தகைய உணவுகளை நீங்கள் உண்ணும் போது அதிகமாக மென்று நிதானமாகச் சாப்பிட வேண்டியுள்ளது. இது வாயில் உமிழ்நீர் அதிகம் சுரந்து இரைப்பையில் உணவு சீரணமாக உதவுகிறது.

மது அருந்துவது நமது நரம்பு மண்டலத்தையும் பாதிக்கும் என்பது சரியா? - பால்ராஜ், மதுரை.

மிக மிகச் சரி. நமது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் பொருள்களில் மது முக்கியமானது. தொடர்ந்து அதிக அளவில் இந்தக்காலம் மது அருந்துபவர்களின் கை, கால் நரம்புகள் பலவீனமடைந்து ஹெராலி சிஸ் ஏற்படும். மது மூளைத் திசுக்களை கொல்லும். இது அதிகமானால், நினைக்கும் ஆற்றலும், நினைவாற்றலும் குறையும்; மறையும்.

எனக்குச் சில பொருள்களின் வாசனை சரியாகத் தெரிவதில்லை. இது எதனால் ஏற்படுகிறது.? - நாகம்மாள், தேனி.

நீங்கள் மூக்குப் பொடி போட்டால் இந்தக்குறை ஏற்படும். இது தவிர சில மருந்துகளை உபயோகித்தாலும், ஒவ்வாமையாலும், (அலர்ஜி), ஜலதோஷம், சைனஸ், மூக்கில் சதை வளர்ச்சி போன்ற பிரச்சினையாலும் ஏற்படலாம். ஈ.ஓ.ஜி என்ற எக்ஸ்ரே ஆல்பாக்டோகிராம் கருவி மூலம் சோதித்து உங்களது வாசனைத் திறன் குறைப்பாட்டை அறியலாம். இதற்கு ஸ்டீராஜிட் நேசல் ஸ்பேரே நல்ல நிவாரணம் கொடுக்கும்.

மார்பு எக்ஸ்ரே எடுப்பது ஆபத்தானது, புற்றுநோயை ஏற்படுத்தும் என்பது உண்மையா? - வல்லரசு, தருமபுரி.

எக்ஸ்ரே என்ற கதிரியக்கம் கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால், நமது மருத்துவம் இந்த அளவு வளர்த்திருக் காது. தோளுக்குக் கீழே இருக்கும் பலவற்றை அறிய, இதுதான் நமக்கு உதவுகிறது. ஆனால் அடிக்கடி மார்பை எக்ஸ்ரே எடுப்பது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் உண்மை. எனவே, நீங்கள் எப்போது எக்ஸ்ரே எடுத்தீர்கள் என்ற விவரங்களைக் குறித்து வைத்துக் கொண்டு மருத்து வரிடம் கூறி அடிக்கடி எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

வாய், தொண்டை புற்றுநோய் அதிகமாகி வருவதாகக் கூறப்படுகிறதே, இது எதனால்? - முத்துசாமி, பாளையங்கோட்டை.

வாய், தொண்டை புற்றுநோய் வர முக்கிய காரணம் புகைப்பிடித்தல், மூக்குப்பொடி, புகையிலையை வாயில் போட்டு மெல்லுதல், மது அருந்துதல் இவை நாகரீகத்தின் பெயரால் அதிகரித்து வருகின்றன. அதனால் வாய்ப்புற் றுநோய் அதிகமாகிறது. இது தவிர, வைட்டமின் ஏ, பி உயிர்ச்சத்துக்கள் குறைவினாலும் இந்தப் புற்றுநோய் வர வாய்ப்புள்ளது.

குழந்தை பிறந்து எத்தனை நாட்களுக்குப் பிறகு ஒரு தாய் தேகப்பயிற்சி செய்யலாம்? - ரோஸ் மேரி, திருச்சி.

சாதாரண குழந்தைப் பிறப்பாக இருந்தால், இரண்டு, மூன்று நாட்களுக்கு இலேசான தேகப்பயிற்சிகளை தொடங் கலாம். அறுவைச்சிகிச்சையாக இருந்தால், சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும். பொதுவாக மருத்துவர் களே, தாயின் வயிறு, முதுகு தசைகள் சுருங்க சில தேகப்பயிற்சிகளைச் செய்யுமாறு அறிவுறுத்துவார்கள்.

குழந்தைகளுக்கு எந்த வயதிலிருந்த பழம் கொடுக்கலாம்? - தாமரைச்செல்வி, திருச்சி.

ஐந்தாவது மாதத்திலிருந்தே ஆப்பிள், வாழைப்பழம், பப்பாளி ஆகிய பழங்களைக் கொடுக்கலாம். வாழைப்பழங்களில் ரஸ்தாளி வகை மலச்சிக்கல்களை ஏற்படுத்தும். மலை வாழைப்பழம் நல்லது. ஒன்றரை வயதிற்குப் பிறகு சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற வைட்டமின் சி சத்துள்ள பழங்களைக்கொடுக்கலாம். காய்ந்த திராட்சை, பேரீட்சைபழம் ஆகியவைகளையும் கொடுக்கலாம்.

ஒரு குறளை உணர்வோம்..
(02ம் பக்கத் தொடர்ச்சி)

முதுமைக் காலத்திற்கும் (இளமைப்பருவம், நடுவயதுப் பருவத்திற்கும்தான்) பொருத்தமாக இருப்பதைக் காணலாம்.

மேலும், ஒவ்வொரு குறட்பா மூலமும் தனித்தனி நீதியைப் புகட்டியுள்ள திருவள்ளுவர், காமத்துப்பாலில் மட்டும் நாடகப் பாங்கில் பல குறட்பாக்களையும் இணைத்தே பொருள் வருமாறு புகன் றுள்ளார் என்பது பொருத்த மாகப் படவில்லை. அம்முறை யில் இக்குறட்பா மூலம் திவள்ளுவர் சொல்லும் நீதி என்னவெனில்-

"ஏ மாந்தனே! உன் மதி தடுமாறி உன்னிடம் இயலாமை படரும் உன் முதுமைக்காலம் வரும்முன்பே நீ செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிடு. இல்லை யென்றால், முதுமையால் மதி தடுமாறி நீ துன்புறும் பொழுது, உன் இளமைக் காலத்தில் உன்னால் பயன்பெற்ற உன் ஊரார், அதை நினைக்க மறந்து தடுமாறி, உன் இயலாமையைச் சுட்டிக்காட்டி உனக்கு மேலும் துன்பம் தருவர்" என்பதாகும்.

### கம்பீரம்!

அடித்துப் பார்த்தோம்
உயிரோடு எரித்துப்
பார்த்தோம்
தரை மட்டமாய் - ஊரையே
தகர்த்தும் பார்த்தோம்
தமிழ் ஈழக் கொள்கையைத்
தட்டிப்பறிக்க
முடியவில்லையே!
இத்தனை உறுதி
படைத்தவர்களா
இந்தத் தமிழர்கள்?

தன்மானக் கூட்டத்தின்
தன்னம்பிக்கை கண்டு
திகைத்து நிற்கிறது
அந்த சிங்களப்
பேரினவாதக் கூட்டம்!
குரல்வளைகள்
நசுக்கப்பட்டும்
இவர்கள் குரல் எப்படி
இவ்வளவு கம்பீரமாக?
அந்தப்
பெரும்பான்மை இனம்
எங்களைப்
பிரம்மிப்போடு பார்க்கிறது!

சு. சிவா.

## இராயனூர் இலங்கை அகதிகள் குடியிருப்பில் மாபெரும் மருத்துவ முகாம்





அக்டோபர் 5ம் தேதி திருச்சி மண்டல பணிமனையில் தாம் பெற்ற கல்வியினால் எம் மக்கள் மத்தியில் அரும்பெரும் பணியாற்றிவரும் மருத்துவர் ஜெய்கணேசன் அவர்களின் பெருமுயற்சியினால், குழந்தை யேசு மருத்துவமனை, ஜோசப் கண் மருத்துவமனை இவற்றைச் சேர்ந்த மருத்துவர்களும் தாதிகளும் இராயனூர் முகாமுக்கு வந்து சிறப்பு மருத்துவ முகாம் ஒன்றினை நடாத்தினர். இவ்விசேட முகாமிற்காக பரிசோதனை மையம் ஒன்றும் அமைக்கப் பட்டிருந்தது. முன்னதாக முகாம் நலப் பணியாளர் திருமதி. கனகாம்பிகை அவர்கள் விளையாட்டுக் குழு, மாணவர் மன்றம், சி.பி.ஆர். குழு, சுய உதவிக் குழுக்களின் உதவியோடு சிறப்பான முன்னேற் பாடுகளை செய்து வைத்தி ருந்தார். திருச்சி மண்டல ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக மருத்துவப் பிரிவினர் தேவையான மருந்துகளை இம்முகாம் சிறப்புற நடப்பத ற்காகக் கொடுத்துதவினர்.

இம் மருத்துவ முகாமில் 385 நபர்களுக்கு மேல் பயன் பெற்றனர் இவர்களில் 77 நபர்கள் கண் பரிசோதனையும், பெண்ணியல் தொடர்பான நோய்க்கு 50 நபர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர். இம்முகாமினை அருட்சகோதரி மருத்துவர் தெராசா, மருத்துவர் பலிவந்த, மருத்துவர் சுப.ஜெய கணேசன் ஆகியோர் சிறப்புற நடத்தினர். கண் பரிசோதகர்கள் திரு. அலோசியஸ், திரு சாமுவேல் ஆகியோருடன் அருட் சகோதரிகள் பலரும், தாதியர் பலரும் இணைந்து சேவையினை நல்கினர். கழகத் தொண்டர்களும் இம்முகாம் சிறப்பாக நடைபெற தம் உழைப்பினை நல்கினர்.





மாலை 4 மணியளவில் இச்சிறப்பு மருத்துவ முகாம் நிறைவுற்றது. இவ்வரிய சேவையினால் இராயனூர் அகதி முகாம் மக்கள் பெரிதும் பயன் பெற்றதோடு நோயற்ற வாழ்வினை வாழ எப்படி தாம் சுத்தம் பேணி வாழ வேண்டும் என்ற விழிப்புணர்வையும் பெற்றுக் கொண்டதை அறியக்கூடியதாக இருந்தது. அனைவரின் சேவைக்கும் எம் இனிய வாழ்த்துக்கள்.



# குயுக்தியார் பதில்கள்

## இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமை கிடைக்குமா?

மா. சந்திரன்- வத்தலக்குண்டு.
கேள்வி:- சந்திரிகா-ரணில் மோதலுக்கும் பிரபாகரன்-கருணா மோதலுக்கும் என்ன வித்தியாசம்?
பதில்:- தமிழர்களுக்கு எந்த நன்மையும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை மையமாகக் கொண்டதே சந்திரிகா-ரணில் மோதல். அதனால், சிங்களருக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. பிரபாகரன்-கருணா மோதலோ தீங்குகள் அனைத்தும் தமிழர்களுக்கே விளையுமாறு நடப்பது. முன்னது சிங்களருக்கு யாரால் அதிக நன்மை என்பதை முன்வைத்து நடப்பது. பின்னது தமிழ்க் குடிக்கு அதிகமாக யாரால் ஆபத்தை உண்டாக்க முடியும் என்பதை முன்வைத்து நடப்பது.

ப. நித்தியானந்தன், வேலூர்.
கேள்வி:- தமிழர்களிடையே உள்ள சனநாயக வாதிகளைப் புலிகள் கொன்று குவிப்பதை இனியும் பொறுக்கமுடியாது என்று சந்திரிகா எச்சரித்து இருக்கிறாரே?
பதில்:- ஆம், "எங்கள் உடன்பாட்டோடு முடிக்க வேண்டியதெல்லாம் முடித்து விட்டீர்கள். இனியும் எங்கள் (சிங்களர்) உடன்பாடின்றித் தமிழர்களை முடிப்பதைப் பொறுக்க முடியாது. அதற்கு முன் எங்களுடன் உடன்பாடு செய்து கொள்ளுங்கள்" எனச் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

ஆர்.எஸ்.நிக்லஸ், ஆரணி.
கேள்வி:- புலிகளின் பலமே வெளிநாட்டுத் தமிழர்களின் ஆதரவு என்று நினைத்துக் கொண்டிருக்கையில் நோர்வே தமிழர்கள் புலிவாலைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஈரோஸ் பாலகுமாருக்கு எதிராகத் துண்டறிக்கை வெளியிட்டிருப்பது எதைக் காட்டுகிறது?
பதில்:- புலம் பெயர்ந்த தமிழ்மக்களும் விழிப்படைந்து வருகிறார்கள் என்பதை!

பி.மக்ரூப், ஏர்வாடி.
கேள்வி:- பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும் போது எங்களுக்கும் பிரதிநித்துவம் வேண்டும் என்று முழங்கிய சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் இன்று அது முடங்கிக் கிடக்கையில் மூச்சு விடுகிறார்களில்லையே அது ஏன்?
பதில்:- யாராவது பந்திக்கு ஏற்பாடுசெய்தால் அதிலே முந்தி உட்கார முனைபவர்களைப் பற்றிக் கேட்கக்கூடாத கேள்வி இது.

கி. எதிர்மனசிங்கம், இராமநாதபுரம்.
கேள்வி:- வடக்கு கிழக்கில் தமிழர்கள் இடதுசாரிகளைத் தேர்ந்தெடுக்காததுதான் இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணம் என்கிறார் ஒரு தோழர் உண்மையா?
பதில்:- பெரும்பாலும் இடதுசாரிகளையே (தமக்கு வாக் குரிமை இருந்தவரை) தேர்ந்தெடுத்த மலையகத் தமிழர்களுக்கு அவர்கள் பெற்றுக் கொடுத்த நன்மை என்ன? நாடற்றோர் என்பதுதானே! அதுபோல் நடக்க, வடக்கு கிழக்குத் தமிழ்மக்கள் இடம் கொடுக்கவில்லை என்பதே உண்மை.

ரி. கணேசலிங்கம், சென்னை 90.
கேள்வி:- ஈழத்தமிழ்மக்கள் எம்மை மட்டுமே ஆதரிக்கிறார்கள். அதனால் நாங்களே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதி என்கிற புலிகளின் கூற்று எப்படி?
பதில்:-ஆயுதங்களை முற்றாகக் களைந்துவிட்டு அதன் பிறகு தமிழ்மக்கள் ஆதரிக்கிறார்கள் என்பதை நிரூபிப்பார்களானால்தான், அது பொருந்தும்.

கே.இசாக்கியேல், மதுரை.
கேள்வி:- இனப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணப்பட்டதும், அகதிகளாகப் புலம்பெயர்ந்த எல்லாத் தமிழர்களும் இலங்கைக்கு திரும்பி விடுவார்களா?
பதில்:- இந்தியாவிலுள்ளோர் அநேகமாகத் திரும்பி விடுவர். அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் உள்ளவர்களைப்பற்றி அப்படிச் சொல்ல இயலாது.

சி.சிவபாதசுந்தரம், கோவை
கேள்வி:- போகிற போக்கைப் பார்த்தால், ஈழம் கனவாக முடிந்து விடும்போலிருக்கிறதே?
பதில்:-நினைவு கனவாவதும், கனவு நனவாவதும் காலத்தின் கையில் உள்ளது. அதனால்தான், "காலம் கருதி இருப்பர் கலங்காது ஞாலம் கருதுபவர்" என்றார் திருவள்ளுவர்.

ஜெ.மௌலானா, நம்புதாழை
கேள்வி:- இலங்கைத் தமிழ்பேசும் மக்களை எல்லாம் ஒருங்கிணைக்கும் தந்தைசெல்வா போன்ற தலைமை அங்கு மீண்டும் உருவாகுமா?
பதில்:- தந்தை செல்வா போட்ட தண்டவாளம் அப்படியே இருக்கிறது. அதில் வண்டி ஓட்டினால் போதும் வந்துவிடும் அத்தலைமை.

நா.கேதீஸ்வரன்; திருவில்லிப்புத்தூர்.
கேள்வி:- இந்தியாவில் அகதிகளாக உள்ள இலங்கை மலையகத் தமிழர்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமை பெற்றுக் கொடுக்க தந்தை செல்வாவின் மைந்தர் திரு. சந்திரகாசன் முயற்சி எடுப்பதை 'ஈழ சுதந்திரன்' மூலம் அறிந்தேன். அப்படி அவர்களுக்கெல்லாம் பிரஜாவுரிமை கிடைக்குமா? இந்திய அரசாங்கம் அதற்கு ஒத்துழைக்குமா?
பதில்:-பிரஜாவுரிமை இல்லாமல் அவர்கள் நாடு திரும்பி என்ன செய்வது? அகதிகளாக வெளியேறிவர்கள் நாடு திரும்பினார்கள் என்று காட்டாமல் இலங்கைக்குப் பன்னாட்டு நிதியுதவி கிடைக்காது. இந்தியாவிலிருந்தன்றி மற்ற நாடுகளில் உள்ளவர்கள் உடனடியாக நாடு திரும்பும் வாய்ப்பும் இல்லை. அதனால் இலங்கை அரசு அவர்களுக்குப் பிரஜாவுரிமை கொடுத்துத்தான் ஆக வேண்டும். அதுபோல இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளில் கணிசமானபேர் மலையகத் தமிழர்கள் என்பதால், பிரஜாவுரிமையின்றி அவர்கள் நாடு திரும்பச் சம்மதிக்க மாட்டார்கள் என்பதால், இந்திய அரசும் நிச்சயம் இதற்கு ஒத்துழைக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சமுதாயம் தொடர்ந்தும் நாடற்றோராக உள்ளதை உலக நாடுகள் ஏற்கமாட்டா.

ஆகவே, காலம் அறிந்து இடம் அறிந்து திரு. சந்திரகாசன் எடுத்துள்ள இம்முயற்சி நிச்சயம் வெற்றிபெறும். தந்தை தொட்ட பிரச்சினையை மைந்தர் முடித்து வைத்தார் என்ற பெயர் அவருக்குக் கிடைப்பது வரலாற்றுக் கட்டாயமாகும். மலையக மக்கள் அமைப்புக்கள் இதில் அவருடன் ஒத்துழைத்தால் விரைவில் பலன் கிடைக்கும்.

## ஈழசுதந்திரன் இணையற்ற சுதந்திரன்

### இம்மாதச் சிறப்பு மடல்

அன்புள்ள ஆசிரியரே,

புரட்டாசி-ஐப்பசி ஈழசுதந்திரன் இதழின் முதல் பக்கச் செய்தி சிந்தனையைத் தூண்டும் அருமையான படைப்பு. 'தெளிவு' ஆசிரியவுரை இதயத்தை வருடும் எழுத்தோவியம் கழகச் செயலாளர் அம்மையாருடைய பிறந்த நாள் செய்திகள், கவிதைகள் தன் அன்னை மற்றும் தன் உடன் பிறப்புக்களுடன் அவருடைய நிழற்படங்கள் அனைத்தும் முகாம் மக்களுக்கு நல்விருந்தாக அமைந்தன.

என்ன ஒரு குறையென்றால், தலைமையகத்தில் நடக்கும் எல்லா நிகழ்வுகளுக்கும் முகாம்களில் உள்ளவர்களுக்கு அழைப்பு அனுப்பும் கழக முகாமையாளர், தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அகதிச் சமுதாயத்திற்கு அர்ப்பணித்து, தன்னலமற்ற பணிபுரியும் அம்மையாருடைய பொன் விழாவில் நாங்கள் பங்குபற்ற அழைப்பு விடுக்கவில்லை என்பதுதான்.

ம.சக்காரியஸ் அவர்களுடைய அகதிப் பெண்களின் மேம்பாட்டில் சுயஉதவிக் குழுக்களின் பங்களிப்பு என்ற கட்டுரையும், இலங்கைச் செய்திகள் மற்றும் முகாம்களில் நடக்கும் நற்பணிகள் கல்வி சம்பந்தமான உரையாடல்கள். ஈரோஸ் பாலாவுக்கு நோர்வேயில் நடந்த நிகழ்வு போன்றவை நல்ல தகவல்களாகும். பாலாவைப் பின்பற்றிய பலர் இன்னும் தமிழகத்தில் இலைமறைகாய்கள் போலத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வாசகர் நெஞ்ச மடல்கள் பலருடைய உள்ளக் குமுறல்களை அறிய வாய்ப்பாக இருந்தன. ஈழத்து நடிகர் விஜயேந்திரனின் மறைவும் பூதத்தம்பி அவர்களுடைய மறைவும் பற்றிய செய்திகளை வெளியிட்டமைக்கு நன்றி.

எமது கொட்டப்பட்டு முகாமில் உள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் கடந்த மாதம் 3 நாள் திருப்பலி பூசை நடந்தது. அதை நடத்திய அருட்தந்தையார் ஈழத்தின் சாத்வீகப் போராட்டம் பற்றியும், செல்வா அவர்களுடைய சிந்தனைகள் செயல்பாடுகள் பற்றியும் ஆராதனையின்போது நல்லபடியாக எடுத்துச் சொன்னது சிறப்பாக அமைந்திருந்தது. ஈழசுதந்திரன் அது போன்ற நல்ல சிந்தனைகளைப் பலரிடமும் ஏற்படுத்தி வருவதைப் பாராட்டுகிறேன்.

-அ. அண்ணாமலைரெட்டி, திருச்சி

## புதிய நிருவாகிகள்...

(09ம் பக்கத் தொடர்ச்சி)

5. ஊட்ட நலச்சேவையில் பச்சைப்பாசி வளர்ப்புப் பணி.
6. திருகோணமலையில் சுற்றுலாத் தளம் அமைந்துள்ளதால் அந்தப் பணி தொடர்பான பயிற்சி அளித்தல்.

அங்கு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள்:-

1. வேப்பம் புண்ணாக்குத் தயாரித்தல், வேம்பில் கிருமி நாசினி தயாரித்தல்.
2. பி.ஏ., வரலாறு படித்த மாணவர்களை ஒரு குழுவாக அமைத்து இலங்கையில் ஒரு தொல்லியல் ஆய்வு மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு கணினி அறிவும் வழங்குதல்.

மேற்கூறியவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கை திரு. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு. ரத்தினராஜசிங்கம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பின்னர், தற்காலிகத் தலைவர் அருட்தந்தை சாம் கோயில்பிள்ளை அவர்களின் முன்னிலையில் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க, முனைவர் அரு. கோபாலன் அவர்களை திரு. இரா. பத்மநாதன் முன்மொழிய, திரு. கிறிஸ்டோபர் வழிமொழிய அவையோரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்து துணைத் தலைவர்களாக திருமதி. தர்மாகந்தவேள், திரு. தெய்வேந்திரன் ஆகியோரை கௌரவ செயலாளர் செல்வி. சூரியகுமாரி முன்மொழிய, திரு. தயாநிதி வழிமொழிய ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கழகத்தின் செயலாளராக செல்வி. சி. சூரியகுமாரி அவர்களை செல்வி. வி. தேன்மொழி முன்மொழிய, திரு. ரத்தினராஜசிங்கம் வழிமொழிய அவையோர் அகமகிழ்வுடன் ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர்.

இணைச் செயலாளராக திருமதி. பிரிஜ்ஜெட் ரெக்ஸ் அவர்களை திரு. ரத்தினராஜசிங்கம் முன்மொழிய, திருமதி. மாணிக்கவாசகர் வழிமொழிய, அவையோரால் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கழகத்தின் பொருளாளராக திரு. சா.செ. சாந்திரகாசன் அவர்களை திரு. அன்பு செல்வராஜ் முன்மொழிய, அருட்தந்தை சாம்கோயில் பிள்ளை மற்றும் திரு. இரா. ஈஸ்வரன் ஆகியோர் வழிமொழிய அவையோர் அகமகிழ்வுடன் ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர்.

இணைப் பொருளாளராக திருமதி. அகிலா ரத்தினராஜசிங்கம் அவர்களை செல்வி. க. ஸ்ரீலக்ஷ்மிபிரியா முன்மொழிய, திருமதி. தர்மாகந்தவேள் வழிமொழிய அவையோரால் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முகாமைக்குழு உறுப்பினர்களாக பின்வருவோரை திருமதி. அகிலா ரத்தினராஜசிங்கம், செல்வி. வளர்மதி ஆகியோர் முன்மொழிய, செல்வி. வி. தேன்மொழி வழிமொழிந்தார்.

01. திரு. மு. மகேஸ்வரன்.
02. திரு. சிவானந்தம்.
03. திருமதி. மாணிக்கவாசகர்.
04. திருமதி. பிரேமா.
05. திருமதி. தனலட்சுமி.
06. திருமதி. கா. பானுமதி.
07. திருமதி. சாம் கோயில் பிள்ளை.

பின்னர், 2004 - 2005 ஆம் ஆண்டிற்கான கணக்கு ஆய்வாளராக BALU ASSOCIATES ஐ கௌரவ பொருளாளர் முன்மொழிய, திரு. மு. மகேஸ்வரன் வழிமொழிய, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், கழகத்தின் 20 ஆண்டுகள் சேவையினைப் பாராட்டி திருச்சி மண்டல திட்டப்பகுதி 1 ன் ஒருங்கிணைப்பாளர் திரு. செல்வரட்ணம் ஒரு கவிதையை வாசித்தார்.

(14ம் பக்கம் பார்க்க)

கனவு காணு
கவிதை வரும்
மூளையை கசக்கு
முத்தாய் உதிரும்

# கவிதைச் சாரம்

கருத்துக்களை
சொல்லால்கட்டு
அதுதான் கவிதை

## தமிழன்னை பூரிப்பால் மகிழ்கின்றாள்!




சத்தான பூந்தமிழை உலக ரங்கில்
சரியான இடம் வைத்து மகிழ்ந்த வர்தாம்
வித்தான செந்தமிழின் தொன்மை கண்டு
வியப்புற்றுச் செம்மொழியே என்று ரைத்தார்!

தமிழ்ச் சான்றோர் கனவுதனை நனவாய் ஆக்கித்
தமிழுக்குப் பெருமைதனைத் தேடித் தந்த
தமிழ்ச் செம்மல் நம்கலைஞர் நீடுவாழ
தமிழ்கூறும் நல்லுலகம் வாழ்த்தக் கண்டோம்!
தமிழ்ப்பகைவர் நமைக்கண்டு அஞ்சு கின்ற
தகுதியினை நாம் பெற்றோம் கலைஞ ராலே!
தமிழ்க் கடலாம் நம்கலைஞர் வாழும் நாளில்
தமிழ்நாட்டில் நாம்வாழும் பெருமை பெற்றோம்!

தமிழாலே சிலருக்குப் பெருமை சேரும்;
தமிழுக்கோ அவராலே பெருமை உண்டோ?
தமிழாலே சிலருக்குப் பிழைப்புக் கூடும்;
தமிழென்றும் அவராலே பிழைப்ப தில்லை!
தமிழாக வாழ்கின்ற கலைஞ ராலே
தமிழுக்கோ என்றென்றும் பெருமை யுண்டு!
தமிழாளும் தகுதியினைப் பெற்று விட்டால்
தமிழர்க்கோ என்றென்றும் பெருமை தானே!

மூச்செல்லாம் தமிழாக வாழுகின்ற
முத்துவேலர் அஞ்சுகத்தாய் பெற்றெ டுத்த
ஏச்செல்லாம் எருவாக எண்ணி வாழும்
ஏந்தலாம் கலைஞரவர் புகழ்ம ணக்க
பேச்செல்லாம் அவர்புகழைப் பரப்ப வேண்டும்!
பெருங்கவியால் அவர்புகழைப் பாட வேண்டும்
வீச்செல்லாம் எதிரிகளை வீழ்த்து கின்ற
விவேகத்தை நம்தமிழர் வளர்க்க வேண்டும்!

செந்தமிழைச் செம்மொழியாய் ஆக்க வேண்டித்
தினந்தோறும் தமிழறிஞர்கள் கோரிவந்தும்
சிந்தையிலே ஏற்காமல் இருந்தோ ரெல்லாம்
சிறுமதியால் நாணமுற்றுத் தலைகுனிந்தார்!
நந்தமிழைச் செம்மொழியே என்னும் ஆணை
நம்நெஞ்சில் நறுந்தேனாய்ப் பாயக் கண்டோம்!
விந்தைமிகு செந்தமிழை உலக ரங்கில்
மேன்மைபெறச் செய்தோர்க்கு நன்றி சொல்வோம்!


தமிழன்னை பூரிப்பால் மகிழு கின்றாள்
தமிழுக்குக் கிடைத்திட்ட பெருமை கண்டு
தமிழன்னை முடிசூடி ஆண்ட போது
தான் பெற்ற பெருமையிலும் பெருமை என்று!
தமிழன்னை உளமார வாழ்த்து கின்றாள்
தரணியெலாம் தன்புகழும் ஓங்கும் என்றே
தமிழன்னை "சோனியா, மன்மோகன் சிங்"
தழைத்திடவே வாழ்த்துரை நல்குகின்றாள்!

ஆறுகோடித் தமிழர்தம் நெஞ்ச மெல்லாம்
ஆனந்த வெள்ளத்தில் மூழ்கக் கண்டோம்!
நூறுகோடி கொடுத்தாலும் கிட்டி டாத
நூறாண்டு போராட்டத் தமிழர் நெஞ்சம்
ஏறுநடை போடுவதில் மகிழக் கண்டோம்.!
எதிர்கால வரலாற்றில் மன்மோ கன்சிங்
வீறுநடை சோனியாவின் பெயர்களோடு
வித்திட்ட கலைஞர்தம் பெயர் மணக்கும்!

இத்தாலி நாட்டினிலே பிறந்த வர்தாம்
இந்தியாவில் மருமகளாய் வந்த வர்தாம்
முத்தான நம்கலைஞர் வேண்டு கோளை
முன்னின்று நிறைவேற்றி வைத்த வர்தாம்

-பெருங்கவிஞர் நெ.அ.பூபதி

## "செம்மொழி கொண்டான்" என்று கலைஞருக்கு செகத் தமிழர் புகழ் மாலைகள்!



இந்திய ஆளுங்கூட்டணியில் முக்கியத்தலைவர்களில் ஒருவரும் தமிழக முன்னாள் முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதி அவர்களை தமிழைச் செம்மொழியாக்குவதில் வெற்றிபெற்றதற்கு உலகத் தமிழர்கள் அனைவரும் புகழ்மாலை சூட்டுகின்றனர்.

## புதுமையான முசுலிம் வங்கி

பிரித்தன் நாட்டில் முசுலிம் வைப்பகம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் சிறப்பு என்ன? அங்கே கடன் வாங்கினால் வட்டியில்லை. அங்கே உங்கள் பணத்தைப் போட்டு வைத்தால் வட்டி கிடைக்காது.

இதன் பணத்தை எல்லா வைப்பகங்களிலும் போட்டுவைக்க மாட்டார்கள்.

புகையிலை, மது, பாலியல், படங்கள், நூல்கள் வெளியிடும் நிறுவனங்களில் பணம் போடமாட்டார்கள்.

முசுலிம்கள் அதிகமாக வாழும் 'பருமிங்காம்' என்னும் இடத்தில் இவ்வைப்பகம் அமைந்துள்ளது.

## புதிய நிருவாகிகள்...

(13ம் பக்கம் தொடர்ச்சி)

புதிய முகாமைக்குழு சார்பில் நன்றி நவின்ற செயலளார் செல்வி. சூரியகுமாரி, கூறியதாவது: 20 வருடங்களுக்கு முன்னர் கௌரவப் பொருளாளர் ஐயா அவர்கள் இக்கழகத்தை உருவாக்க வேண்டுமென வித்திட்டார். ஆலமரம் போல் விழுது விட்டு இன்று இக்கழகம் வளர்ந்திருக்கின்றது என்றால் அதற்கு கழகத்தின் தொண்டர்களின் கடினமான உழைப்பே காரணமாகும். இந்த 20 வது வருடம் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட அதே வைகாசி 21 ஆம் திகதி இலங்கையிலும் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை நினைக்கும் போது மிகவும் சந்தோஷமாகவும், பெருமையாகவும் உள்ளது. இவ்வாறான வளர்ச்சிக்கு கழகத்தில் சேவையாற்றும் ஒவ்வொரு தொண்டர்களின் அயராத உழைப்பும், ஈடுபாடுமே காரணம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் மீளவும் தெரிவித்துக் கொள்வதில் பெருமை கொள்கின்றேன்.

ஆனால் இனிவரும் காலம் கரடுமுரடானது. எனவே, அந்தப் பாதையிலும் நாம் சென்று எமது உன்னத சேவையை எவ்வித தொய்வும் இன்றி மேற்கொள்ளத் தங்களின் முழு ஒத்துழைப்பு எமக்குத் தேவை. இப்போது உள்ளது ஒரு நம்பிக்கையற்ற சூழல் (Hopeless Situation.) மக்கள் தற்போது நாடு திரும்பும் எண்ணத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றனர். நான் எமது தாயகத்தை விட்டு வந்தபோது இருந்த இலங்கைக்கும் தற்போதுள்ள இலங்கைக்கும் மிகவும் வேறுபாடு உள்ளது. அந்நாட்டில் இப்போது அந்நிய மோகம் தலை விரித்தாடுகின்றது. இந்தியாவில் இருந்து வந்த அகதிகளை அங்குள்ள மக்கள் இருகரம் நீட்டி வரவேற்கின்றனர். ஆனால் வெளிநாட்டிற்குச் சென்று திரும்பிய அகதியை ஒரு உல்லாசப் பயணியாகத் தான் கணிக்கின்றனர். இப்படியான நிலையில் எமது மக்களை நாம் எப்படித் தயார் படுத்தப் போகின்றோம் என யோசிக்க வேண்டும். எமது அனைத்துச் செயற்பாடுகளுக்கும் முழு ஒத்துழைப்பைக் கோரி, என் நன்றியுரையினை இனிதே நிறைவு செய்கின்றேன் என்று கூறி விடைபெற்றார்.

அறிக்கை தொகுப்பு:
செல்வி.க.லக்ஷ்மி பிரியா
(ஈரோடு மண்டலம்)
உதவி:திரு.சே.செல்வரத்தினம்
(திருச்சி மண்டலம்)

## சுவடுகளைத் தேடு!

மனிதா! வாழ்க்கைக் கடலோரம்
உன் சுவடுகளை
அழியா வண்ணமாக்கு
உன் நினைவலைகள்
நாளைய மனிதனின் வழியாகும்
உன் மனமெனும்
மணற்பரப்பை மிதித்துச் சென்ற
அந்தப்புனித மனிதர்களின்
அன்புப் பாதச்சுவடுகளைத் தேடு
அதுதான் உன் பயணக்கோடு
உடம்பை வளர்த்து
அறிவை இளைத்துப் போகச் செய்வதில்
என்ன பயன்? - மனிதா
உன் உடம்பில்
கருணைக் குருதியைச் சுரக்கச் செய்
செயல்களுக்குச் செப்பம் போட்டு
உன் சிந்தனை முயலுக்கு
புதுமுகம் காட்டு
பசுமை இருக்கும்வரை சோலை
இளமை போனபின் நீ பாலை?
நாளை என்ன விதைப்பதென்று
உன் நம்பிக்கைக்குச் சுறுசுறுப்பூட்டு
காலம் உன்னை விதைத்தது
மனிதத்திற்காக - நீ என்ன விதைத்தாய்?
என்பதைக் கணக்கிடு
அந்தக் கணக்கின் கூட்டல் கழித்தலில்தான்
உன் மனிதத்தின் மதிப்புரை
மதிப்பெண் பெறும்!

- கவிசுரபி. சுப.சந்திரசேகரன்

## இன்று நான்...

இன்று
குடும்பத்தை நடத்த மட்டுமல்ல - பல
குழுக்களையும் வழி நடத்த
பூவைப்போல மென்மையாய் மட்டுமல்ல
புயல் காற்றைப் போல செயல்பட
என் நடைகளை மட்டுமல்ல - பலரின்
பாதைகளைச் செப்பனிட
தோல்வியே வாழ்வல்ல பெரும்
வெற்றியும் அதற்குள் இருப்பதை
கடலைப் போல் அமைதியாய் மட்டுமல்ல
அலைகளைப் போல எதிர்நீச்சல் போட
நிமிர்ந்து நடக்கவும் சமுதாயத்தில்
தளர்ந்தவர்களைத் தலை நிமிரச் செய்யவும்
விளம்பரப் பொருளும் அல்ல - பெண்
விற்பனைப் பொருளும் அல்ல - இவள்
இமயம் போல உயர வேண்டியவள்
என்பதையும் கற்றுக் கொண்டேன்
கற்றது கையளவு
கல்லாதது உலகளவு - நான்
அறியாததை எனக்குக் கற்றுத் தாருங்கள்
அநேகரின் அணைந்த விளக்குகளை
ஒளிரச் செய்வது என் கனவு.

உங்கள் சகோதரி, எம்.திரவியராணி.
(10.10.2004 அன்று நடைபெற்ற மாதர் தகைமைப்படுத்தல் பயிற்சியில் கலந்து கொண்ட பயிலுநர் ஒருவரின் உணர்ச்சிக் கவிதை)

## கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

நாங்கள் யார்?
பார் ஈழப் பெண்கள்!
பெண்கள் யார்?
அவர்கள் நாட்டின்கண்கள்
அடுப்பூதும் பெண்ணுக்கும்
படிப்பும் வரும்
படிப்பில் உயர்ந்தோம்
பட்டமும் பெற்றோம்
சோதனை அடைந்தோம்
தடைகளை உடைத்தோம்
சாதனை படைத்தோம்
சாதித்தும் வருகிறோம்
குழுவாய் இணைந்தோம்
கூடி உழைத்தோம்
கூட்டு முயற்சியில்
வெற்றியும் கண்டோம்.

ஜோசப்பின்,
பத்மாவதி- புதுப்பட்டி.

## "ஈழ சுதந்திரன்" கட்டண விவரம்

| ஆண்டுச் சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|
| இந்தியாவில் ரூ.60/- | இந்தியாவில் ரூ.500/- |
| பிற நாடுகளில் US $10 | பிற நாடுகளில் US $80 |

தனி இதழ்

| | |
|---|---|
| இந்தியாவில் ரூ.5/- | பிற நாடுகளில் US $1. |

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேகரித்து அனுப்பவிரும்புவோர் தொடர்புகொள்ளலாம். அவர்களுக்கு கணிசமான கழிவு தரப்படும்.

தொடர்புக்கு:- நிர்வாகி 'ஈழ சுதந்திரன்'
எண் : 31(இரண்டாம்மாடி)
சேட்குடியிருப்பு முதல் தெரு,
எழும்பூர், சென்னை - 600 008.

# அன்று இலங்கை மலையகத் தமிழர்களுக்கு தந்தை செல்வா குரல்கொடுத்தார்

# இன்று மைந்தர் சந்திரகாசன் ஐயா அவர்கள் தோள் கொடுக்கிறார்

## இந்திய வம்சாவளி மக்களின் இதய நன்றி!

ஈழத்தின் யாழ் மண்ணிலே பிறந்து ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் பண்ணிணாலும் இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழர் களுக்காக-எங்களுக்காக என்றும் குரல் கொடுத்துவரும் குடும்பம் தந்தை செல்வாவின் குடும்பம்.

அங்கு எங்கள் வாக் குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்டபோது அதை ஆதரித்திருந்தால், ஜி.ஜி.பொன் னம்பலத்தாரோடு சேர்ந்து அமைச்சராகும் வாய்ப் பிருந்தும், அதை உதறித் தள்ளிவிட்டு நாடாளுமன்றத்தில் எங்களுக்காக போராடியவர் தந்தை செல்வா.

அங்கு எங்களுக்காக அவர் இலங்கை நாடாளுமன் றத்தில் ஆற்றிய உரையை இளைய தலைமுறையைச் சேர்ந்த நான் “செல்வாவின் எழுச்சி உரைகள்” என்ற நூலிலே படித்துவிட்டு ஆனந் தக்கண்ணீர் சிந்தினேன்.

அதேபோன்று அவர் களின் மைந்தராகிய திரு.சா. செ.சந்திரகாசன் ஐயா அவர்களே நீங்கள் எங்களுக் காக இன்று இலங்கை அரசுக்கு எழுதியிருக்கும் கடிதத்தைப் படித்துவிட்டு கண்கலங்கினேன்.

இலங்கையில் எத்தனை இனக்கலவரங்கள் ஏற்பட்டாலும் இன்னும் எங்களை இந்தியாக் காரன், வடக்கத்தியான் என்று பிரித்துப்பேசும் கொடுமை ஓய்வதாகத் தெரியவில்லை. அப்படியிருக்கையில் அதே மண்ணில் பிறந்த நீங்கள் எங்களுக்காக முன்வந்து குரல் கொடுப்பதை எப்படிப் பாராட்டு வதென்றே தெரியவில்லை. உங்களை எங்களது மக்கள் சார்பில் பாராட்டுகின்றேன். வாழ்த்த வயதில்லை வணங்குகிறேன்.

‘இந்தியக்காரன்’ என்று பிரித்துச் சொல்வதில் அவர் களுக்கு என்ன மகிழ்ச்சி இருக்கிறது என்றே தெரிய வில்லை. எங்கள் நிலையைப் பாருங்கள். அங்கே எங்களுக்கு ‘இந்தியாக்காரன்’ என்ற இழிவு நவிற்சி! இங்கு ‘சிலோன்காரன்’ என்ற இழிவு நவிற்சி. உயர்வு நவிற்சிக்கே நாங்கள் உரியவர் கள் இல்லையா?

எங்கள் மூதாதையர் இந்திய மண்ணிலிருந்து 1825ஆம் ஆண்டுகளில் கூலியாளாக இலங்கைக்குக் கூட்டிபோகப்பட்டதாக அறிகிறேன். அன்றிலிருந்து இன்றுவரை எங்களுக்கு இதே நிலைதானா?

அங்கு நாடற்ற நிலை யிலிருந்தபோது இங்கு அகதிகளாக திரும்பினோம். ஏனைய ஈழத்தமிழ் மக்களோடு ஒரே முகாம்களில் வதிந்தோம். அதனால் எங்கள் வருங்கால சந்ததியினரின் கல்வி நிலை கொஞ்சம் மாறியிருக்கிறது. அதற்கும் தங்களால் நிறுவப் பட்ட ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்குத்தான் நன்றி சொல்லவேண்டும்.

அந்தக் கல்வி வசதிகளை வழங்கியது இந்திய மத்திய மாநில அரசுகள்தான் என்றாலும், அவற்றை எங்கள் சமுதாயம் பெற்றுப்பயன்பெற வழிகாட்டியது நீங்கள் தான். அதன் பெறுபேறாகத்தான் இன்று இந்த அகதி வாழ்க்கையிலும் எங்கள் மாணவர்கள் மத்தியிலும் பட்டதாரிகளை பார்க்கிறோம்.

ஒருவேளை நாங்கள எல்லாம் அகதிகளாக வராமலிருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கும் என்று சொல்ல முடியாது.

இன்று எங்கள் சமுதாய் த்திலும் படிப்பாளிகளை உருவாக்கியதுடன் இலங்கையில் எங்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்க ஏற்பாடு செய்து வரும் திரு. சந்திரகாசன் ஐயா அவர்களே அதற்காக நன்றிப் பெருக்குடன் உங்களை வணங்கிக் கொள்கிறோம்.

ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக்கழகம் மற்றும் ஜே.ஆர்.எஸ். நிறுவனம் ஆகியவற்றுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் மக்கள் சார்பிலும், மாணவர் கள் சார்பிலும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித் துக் கொள்கிறோம்.

-த.குணரட்ணம்,
இ.அ.முகாம். குறிஞ்சிபாடி.

## வாசகர் நெஞ்சம்

இந்தியாவில் அகதி களாக உள்ள இலங்கை மலையகத் தமிழர்களுக்கும் அந்நாட்டின் குடியுரிமை கிடைக்க, ஐயா சந்திரகாசன் அவர்கள் எடுத்து வரும் முயற்சிகளை அவருடைய பி.பி.சி. பேட்டி மூலம் அறிந் தோம். அப்பேட்டியை ஈழ சுதந்திரனிலும் வெளியிட்டது சிறப்பாகும்.

-பி.ருக்மாங்கதன்,
சென்னை-01.

இலங்கை இந்திய வம்சாவளி மக்கள் இன்று இந்தியாவில் அகதிகளாக உள்ளவர்களுக்கும் இலங் கைக் குடியுரிமை கிடைத் திட செல்வாவின் மைந்தர் சந்திரகாசன் மேற்கொண் டுள்ள முயற்சி பற்றி ஈழ சுதந்திரனில் படித்துத் தெரிந்துகொண்டோம். பி.பி.சி.பேட்டியைக் கேட்க முடியாத எம் போன்றவர் களுக்காக ஈழ சுதந்திரனில் பிரசுரித்திருந்தது நல்வாய்ப் பாக இருந்தது பாராட்டு கின்றோம்.

எம்.திருஞானம்,
ஏ.பி.குமார்,
குன்டல்பட்டி.

“சிங்களப் பேரின வாத ஆசையைத் தமிழர் களே நிறைவேற்றுவதா?” என்ற தலைப்பிலான ஈழத்தமிழர் பாதுகாப் புக்கழக அறிக்கையை முதல் பக்கத்தில் வெளியிட்டி ருந்தீர்கள். புலிகளின் போக்கைப் பார்த்தால் அந்த ஆசையை நிறைவேற்றுவ தாகத்தான் தெரிகிறது.

சி. மகேந்திரராஜா,
புதுக்கோட்டை

“புலிகளும் ஏனையத் தமிழ் இயக்கங் களும் தங்கள் சுயநல சுயலாப மோதல்கள் நிமித்தம் சொந்த மக் களையே கொன்று குவித்து, இனத்தை அழிப்பதன் மூலம் இனச்சிக்கல்களுக்குத் தீர்வு காண முற்பட்டுள்ளார் களா?” என்று முதல் பக்க அறிக்கையில் கேள்வி கேட்கப்பட்டுள்ளது. வேறு எந்த இயக்கம் புலிகளைப் போல் தமிழர்களைக் கொலை செய்கிறது? கருணாவைக் கூறலாம்; அவரும் புலிகளிலிருந்து வந்தவர் தானே? முகாந்திரம் இல்லாமல் மற்ற இயக்கங்களை இழுக்கக் கூடாது.

ஆ. விநாயகமூர்த்தி,
திருச்சி-04.

எப்போதுதான் தீர்வு? என்ற தலைப்பிலான ஆசிரியர் உரை அருமை. போர்நிறுத்தம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தளவில் பூரணப்படுத்தப்பெறாத ஒன்றாகவே இருக்கிறது என்ற சொற்றொடர் நூற்றுக்கு நூறு உண்மை.

கே.கே. ஏசுவடியான்.
தூத்துக்குடி 08.

ஒரு குறளை உணர்வோம் பகுதியில் திருக்குறளின் காமத்துப்பால் கற்பியல் தனிப்படர் மிகுதி என்ற அதிகாரத்தில் வரும் ஒரு குறளுக்கு முற்றிலும் புதிதாக இதுவரை யாரும் கூறாத பொருளை அருகோ கூறியிருக்கிறார். இப்படியும் பொருள் கூற முடியும் என்று தன் நுட்பத்திறனைக் காட்டி யுள்ள அவரை எவ்வளவு பாராட்டினும் தகும்.

அழகிய சிங்கக் கவிராயர்,
சிவகிரி.

ஈழ எதிலியர் மறு வாழ்வுக்கழகச் செயலாளர் செல்வி சூரியகுமாரி அவர் களுக்கு 50 வயதாகிவிட்டது என்பதை நம்ப முடிய வில்லை. அவர்களுடைய பொன் விழாவையொட்டி கழகத் தொண்டர்கள் படித்தளித்த வாழ்த்துப் பாமாலை வெகு சிறப்பு. ஈழ சுதந்திரன் அவர்களுடைய படத்துடன் அதை வெளியிட்ட விதம் அதைவிடச் சிறப்பு.

கு. இக்பால்,
சென்னை 26.

கல்லூரிக் கல்வியும் அகதி மாணவர்களும் என்றத் தலைப்பில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகக் கல்விக் குழுக் கூட்ட அறிக்கையினை வெளியிட்டிருந்தீர்கள். ஆனால், தமிழக அரசு இம்முறை வழக்கம்போல் வழங்கிவந்த அனுமதிகளை வழங்காமல் கடைசி நேரத்தில் கைவிரித்து விட்டதாமே? போயும் போயும் அகதி மாணவர்களின் எதிர் காலத்திலா இப்படி?.

திருவள்ளூர் பச்சையப்பன்,
மணவாள நகர்.

ஈழ சுதந்திரனில் மாணவர் பகுதி, அறிவியல் பகுதி, மகளிர் பகுதி ஆகியவை சிறப்பாக உள்ளன. கவிதைகளும் உணர்ச்சியைத் தூண்டு பவைகளாக உள்ளன.

பெ. மாணிக்கவேலன்,
செங்கல்பட்டு.

தீவிபத்தில் சிக்கி அநியாயமாக மறைந்த கவிஞர் சிலோன் விஜயேந் திரனைப் பற்றி ஈழசுதந்திரனில் எழுதியிருந்தது நெஞ்சைத் தொட்டது. ‘அகதியாக் கப்பட்டவன்’ முகத்தார் ஏசுரட்ணம் அவர்களின் கட்டுரை அந்தக் காலத்திற்கே கூட்டிச்சென்றது.

வி.கனகேந்திரன்,
திருச்சி 08.

இன்று புலிகளைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் ‘ஈரோஸ்’ பாலகுமார் நோர்வே சென்றபோது அங்குள்ள தமிழர்கள் வெளியிட்டிருந்த துண்டுபிரசுரத்தை அப்படியே வெளியிட்டிருந்தீர்கள். அதன் மூலம் சிலர் சொல் வதைப்போல் புலம்பெயர்ந்த தமிழர்கள் எல்லோருமே புலிகளை ஆதரிப் பவர்களல்லர் என்பதைப் புரிந்துகொண்டேன். இப்படி வெளிநாட்டுத் தமிழர்களின் வெளிப்பாடுகளை அடிக்கடி வெளியிடுங்கள்.

வி.எஸ். சிறிஸ்கந்தராஜா.
சென்னை 108.

## தகைமையைத் தேடிடும் தையலர் கூட்டம்




திருச்சி மண்டல ஈ.ஏ.ம.க. திருச்சி மண்டலப் பணிமனயில் 10.10.04 அன்று நிறைவடைந்த 3 நாள் மாதர் தகைமைப்படுத்தல் ஆற்றலூட்டல் பயிற்சி முகாமில் பல்வேறு முகாம்களிலிருந்து வந்த பெண்கள் பயனடைந்தனர். என்றுமில்லாவகையில் பெண்கள் தங்களைத் தகைமைப்படுத்திக்கொள்ள தாங்களாகவே முனைந்திருப்பது சிறப்பம்சமாகும். இதில் பெண்கள் தங்களை தாங்களாகவே புரிந்துகொள்ளவும் தம் பங்கு சமூகத்தில் என்ன என்பதையும் தாங்கள் புரிந்தகொண்டனர்.

தங்களது கருத்தாக இவ்வாற்றலூட்டல் பயிற்சியை இதுவரை அறியாதது வேதனைக்குரியது என்றனர். இனிவரும் காலங்களில் தாம் பெற்றப் பயிற்சினைக் கொண்டு மற்றவர்களையும் தகைமைப்படுத்துவதுடன் தாங்களும் முன்மாதிரியாக நடப்போம் என உறுதி கொண்டனர். பெண்கள் நாட்டின் கண்கள் என்ற வாக்கியத்திற்கு இணங்க முகாம் பெண்கள் அனைவரும் தங்களது தகைமைகளை உயர்த்திக்கொள்ள வேண்டுமென அன்பான வேண்டுகோளையும் விட்டனர். இதுபோல் இனிவரும் காலங்களிலும் எமக்கு மேன்மேலும் பயிற்சியினைத் தந்திட கழகம் உதவிட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

### புதிய புதினாசட்னி!

புதினா சட்னிக்கு அரைக்கும் போது கொஞ்சம் வேர்க்கடலையும் சேர்த்துச் செய்தால் ருசி கூடும். சத்து நிறைந்தது. புதினாவும் வேர்க்கடலையும் மிக எளிதாக கிடைப்பதால் தயாரிப்பது சுலபம்.

# ISGA-க்கு மாற்று நிரந்தரத் தீர்வே

(முதல் பக்க பாதுகாப்புக்கழக அறிக்கையின் தொடர்ச்சி)

மீண்டும் உறுதிப்படுத்திய குடியரசுத்தலைவர் சந்திரிகா, ஜே.வி.பி.க்குப் பதிலடியாகக் கூட்டணித் தலைவர் பதவியை ராஜிநாமா செய்து, "பேச்சு வார்த்தை மூலம் தீர்வு" என்பதில் தமக்கு இருக்கும் பிடிப்பை வெளிப்படுத்தினார்.

இதனால் ஜே.வி.பி. தன்னுடைய நிபந்தனையை வலியுறுத்தாமல் விட்டுவிட்டது.

அதேநேரம் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு என்பதில் தனது நம்பிக்கையை வெளிப்படுத்திய குடியரசுத் தலைவர் சந்திரிகா, அப்பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான அரசின் திட்டத்தை- தமிழ் பேசும் மக்களுக்கு இன்ன இன்ன உரிமைகளை வழங்கத் தயார் என்கிற வரைவினை அறிவிக்க முன்வரவில்லை.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான பேச்சு வார்த்தையில் இஸ்ரேல் அரசாங்கமும் சரி; அயர்லாந்து விடுதலைப் படையுடனான பேச்சு வார்த்தையில் பிரித்தானிய அரசும் சரி; பிரச்சினைக்குத் தீர்வாகத் தாங்கள் தரவுள்ளதை முன்கூட்டியே அறிவித்துத்தான் ஆயுதப் போரில் ஈடுபட்டிருந்த அவ்வியக்கங்களைப் பேச்சு வார்த்தை அரங்கத்திற்கு அழைத்து வந்தன என்பதை மறந்து விடுவதற்கில்லை. (வழங்கச் சம்மதித்ததை நடைமுறையில் வழங்காததால்தான் அங்கு சமாதானம் இன்னும் கைகூடவில்லை என்பது வேறு விடயம்).

அதுபோல சிறீலங்கா அரசில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியாயினும் சந்திரிகா கட்சி ஆட்சியாயினும் தமிழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வாகத் தங்கள் தரப்பிலிருந்து எந்தத் திட்டத்தையும் இதுவரை தெளிவாக முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி.சந்திரிகாவின் முதலாவது ஆட்சிக்காலத்தில் 'தீர்வுப்பொதி' எனும் பெயரால் அவர் ஒரு தீர்வு திட்டத்தை அறிவித்தார் என்பது உண்மை. எனினும் அது பேச்சுவார்த்தை முறிந்து, மீண்டும் போர் தொடங்கிய பிறகும், நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சி அதை ஆதரிக்கத் தயாராக இல்லாத நிலையிலும் தான் அறிவிக்கப்பட்டதேயன்றி முன்கூட்டியே பேச்சு வார்த்தை மேசையில் அது முன்வைக்கப்படவில்லை.

அது மட்டுமின்றி, அன்றையப் பேச்சுவார்த்தை தொடங்கப்படுவதற்கு முன் "தனிநாடு ஒன்றைத் தவிர, இந்தியாவில் தமிழர்களுக்கு உள்ள உரிமைகளை விடவும் அதிக உமைகளை இலங்கைத் தமிழர்களுக்கு நான் வழங்குவேன்" என அறிவித்து, சந்திரிகா தமிழ் மக்களிடம் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டு, அப்புறம் அதுபோல நடந்து கொள்ளாததே அன்றைக்கு அவல முடிவை உண்டாக்கியது.

இன்றைக்கு அப்படிக்கின்றி, தமிழ் பேசும் மக்கள் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக சிறீலங்கா அரசு ஒரு நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை முன் வைக்க முன்வருமானால், புலிகளின் இடைக்கால அதிகார சபைத் திட்டம் தானாகவே அர்த்தமற்ற தாகப் போய்விடும்.

நிரந்தரமான தீர்வா? இடைக்கால அதிகார சபையா? என்ற கேள்வி எழுமானால், சாதகமான (பாதகமில்லாத) நிரந்தரத் தீர்வை அரசாங்கம் அறிவிக்குமானால், நிரந்தரத் தீர்வுக்குத்தான் தமிழ் மக்கள் இணக்கம் தெரிவிப்பார்களேயன்றி, புலிகளின் இடைக்கால அதிகாரசபையை ஆதரிக்க முன்வர மாட்டார்கள்.

அப்படி அரசாங்கம் எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் முன் வைக்காதபோது, புலிகள் இடைக்கால அதிகாரசபை (ISGA) திட்டத்தை முன் வைப்பதிலும், அதைத் தமிழ் மக்கள் ஆதரிப்பதிலும் நியாயம் இல்லை என்று சொல்ல முடியாது. ஆமாம். எதை நம்பித் தமிழ் மக்கள் புலிகளின் இடைக்கால அதிகாரசபைத் திட்டத்தை நிராகரிக்க முடியும்?

ஒன்றும் இல்லாத போது இதையாவது எடுப்போம் என்று புலிகளின் திட்டத்திற்குத் தமிழ் மக்கள் ஆதரவளிப்பதைக் குறை சொல்லவும் முடியாது.

புலிகள்தான் ஈழத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியா? என்றால், இல்லை. அதனால்தான் இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிமக்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடி 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் திகதி "நல்லாயன் பிரகடனத்தை" வெளியிட்டனர். அப்பிரகடனம் இந்தியாவில் உள்ள இலங்கை அகதி மக்களின் தீர்மானம் என்றாலும், இன்று உலகம் முழுவதிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் எல்லோரினது குரலுமாகும். உள்நாட்டில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் குரலும் அதுதான் என்றாலும் மிகையாகாது.

ஆம், 1983 ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாத சிறீலங்கா அரசாங்கமே திட்டமிட்டு நடத்திய தமிழினப் படுகொலையின் விளைவாகவும், அதைத் தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போரினாலுமே அம்மக்கள் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தனர். இலங்கைக்குள்ளும் இடம் பெயர்ந்தனர். அதன் காரணமாகத்தான் பல்வேறு உலக நாடுகளும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தன. ஆதரவாகக் குரல் கொடுக்கின்றன.

எனவே இப்பிரச்சினையால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட அம்மக்களின் இதயப் பிரதிபலிப்பாகவே நல்லாயன் பிரகடனம் திகழ்கிறது என்று சொல்லலாம். அவர்களின் பொருட்டே உலக நாடுகள் இப்பிரச்சினையில் கரிசனை காட்டுகிற காரணத்தால், அது சர்வதேச சமுதாயத்தின் ஆதரவுக்குரியதுமாகும்.

அந்த நல்லாயன் பிரகடனம் தெளிவாகச் சொல்கிறது "இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களும் பங்கு கொள்ளத்தக்கதாகவே எந்தவொரு சமாதானப் பேச்சு வார்த்தையும் அமைய வேண்டும்." என்று,

அதை மனதில் கொண்டு, அரசாங்கமானது தனது நிரந்தரமான தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமானால், அனைத்துத் தரப்புப்புத் தமிழ் மக்களும் பேச்சுவார்த்தைக்கு உடனடியாக முன்வருவார்கள், புலிகளும் முன்வந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், சிறீலங்கா அரசாங்கம் எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் அறிவிக்காமல், தமிழ் மக்களுக்கு எதையும் தர முன்வராமல், புலிகளை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருப்பது நியாயமல்ல.

ஏற்கெனவே இந்தியா தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிற இலங்கையின் வடக்கு கிழக்கை ஒருங்கிணைத்து தமிழருக்கான ஒரு மாநில அரசை ஏற்படுத்தி, வழிகாட்டியுள்ளது. அதை முன்மாதிரியாகக் கொண்டு மேலும் தமிழ் மக்களுக்குத் தன்னாட்சி உரிமைகள் வழங்கும் திட்டம் அரசினால் முன் வைக்கப்படுமானால் தான் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு சாத்தியம் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு ஏற்பட முடியும். அந்த நம்பிக்கை ஏற்படாமல் அகதிகள் நாடு திரும்புகிற சூழ்நிலையும் உருவாக முடியாது.

உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்களே தம் சொந்த வீடுகளுக்குத் திரும்பமுடியாமல் அகதிகளாக முகாம்களில் வாழும் நிலையில், அயல் நாடுகளுக்கு அகதிகளாகச் சென்ற மக்கள் எப்படித் திரும்ப முடியும்? எதை நம்பித்திரும்ப முடியும்? சிங்கள மக்களுக்குள்ள உரிமை வாழ்வும், உயிர் உடைமைகளுக்கான பாதுகாப்பும் தங்களுக்கும் கிடைக்கும் என்ற உத்தரவாதம் ஏற்படுமானால்தான் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் நம்பிக்கையுடன் நாடு திரும்புவார்கள்.

ஆகவே, தற்போது திருமதி சந்திரிகா தலைமையில் இருக்கும் சிறீலங்கா அரசாங்கம், ஒத்துழைப்புத் தருவதாகச் சொல்லும் முன்னாள் பிரதமர் ரணிலின் உதவியுடன் தமிழ் மக்கள் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை விரைந்து அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அதற்கான நிர்ப்பந்தத்தை இந்தியாவும், உலக நாடுகளும் ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

# சர்வதேச சமுதாயத்தை நம்பக் கூடாதா?

(10ம்பக்கத் தொடர்ச்சி)

ஒரு பக்கத்தில் இராணுவத்தைத் திரட்டிக் கொண்டு, போரை நடத்தப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்தப் போனால், பேச்சுவார்த்தையும் முன்னேறாது. சிங்களவர்களை நம்பமுடியாதுதான். அது தப்புக் கணக்கல்ல. சிங்களவர்கள் சொன்னதைச் செய்யவில்லை என்று சொல்வது சரி. ஆனால் இன்றைக்கு சர்வதேச சமுதாயம் ஒரு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. சில நேரங்களிலே அதைத் தான் நம்ப வேண்டும். இந்தியா தலையிட்டது. இந்தியாவை நம்பி நாங்கள் அதிலே இறங்கியிருக்கலாம். சிலர் நம்பி இறங்கியவர்கள் அங்கு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆட்சி நடந்தது. அதையும் கவிழ்த்து விட்டனர் இன்றைக்கு சர்வதேச சமுதாயம் சொல்லுகிறது பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லுகின்ற பொறுப்பை நாங்கள் எடுக்கின்றோம். சிங்களவர்கள் குழப்பாமல் கொடுத்த வாக்குறுதியை மீறாமல் செய்வதற்கு சர்வதேச சமுதாயம் வாக்குறுதியளிக்கத் தயாராக இருக்கிறது. இதை நம்பி அதை முன்னெடுத்துச் செல்வதா? இல்லையா? என்பது தான் இன்றைக்கு முக்கியமானதாகும்.

அதே நேரத்தில் போருக்குத் தயாராகிக் கொண்டு இருந்தால் நிச்சயமாக ஒரு சமாதான முயற்சியிலே முன்னேற்றம் காண்பது கஷ்டமாக இருக்கும். இந்தப் பின்னணியில் தான் ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழக ஆண்டுப் பொதுக் கூட்டம் நடக்கிறது. எங்களுடைய பணிகளிலே ஒரு முக்கியமான பணி இருக்கிறது. மனித உரிமை மீறல்களைப் பற்றி- யார் செய்தார் என்பது பற்றி எங்களுக்கு முக்கியமல்ல. எந்த உயிரும் பாதுகாக்கப்பட வேண்டும். அதை நாங்கள் வெளிப்படுத்த வேண்டும். அப்படி வெளிப்படுத்துவதன் மூலம் அது நிற்குமேயானால் நிச்சயமாக அமைதிக்கு ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

எந்தக் குழந்தையும் விருப்பத்திற்கு மாறாகக் கடத்தப்பட்டால் அது குற்றம். விருப்பமாக இருந்தாலும் குழந்தையைப் பொறுத்த வரையில் இராணுவத்தில் சேர்க்கக்கூடாது. ஒரு சில காலகட்டத்திலே இயக்கங்களோடு பேசி பதினெட்டு வயதிற்கு குறைந்தவர்களை சேர்க்கக் கூடாது என்று முடிவானது. அப்போது பலவீனமாக இருந்த போது ஒத்துக் கொண்டார் கள். வாக்குறுதியும் கொடுத்தார்கள். பிறகு பதினாறாகக் குறைத்தார்கள். பின்னர் குழந்தைப் பிள்ளைகளேயே சேர்க்கிறார்கள். இது சமுதாயத்திற்கு நல்லதல்ல.

குறைந்த வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்தவர்களுடைய எதிர்காலம் ஒரு பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? விரக்தியோடு இருப்பார்கள். மற்றவர்களெல்லாம் படித்து மேலே வந்துவிட்டனர். நான் மட்டும் படிக்காமல் போராட்டத்தில் இருந்தேன் என்று பாரீஸில் நடந்த ஒரு மாநாட்டில் சொன்னார்கள். நாங்களெல்லாம் படிப்பை விட்டு விட்டு இப்படி இருக்கிறோம். நீங்களெல்லாம் படித்தவர்கள் இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று விரக்தியாகப் பேசினார்கள். அது உண்மை. அவர்கள் அப்படி உணர்கின்றார்கள். ஆனால் அதைத் தொடர வேண்டுமா? வருங்காலச் சந்ததியும் அப்படியே போக வேண்டுமா?

ஒவ்வொரு குழந்தையையும் பள்ளியில் இருந்து நிறுத்தி நீங்கள் வெளியே எடுத்துக் கொண்டுபோய் இயக்கத்திலே இந்தக் கால கட்டத்திலே சேர்த்தால் நாளைக்குச் சமாதானம் ஏற்படும் போது அந்தக் குழந்தைகளுடைய எதிர்காலம் சூனியமாகிவிடும். எனவே இவற்றை வெளியே கொண்டு வரும் பொறுப்பினை ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் எடுக்க வேண்டியது இருக்கிறது. அதை நாங்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இந்த மனித உரிமை மீறல்களை வெளியிலே கொண்டு வர வேண்டும். ஒரு பொதுவான செய்தியை- இரண்டு பக்கச் செய்திகளையும் பெறக்கூடிய ஒரு இணைய தளத்தை ஏற்படுத்த வேண்டும். அது போன்ற பணிகளையும் நாங்கள் செய்யவேண்டும். இனி அவையெல்லாம் இணைய தளத்திலே வர வேண்டும். மாற்றுச் செய்திகளை, மாற்றுக் கருத்துக்களையும் எல்லாச் செய்திகளையும் மக்கள் பெறக் கூடியதான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். இப்படியான பல பணிகளைச் செய்யக் கூடிய இந்த நிலையில் தான் ஈழத்தமிழர் பாதகாப்புக் கழகத்தினுடைய கூட்டம் கூடுகின்றது. இந்த செய்திகளை உங்களுக்குப் பரிமாறும் போது இது ஒரு எதிர் நீச்சலுக்கு உரிய நேரம் என்பதையும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி விடை பெற்றுக் கொள்கின்றேன்.

இவ்வாறு தனது தலைமையுரையில் திரு. சந்திரகாசன் அவர்கள் கூறினார்.

Edited, Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, APT.F-17 5th Floor, P.A. Towers, 33, Halls Road, Egmore, Chennai - 8.
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai - 94.